# தமிழருள் மறைந்த அரசகுலம்



ஏ. ஈ. சீ. இராசரெத்தினம்

K. Arulnathan

தமிழருள் மறைந்த

அரசகுலம்

# சரித்திர ஆராய்ச்சி நூல்

ஆசிரியர்:
கொடித்தோர் இராசரெத்தினம்

★

# THE DESCENDANTS OF THE EARLY DRAVADIAN KINGS.

KODITHORE RAJARATNAM.

பதிப்புரிமை வாய்த்தது.

என் அருமைத் தந்தையார்
றெயில்வே இன்ஸ்பெக்ரர்

**திரு. எஸ். எஸ். கொடிதோர்**

அவர்களின்

**அன்பார்ந்த நினைவுக்கு.**

# இறை வணக்கம்

சீர்மலி செகத்தினுட் செறிந்து தான் அடங்கியும்
ஏர்மலி இகமதைத் தன்னுள்ளே அடக்கியும்
ஆர்புக ழொடு திகழ் அடி, நடு, முடிவிலாப்
பேர் ஒளி இறைவ நின் பெருந்துணை காப்பதாம்

★ ★ ★

பண்டை நாகரிகம், செல்வம், பண்பாடு ஒழுக்கம்
நீதி
பயில்கல்வி, கலை, கலாச்சாரம், வீரம், கற்பு, காதல்
என்றின்ன தமிழர் சால்புச் சாகரம் தரும் முத்துக்
களும் சரித் திரச் சுரங்கத் தின் சான்றும்
இரத்தினங்கள்
கண்டெடுத்துத் தான் "தமிழருள் மறைந்த
அரசகுலம்'
காட்டவுரு வாக்குமிந் நூல் கலங்கரை விளக்கமாக
நின்றிலங்க! தமிழினத்தின் நிலைநீணி லத்துயர
நிறை வான தமிழ்ப் பற்றை நெஞ்சத்தில்
வளர் இறைவா

"வன்னியூர்க் கவிராயர்"

"ஆராய்ச்சியாளர்களின் நோக்கம் உண்மையைக் கண்டு பிடிப்பது, உண்மையைப் புலப்படுத்துவது"

தனிநாயக அடிகள்

நான்காவது உலகத் தமிழ்
ஆராய்ச்சி மகாநாட்டில்

★ ★ ★

எமது அட்டைப் படத்தை மிக அழகாக
வரைந்து அன்பளிப்பு செய்தமைக்கு
பிரசித்த ஓவியரான
**K. S. சுந்தரம் (கல்முனை 3)**
அவர்களுக்கு எமது நன்றியைத்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

# முன்னுரை

தமிழ் நாட்டில் எழுச்சியடைந்து வரும் சமுதாயங்களில் நாடார் சமுதாயம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சரித்திர ஆசிரியன் என்ற முறையில் தமிழர்களைப்பற்றிய சிறந்த ஆராய்ச்சி நூலை வெளியிட விரும்பினேன். அதன் பலாபலனே இந்நூலாகும். இது ஒரு இனத்தின் சரித்திர நூலன்றி சாதி நூலல்ல. நாடார் குலத்தவரின் சிலர் சங்க காலப் பாண்டியர் நாடார்கள் என வாதாடுகின்றனர். அதற்கு என்னிடம் சரித்திர ஆதாரங்கள் இல்லை. அதனால் அப்படிக் கூறமுடியவில்லை. சரித்திர ஆசிரியன் என்ற முறையில், வரலாறுகளை சரித்திர ஆதாரங்களுடன் விளக்க விரும்புகிறேனே ஒழிய ஆதாரமற்ற வாதாட்டங்களுக்கு இந் நூலில் இடம் கொடுக்க விரும்பவில்லை.

இந்நூலை எழுதுவதின் முக்கிய நோக்கம் நாடார் குலத்தவர் தமது பழைமையான உயர்நிலையை அறிந்து, தமிழர்களின் எழுச்சிக்கும், புகழுக்கும் முயற்சி செய்வதேயாகும். தமிழ் அரசகுலத்தவர்களாக ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்தால், தங்களை உயர்தவர்களாக எண்ணுது சாதி, குல பேதங்கள் மறந்து, அறநெறியில் வாழ்வோரின் சமத்துவத்திற்காக போராட வேண்டும்.

தமிழ் நாட்டில் சேர, சோழ, பாண்டி மன்னர்கள் அரசுசெய்தனர். இம்மன்னர்கள் சாம்ராய்ச்சியங்கள் பல அமைத்து அரசுசெய்தனர். கி. பி. 14-ம் நூற்ருண்டில் (1300-1400) இம்மன்னர் விஜயநகர அரசர்களால் அடக்கப்பட்டனர். அன்று தொட்டு

சேர, சோழர், பாண்டியர் குலம் பலயீனமுற்றது வெற்றிக்கொடி நாட்டிய விஜயநகர மன்னர்கள் போரில் தோல்வியடைந்த தமிழ் அரசர்களை எவ்விதம் நசுக்கினர்? சூரியகுல போர்வீரர்களின் கதியென்ன? விஜயநகர மன்னர்களால் கொடூரமாகத் தாக்கப் பட்டு போர் அடிமைகளாக்கப்பட்ட சான்றோர்கள் (சூரிய குலத்தவர்) எப்பகுதியில் சென்று மறைந்து வாழ்ந்தனர்! விஜயநகர வேந்தர்களின் மாகாண ஆட்சியாளர்களாகிய நாயக்கர், தமிழ்நாட்டில் போர் அடிமைகளென எவ்வினத்தைக் கொடூரமாக பரிதா பத்திற்குரிய முறையில் வதைத்தனர்? சான்றோன்' சான்றான், நாடன், நாடான், நாடாள்வார், தலையன், சாணான் (Sannas), கிராமணி என்ற பட்டங்கள் திராவிட அரசர்கள் மத்தியிலும், நாடார்கள் மத் தியிலும் காணப்படுவதின் மர்மமென்ன? இவ்வினாக் களுக்கு விடையளிக்கும் பொழுது நாடார்குலத்த வரின் வரலாறே நினைவுக்கு வரும்.

நாடார்கள் திராவிடருக்குள் ஒரு தனி இனமா கும். இனமெனக் கூறும் பொழுது தொழிலால் பேத மின்றி சரித்திர காலம் தொடங்கி ஒன்றுபட்டு வாழ்ந்த பிரிவினராகும். இச்சான்றார்கள் தமிழ், சிங்களம், கன்னடம், ஆந்திரம், சாண்டாழ், மலே யாளம், போன்ற மொழிகளைப் பேசுகின்றனர். இம் மக்கள் வியாபாரத்துடன் தொடர்புள்ள பல தொழில் களைச் செய்கின்றனர். நாடார், சான்றார், சாணார், துரவா, ஈடிகர், ஈழவர், சாண்டாழ் என வெவ்வேறு பெயர்களால் தொழிலால் பிரிந்து வாழ்கின்றனர்.

தமிழருக்குள் அரசகுலத்தவரான நாடார்களுக் கும், பிரபுக்களான வேளாளர்களுக்கும் வலங்கையர் என்ற பெயருடன் இருந்த அரசியல் தொடர்பு,

அதன் பலாபலன்கள், வலங்கையர்—இடங்கையர் அரசியல் போராட்டங்கள், என்பனவற்றை ஆராய்ந்துள்ளேன். பிரபுக்களாகிய உயர்குல வேளாளர்கள் "வேளீர்" என்ற பெயருடன் சிற்றரசர்களாகவும் அமைச்சர்களாகவும் சேர, சோழ, பாண்டியர் காலத்தில் பெருமையுடன் வாழ்ந்தனர்.

இன்னும் வன்னியர் சரித்திரம், யாழ்ப்பாண சரித்திரம், சிங்களச் சான்றுர் வரலாறு, அடங்காப்பற்று யாழ்ப்பாணத்தவருக்கும், கதம்ப குலத்தவராகிய ஈழவருக்கும் இருந்த இரத்தத் தொடர்பு என்பனவற்றை மிக நுட்பமாக ஆராய்ந்துள்ளேன் நான் ஆதாரமாக எடுத்துக்கொண்ட சரித்திர கலாநிதிகளின் சான்றுகளை ஒவ்வொரு அத்தியாயத்தின் பின்னும் கொடுத்துள்ளேன். எனது நூலுக்கு அணிந்துரை தந்து, விசேஷ ஆலோசனைகளைக் கொடுத்துதவிய வணக்கத்திற்குரிய கலாநிதிதாவீதடிகளுக்கு எனது நன்றி உரித்தாகுக. தாவீது அடிகளிடம் அணிந்துரை பெறச்சென்ற நான், அவரது அறிவு ஊற்றைக் கண்டு பிரமித்து, அவரது சீடராக வாழ்நாள் முழுவதும் இருக்க சந்தர்ப்பம் வராதோ என மனம் வெதும்பியதும் உண்டு. அவரே வேளீர் என்னும் வேளாளகுல சிற்றரசர்களைப்பற்றி பல விபரங்களைத் தந்தார்.

எனது நூலுக்கு ஏராளமாக விடயங்களைத் தந்துதவிய தமிழ் நாட்டைச் சேர்ந்த திரு. இராமசந்திரா டோகா அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். அவரது அன்பு சேவையை என்னுல் மறக்கமுடியாது. நாடார் மகாஜன சங்கம் எனக்குக் கொடுத்த உற்சாகமே இந்நூலை எழுதத் தூண்டியது

புத்தகத்தை அழகாகவும் அற்புதமாகவும் அச்சாக்கித் தந்த ஆசிரியர் திரு. V. R. டோமினிக் அவர்களுக்கும் எனது நன்றி

எனது நூலுக்கு ஆதரவு கொடுக்கும் வாசகர்கள் இதை துவேச மனப்பான்மையோடு பாராமல் தமிழ் இனத்தின் எழுச்சிக்காக உபயோகிக்குமாறு தாழ்மையோடு வேண்டிக்கொள்ளுகின்றேன்.

நாடார் அல்லது சான்றூர்கள் இறை அருளைப் பெற்று அறவழியில் நடந்து, தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் புகழுடன் பல்லாண்டு வாழ்வார்களாக.

கொடிதோர் இராசரெத்தினம்
கற்கடந்த குளம்,
முருங்கன்.
*15-6-1973*

# அணிந்துரை

"ஞான மக்களின் உயர்வே ஆசிரியர்களின் பெருமை" என அராபிய—ஹெபிரேய பழமொழி இயம்பும். இக்கூற்றுக் கிணங்க, எம் 1946—1947-ம் ஆண்டு ஞானப்புதல்வனுகிய கொடிதோர் இராஜ ரத்நம் அவர்கள் இப்பொழுது வெளிவிடும் சரித்திர மொழியியல் நூலினதுயர்வால் யாம் பெருமையுற் றனம் எனக் கருத வேண்டு மன்ருே?

*"சான்ருண்மை, சாயல், ஒழுக்கம் இவை மூன்றும்*
*வான் தோய் குடிப்பிறந்தார்க்கு அல்லது-வான்தோயும்*
*மைதவழ் வெற்ப! படாஅ பெருஞ்செல்வம்*
*எய்தியக் கண்ணும் பிறர்க்கு"*

*நாலடியார் 142.*

வெற்பனை நாடான் எனவும் அழைப்பர் தமிழ்ப் புலவர் உதாரணமாக, பழமொழி நானூற்றின் 226=2—3 இல் "பொங்கி அறைப்பாய் அருவி அணிமலை நாட" எனவும், நாலடியாரிற்ருனே அநேகந்தரங்களாக, 10, ஆவதில்

*"கொடாஅது, வைத்தீட்டினூர் இழப்பர் வான்தோய்*
*மலைநாட! உய்த்தீட்டுந் தேனீ கரி" எனவும் 290 ஆவதில்*

*"நீர்த்து அருவி தாழச உயர் சிறப்பில்*
*தண்குன்று நன்னுட!" எனவும்,*
*மறுபடியும் பழமொழி 3 ஆவதில் "விளக்கு*
*மருள்படுவதாயின், மலைநாட"*

எனவும் இக்குறிஞ்சிநில மன்னரை தொற் புலவர்கள் அழைத்தனர். இவ்விருபதங்களும், அஃதாவது "சான்ருர், நாடார்", அன்றேல் "நாடர்" என்பன

தம் குலத்துடன் இணைந்தவை எனப்போதிய வரலாற்று நியாயங்களுடனும் ஆதாரங்களுடனும் எம் புதல்வன் சாற்றுவதைக் கண்டு மிக மகிழ்ச்சியுற்றனம்.

திரிகடுகம் ஒரு சங்க நூல்: கீழ்க்கணக்குப் பதினெண்ணிலொன்றே. அஃதில் சான்றோரைச் "சான்றார்" எனவும் அழைப்ப:- 82=1 "சான்றருள் சான்றர் எனப்படுதல் எஞ்ஞான்றும்".....ஆனதினால், தம் குலத்தவர் தொல்காலத்தில், புறநானூற்றின் ஒரு செய்யுள் வியப்புடன் புகழ்ந்த வாலிபப் போர்ச் சான்றோனைக் கடுப்ப, யூத்தவீரர், வேளீர்—வேளாளருடன் சமமாக வாழ்ந்தனர் எனவும் இந்நூலாசிரியர் சாற்றுகின்றனர்.

இஃதனைத்தும் உண்மையோ என இதைப் படிக்கும் பண்டிதனே, நீ வினவுதியாயின், யான் 31-12-70 வெளியிட்ட "லீலா காதை" அன்றேல் "சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதியின் "36–39" பக்கங்களைத் திரும்பவும் உற்று நோக்குக, அஸ்ஸீரிய, எபிரேய, கல்தேய, அராபிய, சுமேரிய, சமஸ்கிருத ("விசாலம்",) மலையாள, கன்னட, தெலுங்கு, கொலமி, குவி, கோதம், துதம், துளு என்னும் மொழிகளிலும், தமிழிற்றானே குறுந்தொகை, புறநானூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு (26 தரம்,) திருக்குறள் (41 முறை,) நாலடியார் (35 முறை,) பழமொழி (19 முறை) என்னும் சங்க நூல்களிலும் இத்தொற்பதம் "சால், சால, சான்ற, சான்றவன், சான்றான், சான்றோன், சான்றாண்மை; சல்மு, சலாமு, சாலம், சலல்சு, வி-சாலம்; ஸால், ஸாலு, ஹால், (குவி) எனப்பல்விதமாக வருதலை இப்பக்கங்களில் இனிதே காண்பித்தனம். ஆனதினால் இத்தேசங்களிற் சான்றார்

பற்பலர் வாழ்ந்தனர் என்பது பெற்ரும். ஆனும் இப்பதம் கி மு. 2,000-ம் ஆண்டின் கண் யாதைக் குறித்தது? T. Burrow and M B. Emeneau, "A Dravadian Etymological Dictionary", page 160, no 2037 "சால் (சால்வ்—சான்ற்-)"=to be abundant, full, be suitable, be great, Noble, as noun, "Fullness, abundance, excellence, nobility". No 2042 "சாலியன்"-a dextrous, excellent cloth-weaver, Page 161, no 2050. "சாறு"=The abundant juice, Filling all the interstices of the plant; sap, sweetness, tastiness, honey, treacle In மலேயாளம், sap of a palm tree or Kadamba plant. இதனுற்ருன் "கடம்பு" என்பதையும் ஆராயுழி, B. E. P. 81, no 937, இதைத் தருகின்றது. கடம்பு, கடம்பம்="Anthocephalus cadamba, nauclea cadamba, Eugenia racemosa. இதிலிருந்துதான் சமஸ்கிருத "கதம்ப, கலம்ப"; பிராகிருத "கலம்ப, கயம்ப" ஆனவை உற்பத்தியாயின. ஆனதினுல் இப்பதங்களும் இவை காணப்படும் நாடுகளும் இவ்வாசிரியரின் ஆராய்ச்சிக்கு உரித்தானவை அன்ரோ? இவற்றை இவர் ஆராயுதலே உற்று நோக்குக.

மேலும் எம் அகராதியின் கண் அனேகந்தரம் "ல், ற், ன்" என்பனவற்றில் முற்றும் பதங்களேயும் "ள், ட், ண்" என்பனவற்றில் முற்றும் பதங்களேயும் முழுதாகப் பிரித்திருக்கின்றேன்; மாணவர்களின் விடுதியிலிருந்து மாணவிகள் வசிக்கும் மடங்களுக்கு எழுத்துக்கள், கடிதங்கள் எங்ஙனந் தடுக்கப்படுமோ, அங்ஙனமே "ல்" பிரிவிலிருந்து "ள்" பிரிவிற்குப் பதங்கள் வழக்கமாகப் போகா என்பதே எம் மனத்

துணிவு. ஆயினும் சுவீடின் நாட்டில் இதற்கெதிராக அனேகந்தரம் நடப்பதையும், அதன்பயனுக அந் நாட்டுக்குமரிகள் விவாகத்திற்கு முன்பே தாய்மா ராகுதலையும் செவி மடுத்தனம், 1951, 1952-ஆம் ஆண்டுகளில், மொழியியலிலும் அங்ஙனம் நடந்து வந்திற்ருே? ஆம் ஆனல் "மிகச் சொற்பமாக" என்க

பழமொழி நானூற்றின் 16-ஆம் பாவில் இதைக் காண்கின்றனம்:-

"தானும் நடவான் முடவன், பிடிப்பு ஊணி யானையோடு (போர்-) ஆடல் உறவு" (=அடைதல், approaching இஃதில் வரும் "ஊணி" எனும் பதம் உண்டி, உணு, உணவு" என்பனவற்றுடன் புணரா என்பது, வெளிப்படை. "ஊன்றி" என்ற சொல்லே தப்பித்தவறி "ஊணி" ஆயிற்றெனச் சான்ருேர் மொழிப.

அதனல் ஆராய்ந்து அறிதலே சான்ருேரின் மனப் பண்பாகுமன்ருே? "பழமொழி" 349-ம் செய் யுளில் யாம் படிக்கும் வண்ணம்,
"உழை இனியர் ஆகுவர் சான்ருேர்—விழையாதே எள்ளுவர் கீழாயவர்" 2-ம், 4-ம் அடிகள்,
யாமும் ஏனையோரை அவமதிக்குங் கீழ்மக்கள் ஆகாமல், அனைவரையும் அரவணைத்துத் தழுவி, அவர்கள் இயம்பும் பொருள்களைச் சீர்தூக்கி, ஆராய்ச்சி செய்வதே சால்புடைத்து.

"பழமொழி" 195-ம் செய்யுள் சாற்றுவதை உற்றுக் கேண்மின்:-
"நல்ல குலம் என்றும் தீயகுலம்" என்றும் சொல் அளவு அல்லால் பொருள் இல்லை—தொல்சிறப்பின்

ஒண் பொருள் ஒன்றோ? தவம், கல்வி, ஆள்வினை
என்று இவற்றான் ஆகும் குலம்.''

இம்மூன்று துறைகளிலும் தம் குலத்தவர் பல்லாயிர ஆண்டுகளாகச் சிறந்து ஓங்கி வளர்ந்து வாழ்ந்தனர் என இந்நூலாசிரியர் வரலாற்று வழியாக இந்நூலிற் காட்டுவதைப் படிப்பீராக!

''யானை எருத்தம் பொலியக் குடை நிழற் கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்-ஏனை
வினை உலப்ப வீழ்வார், தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள''. நாலடியார் 3.

இங்ஙனமே பல் நூற்றாண்டுகளாக, பாரி, பேகன் காரி, குமணன் போன்ற வேளிரைக் கடுப்ப, மைசூர், சேர, சோழ, பாண்டிய நாடுகள், துளுவ, எளுவ (=ஈழம்) பிரதேசங்கள்—இவை அனைத்திலும் ஆட்சி செய்த ''சான்றார்—நாடார்'' தற்போது அப்பூமியின் பெரும் பகுதிகளை இழந்தமைக்கு முக்கிய நியாயம், விஜயநகர மன்னரின் எழுச்சியும், பொறாமையும், பழிவாங்கும் பண்பும் என இந்நூலாசிரியர் வற்புறுத்துகின்றனர். சமஸ்கிருத பாக்களில் ஒன்று இவ்வுண்மையை இனிதே உணர்த்தவல்லதே.

"Kas$^{v}$ca eekaantam sukham upagatoo
duh$^{2}$kham eekaantatoo vaa?
Niicair gacchati upari ca
cakra neemi krame$^{3}$na"

''யாராவது எப்பொழுதுங் தொடராக இன்பசுகங்களை அனுபவித்தது உண்டோ? அன்றேல், தொடராக துக்கங்களை அனுபவித்ததுண்டோ? ஒரு சில்லில் (சுற்றி வரும்) விளிம்பு படிப்படியாக கீழே செல்லுதலும், பிற்பாடு மேலே செல்லுதலும உண்டே''.

இங்ஙனம் காலகதியில் கீழே நோக்கிச் சென்ற 'உருளை'' அன்றேல் "நேமி'' நேமிகளனைத்தையுஞ் சுழற்றும் நேமிநாதனாகிய எல்லாம் வல்ல கடவுளினால், திரும்பவும், இத்தொல் மரபினரைப் பொ'றுத்த அளவில், உயர்த்தப்பட வேண்டுமெனவும், இக்குலத்தினர் அனைவரும், பாரத நாட்டிலோ, ஈழத்திலோ, இந்நூலை வாசிக்கவேண்டுமெனவும் விரும்பி விழைந்து, ஆசித்து, இவ்வணிந்துரையை முற்றுப் படுத்துகின்றேன்.

கலாநிதி ஹயசிந்த் சிங்கராயர் தாவீதடிகளார்
திருக்குடும்ப மடப்புரோகிதர், பண்டாசரவளை,
இலங்கை.
28-5-72

# உள்ளுறை

முதலாம் இயல்:


சான்றுர் எனப்படும் வட இந்திய திராவிட சமூகத்தி னரின் ஆதி வரலாறு

(அ.) மகஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களில் திரா விடரின் வீழ்ச்சி, சான்றுர் அல்லது சூரிய குலத்தவர் சிந்து நதியிலிருந்து வெளியேறி கங்கை நதிப்பள்ளத்தாக்கிலும், ஆந்திரா, மைசூர் பகுதிகளிலும் குடியேறுதல் 01

(ஆ.) கங்கைநதியோரத்தில் மௌரிய குலத்தவரின் எழுச்சி, மௌரியர் தங்கள் செல்வாக்கை ஆந்திர, மைசூர் பகுதிகளில் பரப்புதல் 05

(இ.) சான்றுர்களுககும், மௌரிய ஆந்திர அரச குலத்தவர்களுக்கும் உள்ள தொடர்புகள் 08

(ஈ.) சான்றுர் வட இந்தியாவிலிருந்து வந்த மைக்கு ஆதாரங்கள் 11

(உ.) தமிழர்களுக்கும், சான்றுர்களுக்கும் உடல மைப்பினுலுள்ள வேற்றுமை 14


இரண்டாம் இயல்:


மைசூரில் சான்றுர் ஆட்சி

(அ.) சான்றுர் இந்தியாவின் தென் மேற்குப்பகு தியை (மைசூர்) ஆட்சிசெய்தமைக்குரிய ஆதாரங்கள். பரிப்ளஸ் மாரிஸ் ஏரித்ரே என்னும் நூல் எழுதிய ஆசிரியரின் கூற்று 18

(ஆ.) சான்றுர்களைப் பற்றி ஆங்கிலேய தமிழ் சரித்திர கலாநிதிகளின் கூற்று 18

(இ.) சான்றுர் ஆட்சிசெய்த பற்பல பாகங்கள் 19

(ஈ.) கதம்ப குலத்தவர் 19

மூன்றும் இயல்:


கன்னடத்தை ஆட்சி செய்த சான்றூரவம்சம்

(அ.) சோழர் தங்களுடைய வீழ்ச்சிக் காலத்தில் கன்னடத்தில் மறைந்து வாழ்ந்தமை. 23

(ஆ.) சமண சமயத்தைச் சார்ந்த சான்றூரவம்ச மன்னர்கள் 24

(இ.) புத்த, ஜைன சமயங்களின் எழுச்சி, வட இந்திய திராவிட மன்னர் இச்சமயங்களை ஆதரித்தமைக்குக் காரணங்கள் 24

(ஈ.) கன்னடத்தை ஆட்சி செய்த ஜைனசமயச் சான்றூர்கள். 26

(உ.) சான்றூர வம்சத்தைப் பற்றி சரித்திர ஆராச்சியாளர்களின் கூற்றுகள் 28


நான்காம் இயல்,


சோழ வம்ச நாடார்களின் வரலாறு.

(அ.) இந்தியாவில் நாடார் எனப்படும் அரசபிரிவினர் 46

(ஆ.) சான்றூர் என்னும் சொல் ஆராய்ச்சியின் விளக்கம் கலாநிதி H. S. தாவீதடிகளின் 47

(இ.) சான்றூர் சோழ நாட்டில் குடியேறுதல். 47

(ஈ.) தலையன் கானத்தை ஆதிக்கம் கொள்ளுதல் 48

(உ.) சோழரின் எழுச்சி, கங்கை கொண்ட சோழன். 52

(ஊ) சோழ வம்சமும், சாண்டாழ் வம்சத்தினரும் 54

(எ.) பர்மா, அரகன் பகுதியில் "சாணு" எனப்படும் மன்னர்கள் 55

(ஏ.) சான்றூராகிய ஏனாதிநாதநாயனார் சூரியகுலத்தவரென வடநூல்கள் கூறும் சான்று 57

ஐந்தாம் இயல்:

பாண்டிய நாட்டில் நாடார் மன்னர்களின் எழுச்சி.

அ.) சோழ வம்சத்தவர்கள் பாண்டிய அரசர்களாக நியமிக்கப்படுதல். 59

(ஆ) சந்திரகுல பாண்டியர் வீழ்ச்சியடைந்தும், சூரியகுல பாண்டியர் எழுச்சியடைதல் 60

(இ.) சோழ பிரதேச ஆட்சியாளராகிய நாடாள்வார்கள் திருநெல்வேலியின் ஆட்சி செய்த குலசேகரனை ஆதரித்தல், பராக்கிரம பாண்டியனை எதிர்த்தல். 64

(ஈ.) பாண்டிய நாட்டில் சடாவர்மன் சுதந்திர சோழ பாண்டியனின் சந்ததியினர் ஆட்சியாளராக மாறுதல் 65

(உ) பாண்டி அரசர்களின் வீழ்ச்சி சூரியகுலத்தவர் நாயக்கரின் போர் அடிமையாகுதல் 67

ஆறும் இயல்:

பாண்டிய நாட்டில் நாடார் மன்னர்களின் வீழ்ச்சி

(அ.) மீனவன் வீழ்ச்சி; நாடானின் எழுச்சி. கலிங்கத்துப்பரணி தரும் சான்று 71

(ஆ.) பாண்டிய அரசர்கள் சிற்றரசர்களாக மாறுதல் 74

(இ.) தென் பாண்டிய நாடு (திருநெல்வேலி, கன்னியாகுமரி) பாண்டியர் ஆதிக்கத்தில் தொடர்தல் 74

(ஈ.) பாண்டியரின் சந்ததியினர் வசிக்குமிடங்கள் 76

(உ.) மைசூரில் லோககுரு, நாடார்களுக்கு அருளிய சேவை விபரம் அடங்கிய பட்டயம். 82

(ஊ.) நாடார் நில பிரபுக்கள் என விளக்கம் தரும் ஆங்கில நில அளவையாளரின் கூற்றுக்கள் 83

ஏழாம் இயல்:

சேர நாட்டில் சான்றூர்களின் அரசு

(அ.) சேர, சோழ மன்னர்களின் நெருங்கிய உறவு 85
(ஆ.) சான்றூர்களைப் பற்றி சரித்திர கலாநிதி நாகம் ஐயாவின் கூற்று 86
(இ.) சேர மன்னர்களின் வீழ்ச்சி 87

எட்டாம் இயல்:

இலங்கையில் சான்றூர் ஆட்சி

(அ.) மாதோட்டத்தில் சான்றூர்கள் 90
(ஆ.) யாழ்ப்பாண சரித்திரம் 94
(இ.) வன்னி 97
(ஈ.) அடங்காப்பற்று 100
(உ.) தேசவழமைச் சட்டமும், சான்றூர்களும் 107

ஒன்பதாம் இயல்:

"துராவ" எனப்படும் சிங்களச் சான்றூர்கள்.

(அ.) சிங்களச் சான்றூர்களின் வட இந்திய தொடர்பு 113
(ஆ.) சிங்களச் சான்றூர்களும் எலு மொழியும்
(இ) திராவிட சாதிகளும் கொடிகளும் 114
(ஈ.) எலதீப—ஈழம் என்னும் சொற்களின் ஒற்றுமை 119
(உ.) சிங்களச் சான்றூர்-ஈழவர்—கதம்பகுலத்தவர் தொடர்பு 121

பத்தாம் இயல்;

தமிழர் மத்தியில் சாதிமுறை.

(அ.) சங்க கால சாதிமுறை 133
(ஆ) பல்லவர் காலம் 133
(இ) பிற்கால சோழ, பாண்டியர் காலம் 134
(ஈ) விஜயநகர அரசர் காலம் 135
(உ) தமிழர்களும், அடிமைமுறைச் சட்டங்களும் 136

பதினோராம் இயல்;

இலங்கியத்தில் சான்றுர வம்சம் 139

பன்னிரண்டாம் இயல்:

சான்றேரைப்பற்றி ஐரோப்பிய இந்திய அறிஞர்கள் 146

பதின்மூன்றும் இயல்:

சான்றுர் சூரிய குலத்தவரா? 161

பதினுங்காம் இயல்:

சாதியிலுள்ள பட்டங்களும், தொழில்களும், உட்பிரிவுகளும்.


(அ.) ஈழவர் (ஆ) குருக்கள் (இ) மாறநாட்டார் 165
(ஈ.) மேல்நாட்டார் (உ) நட்டாத்தி (ஊ) கொடிக்கால் 169
(எ.) சாணுர் (ஏ) நாடார்கள் அல்லது நாடன் என்னும் பட்டமுடையோர் 170

பதினைந்தாம் இயல்:

20-ம் நூற்றுண்டில் தமிழ்நாட்டுக்கு தொண்டாற்றிய நாடார் குலத்தவர். 176



# தென் இந்தியா



கங்காவமசம்
மேலைச் சளுக்கியர்
கோதாவரி
கலிங்கநாடு
கீழைச் சளுக்கியர்
கிருஷ்ணா
துங்கபத்திரா நதி
சாகர்
கதம்பகுலம்
ஹயிகா
சிமோகா
பார்கூர்
வனவாசி
மூட்கிரி
சான்றரவம்சம்
காவேரி
சோழ
சேர
பாண்டிய

# 1. சான்றூர் எனப்படும் வட இந்திய திராவிட சமூகத்தினரின் ஆதி வரலாறு.

"உரிச்சா விழுங்கப்பட்டது, பாலா, வீழ்த்தப் பட்டது. பிப்ருவின் நகரங்கள், ஏழு நகரங்கள் நிலமட்டமாக்கப்பட்டன. அவன் செல்வம் இந்திரனை வழிபட்டவர்களின் கொள்ளைப் பொருள் ஆயிற்று" இதுவே இந்தியாவில் வாழ்ந்த திராவிட மக்களு டைய முன்னோரின் வீழ்ச்சியைப் பற்றி இருக்கு வேதத்தில் குறிக்கப்பட்டவையாகும். கிறிஸ்துவுக்கு 3000 வருடங்களுக்கு முன் சிந்து நதி பள்ளத்தாக் கில் திராவிட மக்களின் முன்னோர் வாழ்ந்தனர். அவர்கள் மகெஞ்சதாரோ அதாவது "இறந்தவர் களின் மேடு" என்னும் இடத்திலும், ஹரப்பா என் னும் இடத்திலும் காணப்பட்டனர். கி. மு. 1500-ல் இம்மக்கள் ஆரியரால் தோற்கடிக்கப்பட்டு தெற்கே துரத்தப்பட்டனர். தோல்வியடைந்த மக்கள் ஆரிய ரால் சூத்திரர் என அழைக்கப்பட்டனர். வெளி நாடு களுடன் வியாபாரம் செய்து, அழகிய நகரங்களை அமைத்து சீரும் சிறப்புமாக வாழ்ந்த திராவிடரின் முன்னோர் அடிமையாக்கப்பட்டனர். பலர் தெற்கே துரத்தப்பட்டனர். இவர்கள் தென் இந்தியாவில் பழைய குடிகளுடன் கலந்து திராவிட இனத்தை உருவாக்கினர் மறவர், எயினர், ஒளிஞர், அருவளர் பரதவர், ஆதியில் தென் இந்தியாவில் வாழ்ததாக V. கனகசபை அவர்கள் கூறியுள்ளார். (The Tamils Eighteen hundred years ago) 1904; அவர் சங்க காலத்தொடக்கத்தில் திரையர் சோழநாட்டையும் வானவர் சேரநாட்டையும், மாறன் பாண்டிய நாட் டையும் ஆட்சி செய்ததாக கூறுகின்றார். குறும்ப

ரும் ஆதியில் தமிழ் நாட்டில் அரசுசெய்தனர். ஒளி ஞர் வேளாளர்என தென் புலோலியூர் மு. கணபதிப் பிள்ளை அவர்கள் "வான்மீகியார் தமிழரே" என்னும் நூலில் கூறியுள்ளார். அதனால் தமிழரில் பெரும்பான் மையோர் தென் இந்தியாவின் நிரந்தர குடிகளாகும்.

சிலர் ஆரியருக்கு அடிபணிந்தனர் பலர் தெற்கு பிர தேசங்களை நாடினர். ஒருசிலர் ஆட்சியைத் திரும்பக் கைப்பற்றிக் கொள்வதற்காக கங்கை நதிக்கு தெற் கே யமுனு நதி ஓரமாக குடியேறினர். இவர்களே சூரிய குலத்தவர்களாகும். இவர்கள் வடமதுரையை அரசு செய்தனர். வட மதுரை இராச்சியம் ஜமுனு நதிக்கு அருகாமையிலுள்ளது. கிறிஸ்துவுக்கு முன் இப்பகுதி சான்ருர்களால் ஆளப்பட்டது. இங்கிருந் தே சான்ருர்கள் தென் இந்தியாவுக்குச் சென்றனர். இப்பகுதியிலிருந்தே சிங்கக் கொடியையுடைய சிங் களச் சான்ருர்களும் இலங்கைக்கு வந்தனர். இதன் தலைநகரம் துவாரகாபுரி. கண்ணன் இந்நாட்டுக்கு அரசனுகை இருந்தான்.

ஆரியர் முதலில் சிந்து நதிக்கு அருகாமையில் குடியேறி தெற்கே இன்றைய பம்பாய் மட்டும் பர வுதலாக வாழத்தொடங்கினர் (ஏ சோற் ஹிஸ்றரி ஒவ் இந்தியா—மோர்லைந்து அன் சற்றர்ஜி) அக்காலத் தில் வட இந்தியாவிலுள்ள இராச்சியங்களுக்குள் கோஸலம், கௌரவம், பாஞ்சாலம், விதேகம், முக் கியமானவையாகும். அங்கே அழகான பட்டணங் களும், அரண்மனைகளும், மாடமாளிகைகளும் எழுந் தன. கோஸலம் என்பது அக்காலத்தில் அயோத்தி

என வழங்கிற்று. அது இமயலேக்கும் கங்கைக்கும் மத்தியிலிருந்தது. கௌரவம் என்னும் இராச்சியம் தற்காலத்தில் டில்லி என்று வழங்கும் பட்டணத்திற்கு சமீபத்திலிருந்தது. பாஞ்சாலம் கௌரவ இராச்சியத்திற்கு தெற்கேயுண்டு விதேசம் கோசல இராச்சியத்திற்குக் கிழக்கிலுள்ளது. இவைகளில் சில ஆரிய இராச்சியங்களாகவும், சில ஆரியரல்லாதவர் இராச்சியங்களாகவும் விளங்கின. மகதம் ஆரியரல்லாதவர்களின் ஆதிக்கத்திலிருந்த இராச்சியமாகும். அதனுல் மகதநாட்டு அரசர்கள் சூத்திரர் என அழைக்கப்பட்டனர்.

மகெஞ்சதாரோ ஹரப்ப நகரங்களைச் சூரிய வம்சத்தவர்களே ஆட்சிசெய்தனர். மகெஞ்சதாரோ, ஹரப்பா மக்கள் சுமேரியருடன் தொடர்புள்ள மக்களென திரு A. L பர்சன் கூறுகின்றுர். ஒரு வீரன் இரு புலியுடன் சண்டை செய்யும் காட்சியும், அவ்வீரனின் முகம் சூரியனைப் போல் காட்சியளிப்பதாகவும் ஒரு கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. (The wonder that was India A L Bashon-Colombo Library) சூரியனைத் தங்கள் குலமாகக் கொண்டோரும், புலியைத் தங்கள் விருதுவாகக் கொண்டோரும், சிந்து நதியில் வாழ்ந்திருக்கின்றனர், என்பதை இதனுல் நிரூபிக்க முடியும்

## மௌரிய குலத்தவரின் எழுச்சி:

இச்சூரிய குலத்தவரே ஆரியபடையெடுப்பின் பொழுது வடமதுரையிலும், தென் பிகாரிலும் குடியே

றினர். அங்கு தங்கள் வியாபாரத்தை வெளிநாடு களுடன் தொடர்ந்து நடத்தினர். கி. மு. 325-ல் இவர்கள் பலமடையத்தொடங்கினர். கி. மு 350-க்கு அருகாமையில் நந்த வம்சத்து அரசர் மகதராச்சி யத்தை (தென் பிகார்) ஆண்டு வந்தனர். இவர்கள் ஆரிய குலத்தவர்களல்ல. கடைசி நந்த அரசனுக்கும் மூரா என்னும் ஆரியனல்லாத பெண்ணுக்கும் பிறந்த பிள்ளையே சந்திரகுப்த மௌரியனுகும். (கி. மு. 322-298) இவன் மௌரிய குலத்தைச் சார்ந்தவ ுகும். மௌரிய, சிங்க, இலம்பகர்ண போன்ற வகுப்பினர் ஆரியரல்லாதவர்களிடையே காணப்பட்ட இனங்க ளாகும். இந்தியாவில் சந்திரகுப்தலின் இராச்சியம் மிகப் பெரியதாகும் அது தெற்கில் ஆந்திரப் பிரதே சம் வரைபரவியிருந்தது. சந்திரகுப்தனின் அமைச்ச ஞக சாணக்கியன் விளங்கி, மௌரிய சாம்ராச்சி யத்தை நிறுவினுன். கிராமங்களுக்கு அதிபதியாகிய கிராமணி என்பவனே படைக்கு தலைமைதாங்கினுன்.

சந்திரகுப்தன் தனது வீரத்தால் ஆந்திரத்தை யும் அடிபணியச் செய்தான். ஆதியில் வட இந்தியா வில் இச்சான்ருர் சொலதே (Soladae) அல்லது (Sondre-சான்ருேர்) என கிரேக்கரால் அழைக்கப் பட்டனர் ("Ancient India" as described by Megasthenes and arian J W. Mccrindle page 154 மெக்தீனஸ், அரியன் என்பவரால் விளக்கப்படுத்தப் பட்ட "ஆதி—இந்தியா" மக்கிரின்டல்) பக்கம் 154 இவர்கள் மௌரியருடன் ஆட்சியாளர்களாக ஆந் திர பிரதேசத்தில் வந்து குடியேறினர். சரித்திர ஆராய்ச்சியாளனுன J. F. பீலீட் என்பவரால் எழு

தப்பட்ட "கன்னடத்து அரசகுலத்தவர்கள் என்னும் நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்" மௌரியர் ஆந்திரத்தில் காணப்பட்டனர். அவர்கள் பாட்டாளி புரத்தை தலைநகராக வைத்து அரசுசெய்த, கிரேக்கரால் "சான்ரோ" கோட்டாஸ் என அழைக்கப்பட்ட சந்திரகுப்தனால் ஆரம்பிக்கப்பட்ட இனத்தவராகும்.

1.

மகத நாட்டு அரசர்களுக்கு "மகத நாடன்" என்ற பட்டம் இருந்ததாக நைடதம் சுயம்வரபடலத்தில் 147-வது செய்யுள் கூறுகின்றது. சந்திரகுப்தன் தனது ஆதரவாளர்களுடனும், போர்வீரர்களுடனும் மைசூரில் பிற்காலத்தை களித்ததாக சிரவன பெல்கொல (Sravana Belegola) வில் எழுதப்பட்டுள்ளது அங்கு சமண சமய துறவியாக வாழ்ந்தான் இக்காலத்தில் மைசூரை அரசு செய்த சான்ருர்களும் சமண சமயத்தவர்களாகும் நந்தவம்சத்தினர் தெற்கே அரசாண்டனர் என கி. மு. 2-ம் நூற்ருண்டில் "காதிகும்பா" கல்வெட்டில் காணப்படுகின்றது. சக்கணத்தில் வடமேற்கையும், வடகிழக்கையும் மௌரிய பேரரசு கொண்டிருந்தது என்பதற்கு பம்பாய்க்கு அருகிலுள்ள சோபரா கல்வெட்டு கூறுகின்றது. இக்காலத்தில் மௌரியர் ஆந்திரப்பிரதேசத்தை அடிபணியச்செய்து, அவ்விடங்களில் குடியேறியமைக்கு மேற்கூறியன சான்றுகளாகும் யே. எவ். பீலீட் என்பவரால் எழுதப்பட்ட "கன்னடத்து அரசகுலத்தவர்" என்னும் நூலில் சாத்தாகன்னி வம்சம் ஆந்திர வம்சத்தவருடன் தொடர்புள்ளதென கூறியுள்ளார். 2.

சாத்தாகன்னி வம்சத்தவர் கன்னடத்தை ஆட்சி செய்தனர். இப்பகுதியில் இக்காலத்தில் சான்ருர்கள் ஆட்சிசெய்ததாக பல நூல்கள் கூறுகின்றன. ஆதலால் சான்ருர்களுக்கே சாதாகன்னியர் என்ற பட்டம் இருந்தது. கே. ஆர். சுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட "ஆந்திரத்திலுள்ள புத்த சின்னங்களும், ஆந்திரா சரித்திரமும்" என்னும் நூலில் பின்வருமாறு கூறுகின்ருர். "சாதாகன்னியரை கங்கை நதியுடன் சிலப்பதிகாரத்தில் தொடர்புபடுத்துவதால் ஆந்திரருக்கு மகதத்தில் உள்ள செல்வாக்கை எடுத்துக்காட்டுகின்றது. 3.

மகதநாடு சான்ரோர் கோட்டையாக (Sandro-Kottos) அமைந்திருந்ததாக மெகஸ்தீனஸ் கூறுகின்ருர். மைசூர் பகுதியில் நடைபெற்ற சாதாக்கன்னியர் ஆட்சியை. சாண்டார் ஆட்சியென பரிப்பளஸ் மாரிஸ் எரித்ரே என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. அதனுல் மகதநாட்டில் அரசு செய்த மௌரியரும் சாத்தாகன்னி வம்சத்தினரும் சான்ருர்களேயாகும்.

சாதவாகனர் ஆந்திரக் குலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களது செல்வாக்கு திராவிட நாட்டிலுள்ள தென் பெண்ணுறு மட்டும் பரவியிருந்தது. இப்படி றப்சனின் "இந்திய காசுகள்" என்னும் நூலில் காணப்படுவதாக திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூறியுள்ளார்கள். 4.

அவர் சாதவாகன காசு பெண்ணுரில் க்ாணப்பட்டதாக கூறுகின்ருர். சோழ, பாண்டிய நாட்டிலும்

மௌரியரின் செல்வாக்கு காணப்பட்டது. தமிழ் நாட்டில் சமண, புத்த மதங்கள் பரவியமைக்கு இவ்விடத்தில் ஏற்பட்ட மௌரியர் செல்வாக்கு முக்கிய காரணமாகும் இம்மதங்கள் தமிழ்நாட்டில் காணப் பட்டதாக கலாநிதி ஜி. சி மெண்டிஸ் அவர்கள் (The Early History of Ceylon) என்ற நூலில் கூறியுள் ளார்.

சங்க காலத்தில் சான்ருர் தங்கள் செல்வாக்கை தமிழ் நாட்டிலும் நிலைக்க முயற்சி செய்தனர். சோழ நாடு சென்னிநாடார் வம்சத்தவர் ஆட்சியில் அடி பணிந்தது. பூனு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாள ரான கலாநிதி ஆனந் சேல்டோர் M. A. "ஆதி கன் னடம்" என்னும் நூலில் பின்வருமாறு கூறுகின்ருர்- "D R. பென்றி M A—ஆதி இந்திய சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாடார் என்னும் சாதியும் நாடாள்வார் என்னும் சாதியும் ஒரே சாதியாகும். என எனக்குக் கூறியுள்ளார்." 5

சாதவாகன அரசகுலத்தவர் மத்தியிலும் சான் ருர்களின் கலப்பு காணக்கூடியதாக இருக்கின்றது. நீலகண்ட சாஸ்திரி தனது நூலாகிய "Foreign notices of S. India From Megasthenes to Ma Huan" University of Madras பின்வருமாறு கூறி யுள்ளார். "Satakarni title of the Andra Kings-Schoff thinks that the elder Sargaus was Arista Satarkarni 44-69 (A. D.) and Sandares, his heir presumptive Sundara" சாத்தாகன்னி ஆந் திர அரசர்களின் பட்டப் மூத்த சார்காஸ் என்பவன் அரிஸ்ரா சாத்தாக்கன்னி, மற்றும் சான்ருர்கள்

சுந்தரன் என்பனெனின் இரண்டாம் வாரிசுயுரிமையாளர்கள்." "Heir Presumptive" என்ற சொல்லின் பொருள் என்னவென்ருல் வம்சாவளிப்படி பட்டத்திற்குரிய நேரடி வாரிசு ஒருவர் பிறக்கும் வரை இவர்கள் (சான்ருர்கள்) பட்டத்திற்கு உரிமையாளராகும். சான்ருர்கள் சாதவாகன அரசகுலத்தவருடன் விவாகம் செய்ததால் இவ்வுரிமையைபெற்றிருக்கலாம்

மௌரியர் காலத்திலேயே சான்ருர் ஆந்திரப் பிரதேசத்திலும், மைசூர், பகுதியிலும் குடியேறினர். மிகுதியானவர்கள் வட இந்தியாவில் நிரந்தரமாக தங்கிவிட்டனர். இவர்கள் காலப்போக்கில் சான்டாழ் என அழைக்கப்பட்டனர். இவர்கள் தமிழுடன் தொடர்புடைய மொழியையே பேசிவருகின்றனர். இவர்கள் மிகவும் வீரமுள்ளவர்கள். பிற்கால சோழகுலத்தவரின் ஆட்சிக்காலத்தில் இச்சாண்டாழ் குலத்தவர் கங்கைநதியோரமாக ஆட்சியாளர்களாக இருந்தனர். இவர்கள் சோடா நாக்பூர், பிகார், ஒரிசா மேற்கு கிழக்கு வங்காலம், அஸாம் என்னும் பகுதிகளில் காணப்படுகின்றனர்.

இந்த மௌரியர் யார்? கிரேக்க சரித்திர ஆசிரியனுல் சான்ட்ரோ கோட்டாஸ் ("Sandro Kottos") எனக் குறிப்பிட்டது மௌரிய அரசனுகிய சந்திரகுப்தன் தான் என்று சேர் வில்லியம் யோன்ஸ் கூறியுள்ளார். (A Short history of India W. H. Moreland and Chatterjee) இந்நூலில் சந்திரகுப்தன் "சான்ட்ரோ" எனதனது இனப் பெயரினுல் அழைக்கப் படுகின்ருன். சான்ட்ரோஸ் என்ற சொல் சான்ருன்

என தென்னுட்டில் மருவியது. திவாகரத்தில் ''சான்றேன்'' சூரியன் பெயராக குறிப்பிடப்பட்டுள்ளது. திவா (i55) ஆந்திரர் 'அந்திரா கோட்டாஸ்'(ஆந்திரர் கோட்டை என புளூட்டா (Plutarch) என்பவரால் எழுதப்பட்டது. சான்றேருகிய மௌரியன் ''சான்றே கோட்டாஸ்'' (சான்றேன் கோட்டை) என மெகஸ் தீனஸ் (Megasthenes) என்னும் கிரேக்கரால் கூறப்பட்டுள்ளது. தொடக்கத்தில் மௌரியர் தங்களை தேவப்பிரியர் என அழைத்தனர். கிரேக்கர் மௌரிய அரசர்களிடம் சலுகைகள் பெறுவதற்காக ''சான்றேன்'' சூரியவம்சத்தவர் என பட்டத்தைச் சூட்டினர். ஆந்திர பிரதேசத்தையும், மௌரிய பிரதேசத்தையும் ஆட்சி செய்த மௌரிய பிரதிநிதிகள் அல்லது கிராமணிகள் தங்களை சான்றேர் என அழைத்தனர். காலப் போக்கில் அப்பெயர் ''சான்ருர்'' என மருவியது. வடநாட்டில் ''கௌரவ'' என்ற பெயர் தமிழர் மத்தியில் கரையார் என்றும் சிங்கள நாட்டில் ''கரவ'' என்றும் மருவியது. ''கரவெல'' என்று வட இந்தியாவில் அரசு செய்த அரசவம்சம் கௌரவர்களுடன் தொடர்புடையவர்களாகும். இவர்கள் சந்திரகுலத்தவர்களாகும். தென்னுட்டில் காணப்படும் சான்ருர்; மௌரியர், சாதவாகனர் கலப்பால் ஏற்பட்ட இனமாகும். இவர்கள் தங்களை கதம்ப குலத்தவர் என்றும், சான்ருர்கள் என்றும் அழைத்து கன்னடத்தை ஆட்சிசெய்தனர். தென்னுட்டில் சான்ருர்கள் தொடக்கத்தில் குடியேறிய பகுதி கோதாவரி நதிக்கும், கிருஷ்ணு நதிக்கும் இடைப்பட்ட பிரதேசமாகும். இப்பகுதி ஈழம் எனப்பட்டது. இச்சான்ருர்

சூரிய குலத்தவராகும். மேற் கூறிய எனது திடமான முடிவை திரு. வி. நாகம் ஐயா B. A. (F. R. Hist.S) தனது நூலாகிய திருவாங்கூர் ஸ்டேட் மானுவலில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

கிறிஸ்துவுக்கு முன் சிந்து நதியைச் சுற்றியுள்ள பகுதிகள் முழுக்க ஆரியமயமாஞலும், கங்கை நதியைச் சுற்றியுள்ள பகுதிகள் முழுக்க ஆரியமயமாகவில்லை. இங்கு சில பகுதிகளில் திராவிட அரசர்கள் ஆட்சி செய்தனர். மௌரிய குலந்தவர் திராவிட மன்னர்களாகும். இம் மௌரியர் எலுவுடன் தொடர்புடைய மொழியை பேசிவந்தனர். அசோகனது மகன் மகிந்தன் இலங்கை வந்ததும், அவனே நேரடியாக பலரை புத்தமதத்திற்கு மாற்றியதாக மகாவம்சம் என்னும் சிங்கள நூல் கூறுகின்றது அதனுல் அக்காலத்தில் மகதநாட்டு அரசகுலத்தவர் இலங்கையில் பேசப்பட்ட மொழியுடன் தொடர்புள்ள மொழியையே பேசிவந்துள்ளனர். இலங்கையில் இக்காலத்தில் பேசப்பட்ட மொழி எலு என்றும் அத்திராவிட மொழி புத்தமதத்தின் வருகைக்குப் பின் ஆரியமயமாகியதென்றும் வணக்கத்திற்குரிய கலாநிதி ஹ. சி. தாவீதடிகள் தனது சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ் அகாரதியில் கூறுகின்ருர்கள்.

வட இந்தியாவிலிருந்தே சான்ருர் தெற்கே வந்தனர் என பல ஐரோப்பியரும், இந்திய சரித்திர ஆராச்சியாளரும் கூறுகின்றனர். கங்கை நதிக்கு தெற்கே “சான்ரு” என்ற பெயருடன் ஊர்கள் இருப்பதைக் காணலாம். கிழக்குக் கரையோரமாகவே

அவர்கள் ஆந்திர பிரதேசத்தை அடைந்தனர். வங்காலத்தில் சாந்தா நாக்பூர், கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் சாண்ட்பூர், மற்று சோண்பூர், சோணு, சாண்டா என்ற பெயர்கள் இச்சாதியினர் இவ்விடங்களில் வசித்ததால் ஏற்பட்ட பெயர்களாகும். "ஊர்" என்பது தமிழ் சொல்லாகும். பிகாரைச் சுற்றியுள்ள இடங்களிலேயே ஏராளமாக "ஊர்" என்ற பெயருடன் கிராமங்கள் முடிவடைகின்றன. சாண்டாழ் (SANTAL) சாதியினர் சூடிய நாக்பூர், பிகார், வங்காலம் ஆகிய பிரதேசங்களில் கூடுதலாக காணப்படுகின்றனர். சாந்தால் எனப்படும் மொழியை பேசுகின்றனர். அது திராவிட தொடர்புடைய மொழியாகும். அது தேவர்களாலும், அரசர்களாலும் பேசப்பட்ட மொழியாகும். "சோழ" என்ற பெயர் "சோற்ரு" என்ற பெயரிலிருந்து மருவியதாகும். சோழர் சோற்ரு நாக்பூரிலிருந்து (சூடிய நாக்பூர்) தெற்கே வந்தனர். சோழருக்கும், நெல்லூரையாண்ட தெலுங்குச் சோடருக்கும் தொடர்புண்டு. சோழ வம்சத்தில் வீரசோடன் (1078-84), இராசராசசோட கங்கன் (1084-9), வீரசோடன் (1089-92) போன்ற பெயர்கள் உண்டு.

மகெஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களிலிருந்தே வட மதுரை, பிகார் பிரதேசத்தில் சூரியவம்சத்தவர் குடியேறினர். பிகாருக்கு தெற்கே பரிநாடா என்ற ஊர் பெயரும், ஆந்திரா பிரதேசத்தில் காக்கா நாடா என்ற பெயரும் இவ்விருநாடுகளுக்கு மிடையேயிருந்த பழமையான தொடர்பை நினைவுபடுத்து

கின்றது. சான்ருர்களுக்கும், தமிழர்களுக்குமிடையே இன்னும் பல வேறுபாடல்களைக் காணலாம். தமிழர் சாதிமுறையுடன் சான்ருர் ஒன்றித்து நடப்பதில்லை. தமிழ்நாட்டில் சான்ருருக்குள் 60% வேளாண்மை செய்வர். ஆனுல் வேளாலர் என அழைப்பதில்லை. கோவில் குருக்கள் தங்களை பிராமணர் என அழைப் பதில்லை. அவர்கள் "ஐயர்" என தங்கள் பெயரை எழுதிக்கொள்வர். வியாபாரம் செய்வோர் செட்டி கள் என அழைப்பதில்லை. அவர்கள் தங்களை 'நாடார்' என அழைத்துக்கொள்வர். அதனுல் சான்ருர் தமி ழரைவிட பிரிதொரு சாதிமுறையைப் பின்பற்று பவர்களாகும்.

சான்ருர் வட இந்தியாவிலிருந்து வந்தமைக்கு இன்னும் பல சான்றுகள் உண்டு அவர்களது குலத் தெய்வம் பத்திரகாளியாகும். அது இமயமலையி லுள்ள பத்திரிநாத் தலத்தின் அடிப்படையில் வந்த பெயராகும். ரெபேர்ட் ஹார்ட்கிரேப் "தமிழ்நாட்டு நாடார்கள்" என்ற நூலில் பின்வருமாறு கூறுகின் ருர். "பத்திரகாளி நாடார்களின் குலதெய்வமாகும் மாரியம்மன், காளியம்மன் அல்லது பத்திரகாளி என அழைக்கப்படுவாள்.. நாடார்கள் வாழும் இடங் களில் பத்திரகாளிக்கு கோவில் எழுப்பப்பட்டிருக் கும். 6.

சான்ருர் பெரும்பாலும் இறந்தவர்களைப் புதைப்பார்கள். என கலாநிதி V. நாகம்ஐயா கூறு கின்ருர். மற்றைய தமிழர்கள் இறந்தவர்களை சுடு

வார்கள். சான்ருர் இன்றும் வட இந்தியாவில் மகெஞ் சதாரோ, ஹரப்பா மக்களின் கலாச்சாரத்தையே பின்பற்றுவர். "ஒரு காலத்தில் பிரேதங்களைப் புதைத் தலே நாடார்களின் பழக்கமாக இருந்தது. ஆனல் காலப்போக்கில் இறந்தவர்களை சுடுதல் சமுதாயத் தில் மதிப்பிற் குரியதென எண்ணி, அப்பழக்கம் வளர்ச்சியடைந்தது." என பேராசிரியர் R. L. ஹார்ட்கிரேப் கூறுகின்ருர். 7.

மகத நாட்டவர்களின் கிராமணி பட்டம் சான் ருர்களிடையே இன்னும் காணப்படுகின்றது. இது கிறிஸ்துவுக்கு முன் பிகார் பிரதேசத்திலுள்ள கிரா மங்களின் தலைவனின் பட்டமாகும். (ஏ சோட் ஹிஸ் ரறி ஒவ் இந்தியா; மோர்லாந்து அன் சாற்றர்ஜி) சான்ருர் வட இந்தியாவிலிருந்து படையெடுத்து வந்த தீரச்செயல்களை விரும்பும் போர்வீரர் இன மென திரு. V. நாகம் ஐயா (B. A.) F. R. Hists கூறுகின்ருர். (திருவாங்கூர் ஸ்டேட் மானுவல்) றிங் கில்டாப் அடிகள் (Rev W T Ringletaube) சான் ருர்களுடைய உடலமைப்பு, குணம், நடை ஐரோப் பியரைப் போன்றது எனக் கூறுகின்ருர் இதையேற் றுக்கொள்ள முடியாவிட்டாலும், அவர்கள் மகெஞ் சதாரோ மக்களின் கலப்பற்றசந்ததியினர் என்பதை மறுக்கமுடியாது. சான்ருரும் மகெஞ்சதாரோ மக் களைப் போன்று பெண் தெய்வத்தை சக்தியாகவும், காளியாகவும் வழிபடுகின்றனர். சான்ருரின் பழக்க வழக்கங்களும், அறிவும், வீரமும், விடாமுயற்சியும் அவர்கள் க்ஷத்திரியர் என்பதை நிரூபிக்கின்றது.

அவர்களது முகச்சாயல் தமிழர்களைவிட வேறு பட்டதென கலாநிதி V நாகம் ஐயா கூறுகின்றார். தாழ்ந்தநெற்றியும், குழிவிழுந்த கண்களும் (Sunken-eyes), புடைத்த கன்ன எலும்புகளும் கவனிக்கத்தக்கவை. திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்ச நல்லூர் சோழ வம்சத்தினர் பாண்டிய நாட்டை ஆட்சிசெய்த இடமாகும். பேராசிரியர் எலியாட் ஸ்மித் அங்கு கிடைத்த தலையோடுகளை ஆராய்ந்து பின்வருமாறு கூறுகின்றார். "ஆதிச்ச நல்லூரிலிருந்து நான் இரண்டு தலையோடுகளை ஆராய்ந்து பார்த்தேன். ஒன்று முற்கால எகிப்திய மாதிரியிலிருந்து வேறுபாடற்றதாயிருந்தது. மற்றது அதே இடத்துப் பொது மாதிரியாயமையவில்லையாயினும் அதன் திரிபுற்ற வடிவெல்லையிலேயே இருந்தது" அதனால் சோழவம்சத்தவர் மகெஞ்சதாரோ மக்களுடன் தொடர்புள்ளவர்களென்பதை நிரூபிக்கின்றது. சான்றோரின் உடலமைப்பும் மகெஞ்சதாரோ மக்களுடன் தொடர்புள்ளதாகவே இருக்கின்றது.

1. "Mauryas were found in Andhra Pradesh. The Mauryas were perhaps descendants of the Maurya dynasty of Pataliputra which was founded by Chandragupta–"The Sandrokottos" of the Greeks". The dynasties of the Kanarese district by J F Fleet.

2. "Harisputra—Satarkarni—It is associated with the Andhrabhritya dynasty " J. F. Fleet

3. "The association of the Satakarnis with the Ganges region in the Tamil Silapathikaram indicates that the Andhra dynasty had a brief spell of Supremacy over Imperial Magadha" "Buddhist Remains in Andhra and the History of Andhra" by K R Subramanium M A -1932

4 Satavahana were of the Andhra lineage and their hegnomy extended ..........even as far as S Pennar in Dravida. Satavahana coins have been discovered as far as the South Penner. Rapson: Indian coins Page 22.
K. R Subramanium M. A.

5. "Mr. D R. Bendrey M. A. tells me that the Nadalvars were the same as the Natas of the early Indian history" Ancient Karntaka Vol I by Bhaskhar Anand Saletore M A. Ph d Lon–Professor of History of Poona.

6. "Bhadrakali is the tutelary deity of the Nadar community known variously as Mariamman, Kaliamman, or Bhadrakali, the goddess represents the malignant aspect of the wife of Siva........ .. The Amman Kovil or goddess temple is central to every Nadar Settlement"

Nadars of Tamil Nad R. L Hardgrave M. A. Page 9.

7. Where once burial had been the custom among the Nadars, the Community increasingly choose cremation as symbolic of higher status". R. L. Hardgrave-Nadars of Tamil Nad-Page 108.

## 2. மைசூரில் சான்றூர் ஆட்சி

"சான்றே கோட்டாஸ்" (சான்றேன் கோட்டை) என கிரேக்கரால் புகழப்பட்ட சந்திரகுப்தன் தனது வீரத்தால் ஆந்திரத்தை அடிபணியச் செய்ததும், சோழ பாண்டிய நாடுகளிலும் தனது செல்வாக்கை ஓரளவு செலுத்தினன். (Ceylon & Indian History L. H. Horace Perera ) மௌரியர் காலத்திலேயே (கி. மு. 322-237) சான்றேர் ஆந்திரத்திலும், தமிழ் நாட்டிலும் குடியேறினர். தொடக்கத்தில் மைசூர் பகுதியை ஆட்சிசெய்யத் தொடங்கினர். இக்காலத் திலேயே முதல்முதலாக மைசூர் பகுதியை ஆட்சி செய்தவர்கள் "சான்றுர்" எனக் குறிப்பிடப்படு கின்றனர்.

கி. பி. முதலாவது நூற்றுண்டில் சான்றுர் ஆட்சி கன்னட பிரதேசத்தில் நடைபெற்றதாக சரித்திர ஆராய்ச்சியில் புகழ்பெற்ற திரு, K. A. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கூறுகின்றுர்கள். கிரேக்க தேசத் தைச் சேர்ந்த "கிளமென்ஸ்" என்ற சரித்திர ஆசி ரியர் தனது உலக சுற்றுப்பிரயாணத்தின் போது இந்தியாவுக்கு வந்தார். அவர் அலெக்சாந்திரியா நகரில் பிறந்தவர். "பரிப்ளஸ் மாரீஸ் எரித்ரே" (Periplus Maris Erythrae) என்னும் நூலில் பின் வருமாறு கூறியுள்ளார்-இந் நூலில் கூறப்பட்ட சான்றுர் ஆட்சி கி. பி. 81-ல் நடைபெற்றதாகும். இந்நூல் லத்தீன் மொழியில் எழுதப்பட்டதாகும்.

1. இந்தியாவில் மேற்கு கடற்கரையில், மைசூருக்கு மேற்கே அக்காலத்தில் அரிசுபுரிந்த சாலிவாகனனைச் சேர்ந்த அரசர்களுடைய ஆட்சி முற்றியபின் சான்றூர்களின் ஆட்சி ஸ்திரப்பட்டது.

2. "தென் கன்னட பகுதியைச் சேர்ந்த கலியாணபுரம் என்னும் துறைமுகம் (சாலிவாகன) சாரகனன்கள் காலத்திற் சிறப்புற்று விளங்கிய பின்னர் சான்றூர்களின் ஆளுகையில் செழிப்புற்று ஓங்கிற்று.

3. "ஏதேனும் கிரேக்ககப்பல் அத்துறைமுகத்திற்கு வந்தால் சான்றூர்கள் அதனையறிந்து புல கட்டுப்பாடுகளுடன் காவற்காரன் ஒருவனது கண்காணிப்பில் அக்கப்பலை பருகாசா (**Barugaza**) என்னும் இடத்திற்கு திருப்பிவிடுவர்..............................

பெரிப்பளஸ் என்னும் ஆசிரியனுல் புரோச் என்னும் இடத்திலுள்ள சாண்டான் எனக்கூறியது சந்திரன் என்னும் அரசவம்சத்தைச் சேர்ந்தவனுகும் என திரு. K. R. சுப்பிரமணியம் அவர்கள் தனது நூலில் கூறியுள்ளார்கள். 1.

கதம்பகுல கல்வெட்டில் வேறு ஒரு அரசவம்சத்தைப்பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் சாண்டாகாஸ் (சான்றூர்) என அழைக்கப்பட்டனர் ஹரிவர்மன் என்னும் கதம்பகுல மன்னன் காலத்தில் பாணுசக்தி சாண் டாகாஸின் பிரதிநிதியாக

இருந்தான். (கன்னட நாட்டின் அரசவம்சங்கள்-யே. எவ். பிலீட் பக்கம் 10.) 2.

மேற்கூறிய சான்ருர் ஆட்சியைப்பற்றி மைசூரில் புராதன சரித்திர ஆராய்ச்சியில் உலகப் புகழ் பெற்ற திரு. ரைஸ் அவர்களும் (**B. L. Rice Esq. C. I E. M. R A.S.**), கர்நாடக தேச ஆராய்ச்சியில் புகழ்பெற்ற திரு. பிளீட் அவர்களுக்கும் (**J. F. Fleet Esqr Bo C S. M. R A S**), சென்னை அரசின் ஜனவிவாரண விஷயமாக ஆராய்ச்சி செய்த சேர் ஸ்டுவர்ட் பிரபுவும் பின்வருமாறு எழுதியுள்ளார்கள்-கிறிஸ்துவுக்கு சில வருடங்களுக்கு முன் தொடங்கி கி. பி. 600-ல் சளுக்கியனை கீர்த்தி வர்ம சக்கரவர்த்தி ஆட்சியைக் கைப்பற்றும் வரை சான்ருர் ஆட்சி நிரந்தரமாக இருந்தது. அதற்குப் பின் 1336 மட்டும் இடைக்கிடையே சான்ருர் ஆட்சி செய்தனர். மைசூரில் மேல் பாகத்திலும், வடகன்னட பகுதியான ஹைகநாட்டிலும் (Haiga), தென் கன்னட பகுதியான துளுவ நாட்டிலும் ஆட்சி செய்தனர். வட கன்னட பகுதியில் ஹீர்சி தாலுகவிலுள்ள வனவாசியை (Banavasi) தலைநகராக வைத்து (பின் வைஜந்தி எனப்பட்டது) ஆட்சி செய்தனர். இவர்கள் தங்களை வடநாட்டு க்ஷத்திரியர் எனக் கூறிக்கொண்டனர். இவர்கள் கதம்ப குலத்தவராகும் இவர்கள் கர்நாடக—துளுவ—குடக பாஷைகளைப் பேசினர். பிற்காலத்தில் மேல் கடற்கரையோரமாகக் கோவையிலாண்ட கதம்பரும், மைசூரைச் சேர்ந்த (Darwad) தார்வாடி பகுதியில் (Hangal)

ஹாங்கால் என்னும் இடத்திலாண்ட அரசவம்சத்தவரும் மேற்கூறிய சான்ருர் அல்லது நாடார் இனத்தவர்களாகும்.

கொங்க நாட்டு உத்தூர் என்னுமிடத்தில் அரசாண்ட கதம்ப இனத்தவரிடையே "Nadaluwa" (நாடாளுபவர்) என்னும் நாமம் விளங்கியதாக "எபிகிராபியா கர்நாடகா" என்னும் நூலில் காணப்படுகின்றது. இதைப்போன்று மைசூரையாண்ட கதம்பகுலத்தவருக்கும் நாடாள்வார் பட்டம் இருந்ததாக எபிகிராபியா கர்நாடக (Lewis Rice's Ephigraphica Carnatica, Vol v, pt I P vii, viii) கூறுகின்றது.

கன்னடத்தை அரசுசெய்தவர்களை இருபிரிவாக பிரிக்கலாம். கதம்ப குலத்தவர் கிழக்கு பகுதிகளையும், சான்ருர் மேற்கு பகுதிகளையும் அரசுசெய்தனர். இவ்விரு வம்சத்தவர்களும் ஒரே ஏக குலத்தவர்களாகும். இச்சான்ருர்களுக்கும், சாதவாகனருக்கும் சரித்திர ஆராச்சியாளர் கூறுவதுபோல் இரத்த உரித்திருந்தாலும், இவர்கள் தனிப்பட்ட இனத்தவர்களாகும். மௌரியரின் ஆட்சியாளர்களாக தெற்கே வந்து குடியேறி, மேற்கு பகுதியை அரசு செய்த பலம் பொருந்திய அரசவம்சமாகும். அவர்கள் தங்களை நாடாள்வார்கள் என அழைத்துக் கொண்டனர். காலப்போக்கில் இப்பட்டம் சேர, சோழ, பாண்டிய நாட்டைச் அரசுசெய்த சான்ருர்களுக்கும் பரவலாயிற்று.

1. "In Sandanes of Broach mentioned by the Periplus may be traced a member of the Chandra family" J. R. A S 1918, p110,— "Brddhist Remains in Andhra and the History, of Andhra K. R. Subramaniam

2. "One of the Kadamba inscriptions mentions incidentally another early dynasty that of the Sendrakas, the representative of which in the time of the Kadamba King Harivarman was Bhanusakthi."

The dynasties of the Kanarese district by J F Fleet, Page 10"

# கன்னடத்தை ஆட்சி செய்த சான்றார வம்சம்

மந்தை மேய்ப்போராக இந்தியாவுக்கு வந்த ஆரியர், தங்களுடைய குதிரைப்படையினாலும், வேகமான வாகனங்களினாலும் திராவிடர்களை தோற்கடித்தனர். ஆனால் காலப்போக்கில் திராவிடர்களாகிய சான்றார்கள், ஆரியர்களின் போர்க் கருவிகளை பாவிக்கக் கற்றுக்கொண்டு, வட இந்தியாவில் பல புதிய சாம்ராச்சியங்களை அமைத்தனர். க்ஷத்திரிய குலத்தவர்களாகிய சான்றார்கள் மௌரிய, சாதவாகன, கன்னட, சேர, சோழ, பிற்கால பாண்டிய, ஈழநாட்டு அரசுகளை பிராமண-ஜைன சமயத்தவர்களின் ஆலோசனைகளுடன் அமைத்தனர்.

இப்படியாக அமைக்கப்பட்ட புதிய சாம்ராச்சியங்களின் தலைவர்களாகிய, சான்றார வம்ச மன்னர்களுக்கு வடமொழி பெயர்கள் பிராமணராலும், ஜைன சமயத்தவராலும் கொடுக்கப்பட்டன. கன்னடத்தை வெற்றியீட்டிய சான்றார வம்சத்து மன்னனுக்கு "ஜினதத்தா" என பெயரிடப்பட்டது. "எங்களுக்கு வெற்றியை கொடுத்தவனே" என்பது இச்சொல்லின் அர்த்தமாகும். ஈழத்தை வென்ற மன்னனுக்கு "விஜயா" என பெயரிடப்பட்து. "எல்லா வெற்றிகளையும் விட பெரிய வெற்றியை கொடுத்தவனே" என்பது இச்சொல்லின் அர்த்தமாகும்.

கிறிஸ்துவுக்கு முன் திராவிட மன்னர்களின் ஆதர வுடன் பிராமணர் ஏராளமாக தெற்கே குடியேறிய மைக்கு இது சிறந்த சான்ருகும்.

இலங்கையில் புகழுள்ள சரித்திர எழுத்தாள னும், ஆசிரியருமாகிய திரு L.H. ஹொரஸ் பெரேரா அவர்கள் பின்வருமாறு கூறுகின்ருர். "கரிகாலனுக்கு பின் சோழர் மங்கி விடுகின்றனர். களப்பிரரால் அவர்களது அதிகாரங்கள் நசுக்கப்பட்டன. பல்ல வர், பாண்டியர் எழுச்சி காலத்தில் சோழர் அவர் களது நிழலில் அமிழ்ந்துவிட்டனர். ஆனுல் அவர் கள் முற்ருக அழிந்துவிடவில்லே. தெலுங்கு மாவட் டங்களேச் சுற்றி (கன்னடம்) தாங்கள் சோழவம் சத்தவரின் சந்ததியினர் எனக்கூறி அரசுசெய்தனர். இவர்கள் உறையூர், காவேரிப்பகுதியிலிருந்த தங் கள் ஆதிக்கத்தை விட்டுவிடவில்லே"

மேற் கூறிய புகழுடைய சரித்திர ஆசிரியரின் கூற்றிலிருந்து சோழரின் ஆதி இருந்பிடம் மைசூர் பகுதி என்பது நன்கு விளங்குகின்றது. நான் இவ் வாசிரியரிடம் மாணவனுக இருந்த காலத்தில் மேற் கூறிய கூற்றை அடிக்கடி கூறியுள்ளார். ஆந்திரத்தை சுற்றி ஆட்சி செய்த ஆளுப (நாடாள்வார்) சான்ருர கதம்ப வம்சங்கள், சான்ருரின் பழம்பெருமையைக் கதையாகக் கூறுகின்றது.

தென் கன்னடத்தை அரசு செய்த சான்ருர வம்சத்தவர் சமண சமயத்தவர்களாகும். இவ்வம்

சத்தவரின் முதல் மன்னனுகிய ஜினதத்தன் சமண சமயத்தவனென கூறப்படுகின்றது. சமண சமயம் மகாவீரா (கி. மு. 540-468) என்பராால் ஆரம்பிக்கப் பட்டதாகும். இவர் க்ஷத்திரிய குலத்தவராகும். சமண சமயம் பிராமணர்களின் மதமாகிய இந்து மதத்திற்கு மாருக ஆரம்பிக்கப்பட்டதாகும் புத்த மதமும் க்ஷத்திரிய குலத்தவரால் ஆரம்பிக்கப் பட்டதாகும். வட இந்தியாவில் ஆரிய மன்னர் இந்து மதத்தை ஆதரிக்க, திராவிட மன்னர் சமண சமயத்தையும், புத்த சமயத்தையும் ஆதரித்தனர். தென் இந்தியாவில் பிராமணரின் செல்வாக்கு மிகக் குறைந்திருந்ததால் அரசர் சைவ சமயத்தை ஆதரித் தனர். கங்கை நதியைச் சுற்றி வங்காலம், மகதம், மதுரை போன்ற அரசுகளில் திராவிடரின் செல் வாக்கு அதிகரித்திருந்ததால் சமணமும் புத்த மும் இப்பகுதியில் வேகமாக வளர்ச்சியடைந்தது.

இலங்கைக்கு சான்ருேர் ஐந்தாம் நூற்ருண்டுக்கு முன் வந்திருந்ததால்தான் சைவ சமயத்தவராக இருந்தனர் காலப்போக்கில் வட இந்திய திராவிட மன்னர்களைப் பின்பற்றி இவர்களும் புத்த மதத்தில் சேர்ந்துவிடுகின்றனர் வட இந்தியாவில் புத்தசம யத்திற்கு மாறிய ஆரியர் இலங்கையில் குடியேற் றப்படுகின்றனர். இதைப்போன்று சமண சமயத் தைச் சேர்ந்த ஆட்சியாளர்கள், மௌரியர் காலத் தில் கன்னடத்தில் குடியேறினர். சந்திரகுப்தன் தனது கடைசி காலத்தைச் சமண சமயத் துறவி யாக மைசூரில் கழித்ததாகக் கூறப்படுகின்றது.

அதனுல் இப்பகுதியில் சமண சமயத்தின் செல்வாக்கு மிகப்பலமடைந்திருந்ததாகக் காணப்படுகின்றது. கன்னடத்தில் சமண சமயத்தவராகிய சான்ருர் கி. மு. 468-க்கு பின்பே வந்து குடியேறியிருக்கின்றனர். கி. மு. 159ல் இவர்களது ஆட்சி கன்னடத்தில் நடைபெற்றதாக சரித்திர கலாநிதி ரைஸ் அவர்கள் கூறுகின்ருர்கள். இக்காலத்திற்கிடையே முதல்முதலாக தென் இந்தியாமீது படையெடுத்த மன்னன் சந்திரகுப்த மௌரியனுகும். இவனும் சமணசமயத்தவனுகும். அதனுல் இவ்வரசன் காலத்திலேயே சான்ருர் கன்னடத்தைச் சுற்றி குடியேறியிருக்கின்றனர். சந்திரகுப்த மௌரியனின் காலம் கி. மு. 322-298 ஆகும்.

இங்கு கூறப்பட்டுள்ள சான்ருர வம்சத்தவர் சூரிய குலத்தவராகிய பாண்டியருடன் விவாகத் தொடர்பு வைத்திருந்தனர். சோழரும் இப்பகுதியிலேயே தங்கள் வீழ்ச்சிக்காலத்தில் தஞ்சம் புகுந்திருந்தனர். சோழரும், பிற்கால பாண்டியரும் கங்க வம்சத்தவருடனும், சாளுக்கியருடனும் போராடினுர்கள். இம்மன்னர்கள் சான்ருர்களுடன் போராடவில்லை. சாளுக்கியரிடமிருந்து சான்ருர்களுக்கு ஆபத்து வரும் தருவாயில் பலமுறை பாண்டியர் உதவிக்கு வந்திருக்கின்றனர். அதனுல் சான்ருர, சோழ, பிற்கால பாண்டிய மன்னர்களிடையே நெருங்கிய இரத்தத் தொடர்பு இருந்திருக்கின்றது.

கதம்ப குலத்தவரிலிருந்து சமண சமயத்தைச் சேர்ந்த ஒரு கூட்டத்தார் ஜினதத்த ராஜா என்

பவரின் தலைமையில் "Chantas, Santas, சான்றுர்" அல்லது "Santara King சான்றுர மன்னர்கள் என்னும் நாமமாய் தனிராச்சியமாகப் பிரிந்து ஆட்சி செய்தனர். இவர்கள் கி. மு. 159 முதல் ஆட்சி செய்தனர். மைசூர் இராச்சியத்தில் ஷிமோகா பிர தேசத்தைச் சேர்ந்த ஹொம்புசம் (Hombucha) என்னும் பட்டி பொம்புச்சபுரத்தை தலைநகராக வைத்து ஆட்சிசெய்தனர். சிலகாலம் சளுக்கிய அரசர்களுக்கு கப்பம் கட்டி வந்தனர். பின் சான்றுர் பலமடைந்து தெற்கே (Kadur) காடூர் ஜில்லா, முத்கிரி (Mudgere) தாலுகாவைச் சேர்ந்த கலசம் (Kalasa) என்ற இடம் மட்டும் பரவி, வடக்கே ஸகர் (Sagar) தாலுகாவைச் சேர்ந்த கோவர்த்தன கிரியை அரண்செய்து தென் கன்னட ஜில்லாவி லுள்ள (Sisukala) சிஸுகலம் என்ற இடத்தையும், தலைநகராக்கி அரசாண்டனர். அவர்கள் தங்கள் தேசாதிபதிகளை வர்க்கூர் (Barkur), வங்காடி (Bangadi), மூடு (Mudu), விதர (Bidare). முல்கி (Mulki) என்ற இடங்களில் நியமித்திருந்தனர். இதன்பின் இவர்கள் ஆட்சி பலயீனமடைந்து ஹொய்சலராஜாக்களுக்கும், விஜயநகர ராஜாக்க ளுக்கும் கப்பம் கட்டி வந்தனர். கடைசியாக கேலதி (Keladi) ராஜாக்கள் காலத்தில் வீழ்ச்சியடைந்தனர் இவர்கள் சூரியகுலத்தவரும், பிற்கால மதுரைப் பாண்டிய அரசர்களுடன் சேர்ந்த ஏகக்குலத்த வராகும். கன்னடத்தை அரசு செய்த இச்சமண அரசகுலத்தவருக்கும் நாடார் (Natas) என்ற பட்ட முண்டு. இவ்வாறு சரித்திர ஆராய்ச்சியாளர்களாகிய

திரு. ரைஸ் அவர்களும், திரு. பிளீட் அவர்களும்,. திரு. சீவல் அவர்களும் கூறுகின்றார்கள். (B. L, Rice C. I E, M. R. A. S; J. F. Fleet Bo C. S M. R. A S; C R. Sewell M. C. S, M. R. A. S.)

இச்சான்றார வம்சத்தினரைப்பற்றி பல சரித்திர ஆராச்சி நூல்கள், தேவையான விபரங்களை சுவை யாகக் கூறுகின்றன. அந்நூல்கள் பின்வருமாறு....

1. கதம்பகுலம்,ஜோர்ஜ்.எம்.மொரயிஸ்ம்-The Kadamba Kula by George M. Moraes with a preface by Rev H. Heras S. J.

2. ஆதி கர்நாடகம், முதலாம் பாகம்,துளுவ, சரித்திரம், பாஸ்கர் ஆனந் சலேதோர். Ancient Karnataka, Vol I, History of Tuluwa by Bhaskar Anand, Saletore, M A. Ph. D (Lond )

3. றைஸ்—மைசூரும்—குடகபூமியும்; Rice: Mysore & (Coorge)

4. தென் இந்திய சரித்திர கல்வெட்டுகள், The Histoncal Inscriptions of S. India-Robert Sewell.

5. கன்னடத்து அரசகுலங்கள் J. F. பீலீட்; The dynasties of Kanarese districts by J. F. Fleet.

அரசனுகிய விஜயாதித்தன் சாந்தலாதேவியை விவாகம் செய்தான். அவன் இரண்டாம் ஜெகதீசனின் தாயாகும். பிஜலதேவியும், சாந்தலாதேவியும் இரட்டைச் சகோதரிகளாகும். பிஜலாதேவி ஜெகதேவனின் தாயாகும். ஜெகதேவன் பட்டிபொம்மிச்சபுரத்தை தலைநகராக வைதது அரசு செய்த சான்றூர வம்சத்து அரசனுகும். நூல்: கதம்ப குலம்'' ஜோர்ஜ் M. மொரயிஸ்

கதம்ப குலத்தவர் ஹொய்சலருடன் சண்டை செய்து வீழ்ச்சியடையும் தருவாயில், சான்றூர வம்சத்தவனை ஜெகதேவன் கதம்பகுலத்தவர் ஆட்சி செய்த ஒரு பகுதியை பிடித்துவிடுகின்ருன். இவ் விபரம் 1160 என திகதியிடப்பட்ட ஜெகதேவனின் கல்வெட்டில் காணப்படுகின்றது. நூல்: "கதம்ப குலம்'' ஜோர்ஜ். **M**. மொரயிஸ் 2.

வைரவன் என்ற பெயரிலிருந்து சடயன் வைரவன் காரகாளத்தை தலைநகராக வைத்து அரசாண்ட சான்றூர வம்சத்தவனென முடிவு செய்யலாம். இவர்கள் மேற்கே குடியெழும்பி சென்ற சான்ருருக்குள் பழைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகும். நூல்: "கதம்ப குலம்'' ஜேர்ஜ். M மொரயிஸ். பக்கம் 110. 3.

வடமேல் மைசூரில் துங்கநதியிலுள்ள கொப்ப நாட்டை மாருதேவா சாண்டான் அரசுசெய்தான். அவனது முழுப்பெயர் 'ஜெகதேக வீர ஹொய்சலன்' ஹொய்ச வம்சத்தவர்களுக்கு கீழ் அரசு செய்ததால் இப்பட்டம் வந்திருக்கும். 4.

“தென்னிந்திய சரித்திர கல்வெட்டுகள்” ருே பேர்ட் சீவெல். இக்கூற்றில் ஹொய்சல வம்சத்த வரின் ஆட்சியை ஏற்றுக்கொண்டதால் ஹொய்சலன் என்ற பட்டம் வந்தது எனும் வாதாட்டம் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. அமணன் எனப்படும் சான் ருர மன்னன் ஹொய்சல குமரியை விவாகம் செய் ததால் ஏற்பட்ட பட்டமாகும். அரசர்கள் தங்களுக்கு கீழுள்ளவர்கள் தங்கள் பட்டத்தை வைக்க அனும திப்பதில்லை. சான்ருர் சந்திரகுலத்தவரை அடிபணி யச்செய்த பின்னரே பாண்டியன் என்ற பட்டத்தை வைத்தனர். நாயக்கர் பாண்டிய நாட்டை ஆட்சி செய்ய தொடங்கிய பின்பே பாண்டியன் என நாம மிட்டனர்.

“தென்னிந்திய கல்வெட்டுகள்” என்னும் நூலில் 269-ம் பக்கத்தில் பின்வருமாறு கூறப்படுகின்றது. “கலச பகுதியை வைரராசன் என்னும் சான்ருர தலைவன் ஆட்சிசெய்தான்.” Mg 63-ல் குறிப்பிடப் பட்டுள்ளது. 5.

அதே நூலில் 124-ம் பக்கத்தில் சான்ருர மன் னனுகிய சாண்டாயதேவன் மைசூரிலுள்ள சிமோகா பகுதியில் யுத்தத்தில் வீரத்துடன் போராடிய ஒரு வனுக்கு பரிசளிக்கின்ருன். 6.

வடமேல் மைசூரிலுள்ள ஹமுசா பிரிவிலுள்ள கல்வெட்டுகள் அப்பகுதியை அரசுசெய்த சான்ருர இளவரசர்களின் வாழ்க்கையைப் பற்றி கூறுகின்றன

கங்கை அரசனுகிய ஆறுமூலிதேவனுக்கு சாத்தலா என்னும் ஒரு மகள் இருந்தாள். அவள் பல்லவ அரசனை விவாகம் செய்தாள். அவளது சகோதரியும், கங்கை நாட்டு இளவரசியுமாகிய காஞ்சலா சான்றுர மன்னனுகிய வீரதேவனை விவாகம் செய்தாள். நூல்: "தென்னிந்திய கல்வெட்டுகள்" பக்கம் 86- சீவெல். 7.

கி பி. 1088–9-ல் இரண்டாம் சாந்திவர்மன் என்ற சான்றுர மன்னன் வனவாசியையும், பானுங்கால் பகுதியையும் அரசாண்டான். இவன் ஆறும் விக்கிரமாதித்தன் கீழ் ஆரசாண்டான் இரண்டாம் சாந்தி வர்ம சாண்டான் பாண்டிய அரசகுமரியாகிய சிரியாதேவியை விவாகம் செய்தான்—கன்னடத்து அரசகுலங்கள்—J. F. பிலீட் பக்கம் 85. 8.

ஹல்சொக் என்பவரே கற்பனையென நினைக்கப் பட்டவைகளை உண்மையானவை என நிரூபித்தார் திரு. ரைஸ் என்பவரின் நூலில் ஆளுப வம்சத்தவருடன் பின்வரும் அரசகுலங்களும் தொடர்பு படுத்தப்படுகின்றன, கலச, கார்காளம் பகுதிகளைச் அரசு செய்தவர்கள், மற்றும் சங்காள்வார், நாடாள்வார், சான்றுர் என்பவர்கள் ஆகும்-"ஆதி கன்னடம்" முதலாம் பகுதி பாஸ்கார் ஆனந் சலெதோசர் M. A. Ph D (Lon) பக்கம் 106.

மேற்கூறிய நூலில் பின்வரும் விபரங்கள் காணப்படுகின்றன. ஹொஸ்குண்ட பகுதியை அரசு செய்த சிற்றரசர் சான்றுர வம்சத்தைச் சேர்ந்த

வர்களாகும். அவர்கள் முதல் களிச என்னும் நகரத்தை இராசதானியாக வைத்து அரசுசெய்தனர். பின் ஹொஸ்குண்டத்தை தலைநகராக்கிக் கொண் டனர். இதற்கு முன் சித்தேஸ்வரன் கோவில் கல் வெட்டின் முக்கியத்துவத்தை ஆராய்ந்தோம். அக் கல்வெட்டு கி பி 1164-ல் ஆளுப வம்சத்வனாகிய ஜெகதேவராயன் தனது ஆதரவாளனான வீரசாண் டாய தேவனுக்கு ஹொஸ்குண்டத்தைச் சேர்ந்த வீரராசனுக்கு எதிராக உதவிசெய்ததை விபரமாக எடுத்துக் கூறுகின்றது. பக்கம் 263. 10

அதே நூலில் .......... ஆளுப வம்சத்தவனாகிய மூன்றாம் குலசேகரதேவ ஆளுபண்டாரதேவன் சுதந் திரமாக ஆட்சி செய்தான் என்ற கூற்றை ஏற் றுக்கொள்ளமுடியாது. முதலாவதாக சான்றா வம் சத்தவர்கள் இக்காலத்தில் ஆளுப வம்சத்தவரின் பகுதியை முற்றாக ஆட்சி செய்யத் தொடங்கிவிட் டனர். இரண்டாவதாக 1346-ல் புதிய கர்நாடக அரசின் (விஜயநகர அரசு) ஆதிக்கம் இப்பகுதியில் பலமடையத்தொடங்குகிறது. இப்புதிய அரசவம்சத் தவர் காலப்போக்கில் ஆளுப, சான்றார வம்சத்த தர்களை முற்றாக அழித்துவிடுகின்றனர். (பக்கம் 145) 11.

அதே நூலில்குறிப்பிடப்பட்டுள்ள ஆளுப குமார பாண்டிய ஜெகசிங்கராசனின் ஆட்சியை கி. பி. 9-ம் அல்லது 10-ம் நூற்றாண்டில் நடந்திருக்க வேண்டுமென்று முடிவுசெய்யலாம். அப்பொழுதே ஆளுப வம்சத்தினருக்கும், சான்றார்களுக்கும் விவாக

தொடர்புகள் நடைபெற்றன. சான்றோர்களிடமிருந்தே பாண்டியன் என்ற பட்டத்தை ஆளுபவ வம்சத்தினர் பெற்றனர். பக்கம்: 156. 12.

அதே நூலில் இக்கல்வெட்டு காணப்படுகின்றது "சான்றோர வம்ச மன்னனின் போர்வீரனாகிய மேடுமானன் உதயவரத்தில் சிறந்த முறையில் போராடினான்." இது உதயவரத்தில் கண்டெடுக்கப்பட்ட கன்னடத்து மொழியிலுள்ள கல்வெட்டாகும். 13.

கன்னடத்தில் ஆட்சிசெய்த சான்றோர வம்சத்தின் முதல் மன்னன் ஜினதத்த ராயன் என்பவனாகும். அவனைப் பற்றிக் கன்னட கல்வெட்டில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. மைசூரும் குடக பூமியும் என்னும் நூலில் திரு ரைஸ் அவர்கள் 138-ம் பக்கத்தில் இக்கல்வெட்டின் விபரத்தை எழுதியுள்ளார். "ஜினதத்த இராயனுடன் சான்றோர வம்சத்தவரின், ஆட்சி தொடங்குகிறது இவர்கள் உக்கா வம்சத்தைச் சேர்ந்தவர்கள். பத்மாவதி தேவதையை வணங்குபவர்கள். வடமதுரைக்கு அதிபதிகளாக வரம் பெற்றோர், பட்டிபொம்மிச்சபுரத்தை தலைநகராக வைத்து முதல் முதலாக ஆட்சி செய்யத் தொடங்குகின்றனர்." 14.

மைசூரும் குடக பூமியும் என்னும் நூலில் மேலும் கூறுவதாவது ....... உதயவாறு, பாரகூறு, மங்கலூர் போன்ற பகுதிகளிலும் சான்றோருடைய ஆதிக்கம் பரவியது. பக்கம் 228. 15

ஆளுப அரசகுத்தவருக்கும் சான்றுர வம்சத்தினருக்கும் நடைபெற்ற விவாகங்களால் இரு வம்சங்களும் சான்றுர வம்சம் என்ற பெயருடன் இயங்கத்தொடங்கியது. அவ்விபரத்தை மேற்கூறிய நூலில் 228-ம் பக்கத்தில் காணலாம் ''சாண்டாலிக'' ஆயிரத்தை பலமுள்ள அரசாக ஆக்கியவன் ஹிரணியனகாபா விக்கிரம சாண்டான் ஆகும். அவனுக்கு கந்துக்காச்சாரியா, தனவினோதா, என்ற பெயர்களுமுண்டு. அவன் ஆளுப வம்சத்தை சேர்ந்த வனவாசி அரசனுகிய காமதேவனின் மகளாகிய இலட்சுமிதேவியை விவாகம் செய்தான். அவர்களுக்கு பிறந்த புத்திரனின் பெயர் காஜி சாண்டான் ஆகும். அவன் றனன்ஜெயாவின் மகளான அஞ்சலாதேவியை விவாகம் செய்தான். பலகாலத்திற்குபின் அரசுசெய்த அமணதேவன் ஹொய்சலாதேவியை விவாகம் செய்தான். அவர்களுக்கு இரு குழந்தைகள் பிறந்தன. அவனது மகளின் பெயர் தலைப தேவனுகும். சோழ நாட்டில் 'தலைவன்' என்ற சொல் ''தளையன்'' என மருவியது போன்று, கன்னடத்தில் அச்சொல் ''தலைப'' என மருவியது இது சான்றுர்களுடைய பட்டமாகும். வீரயரசி பங்கய ஆளுபனை விவாகம் செய்தான். தலைபதேவன் பங்கய ஆளுபனின் சகோதரியாகிய மங்கயக்கரசியை விவாகம் செய்தான். தலைபனின் இரண்டாவது இராணியின் பெயர் கலையரசியாகும். அவள் கங்கை அரசனுகிய பளையதேவனின் மகளாகும். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். வீரசாண்டான் என அழைக்கப்பட்ட வீரதேவன், சிங்கிதேவன்

வாமதேவன் என்பவர்களாகும். வீராங்க வீர சாண்டானின் ஒரு மனைவியின் பெயர் பிஜலாதேவியாகும். அவன் கதம்ப பகுதியை அரசுசெய்த நொலம்ப நரசிங்கதேவனின் மகளாகும். 16.

அதே நூல் 14-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் சான்ருர வம்சம் கன்னடத்தில் மற்றையோர் எதிர்த்து நிற்க முடியாத மட்டில் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டது. என கூறுகின்றது. பக்கம் 237 17.

மேலும் அந்நூல் கூறுவதாவது "கொற்கையிலுள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பாண்டிய தேவன், பாண்டிய சக்கரவர்த்தி புஜபல கவி ஆளு பண்டார தேவனுகும். அவன் கி. பி. 1113 முதல் கி. பி. 1155 மட்டும் ஆட்சிசெய்தவனுகும்.

முதலாவதாக இக்கல்வெட்டு எமக்கு நிரூபிப்ப தென்னவென்ருல் இப்பாண்டிய சக்கரவர்த்தியாகிய புஜபல கவி ஆளு பண்டாரத்தின் முடிசூடிய அரசி "பாண்டியன்" என்ற குடும்ப பட்டத்தையுடைய சான்ருர இளவரசியாகும். இங்கு பட்டிபொம்மிச்சபுரத்திலுள்ள சாண்டாருடன், பாண்டிய அரசகுலத்தவராகிய சாண்டார் விவாகத் தொடர்பு வைத்துக்கொள்வதைக் காண்கின்ருேம்.

இரண்டாவதாக உக்ர வம்சத்தை சேர்ந்த பாண்டிய இளவரசனுக்கும், சான்ருர இளவரசிக்குமிடையே விவாகம் நடைபெறுகின்றது. இவர்களுக்கிடையே இருந்த நெருங்கிய சொந்தத்தை அறிய முடியாமலிருக்கின்றது (பக்கம் 237) 18.

சரித்திரக் கலாநிதி
ரைஸ் அவர்களின்
நூலில் பிரதிபண்ணப்பட்டது.

மைசூரில் பட்டிபொம்மிச்சபுரத்தை தலை நகராக வைத்து அரசு செய்த ஜினதத்தனின் சந்ததியினராகிய சான்றுர வம்சம் 800 க்கு முன் அரசுசெய்தவர்களின் பெயர்கள் சரியான விபரமின்மையால் விடப்பட்டுள்ளன.

விக்கிரமன் (கி.பி. 800) (சமுதுகாச்சாரியா தனவினோதா)
|
சைகன் (கி.பி. 825) ஆளுப வம்சத்து இளவரசியாகிய றணஞ்ஜெயாவை விவாகம் செய்தான்.
|
முதலாம் வீரன் (கி. பி. 850) ஜாகலாதேவியை வி. செ.
|
கன்னரன் — காவதேவன் (கி. பி. 875) சாந்தலாதேவியை வி. செ.
|
தியாகி (கி. பி. 900) நாகலாவை வி. செ.
நன்னி (கி. பி. 925) சிரியாவை வி செ.
இராயன் (கி. பி 950) அங்கவை வி. செ.
சிக்கவீரன் (கி. பி. 975) பிஜலாவை வி. செ.
அமணன் (கி. பி. 1000) ஹொய்சலா குமரியை வி. செ.
|
(மகள்)
வீரள, வீரயரசி
ஆளுப அரசகுமரனுகிய வங்கதேவனை (வி. செ.)

தைல, தைலப (முதலாம்) 1025
முதல் மனைவி (ஆளுப இளவரசி மங்கடக்கரசி)
இரண்டாம் மனைவி (கங்கை அரசி கலையரசி)
|
இரண்டாம் வீரன் — சிங்கிதேவன் — முதலாம் வாமதேவன்

இரண்டாம் வீரன்
வீர வீரங்கா (1062)

சிங்கிதேவன்

முதலாம் வாமதேவன்

தைல-இரண்டாம் தைலப (1077)
(தலைப) தளையன்

கோகில-கோவிந்தர
(நன்னி சாண்டான்)

ஒடுங்கன் இரண்டாம்
(விக்கிரம வாமதேவன்
சாண்டான்)
பாண்டிய இளவரசியாகிய
சாந்தலாதேவியை வி. செ.

பூம்பாதேவி
(மகள்)

சிறி வல்லபன்
(விக்கிரம சாண்டான்)
1096

இரா.. சாண்டாண் வோபுங்கன்
1096

மூன்றும் தைலன்
(தைலுக, தளைய தளையன்)
அக்காதேவியை வி செ.
(1089—1096)

நாலம் தைலன்
(1115—1162)

காமதேவன்
(பாண்டிய இளவரசியாகிய
பிஜலாதேவியை வி. செ.)

சிமுலன்

அமணன்

ஜெகதேவா
(ஹொய்சல அரசனை
விஷ்னுவர்தனல்
தோற்கடிக்கப்பட்டான்)
1160

சிங்கிதேவன்

(மகள்)
அலியாதேவி
கங்கை அரசனை வி. செ.

ஜெயகேசி
(1140)

சாண்டாய தேவன்
(1189)

மேலும் இந்நூல் பின்வரும் விபரத்தைத் தரு கின்றது. "கன்னட நாட்டை ஹொய்சலரிடமிருந்து விடுதலை பண்ணும் நோக்கத்துடனேயே பாண்டிய சக்கரவர்த்தியாகிய வீர ஜெகதேவராச பாண்டியன் சான்றுர இளவரசியை விவாகம் செய்தான். இவ் விவாகத்தால் பாண்டியர் பட்டிபொம்மிச்சபுரத்தி லுள்ள, சான்றுர, ஆளுப அரசகுத்தவரின் நட்பைப் பெற்றுக்கொண்டனர். பாரகூறுவில் சான்றுர இள வரசனுன ஜெகதேவா, மகாதேவா என்ற தெய்வத் திற்கு பூமிதானம் செய்யும் விழாவிற்கு சமூகங் கொடுத்து, பாண்டிய அரசன் பட்டிபொம்மிச்சபுர சான்றுருடன் நட்பைப் பலப்படுத்திக்கொண்டான்."
(பக்கம் 239) 19.

வைரவனின் மகனுகிய வீரபாண்டியன் களச பகுதிக்கு அதிபதியாக இருந்தான். அவன் சமண சமயத்து கோபுரத்தை கார்காளத்தில் கட்டியெழுப் பினுன். இவனது குடும்பம் ஹமுசத்திலுள்ள சான் றுர வம்சத்தவருடன் ஒன்று சேர்ந்தவர்களாகும். (தென்னிந்திய சரித்திர ஆதாரங்கள்—றெபேர்ட் சீவல்.) 20.

பாஸ்கர் ஆனந் சலேதோர் என்பவரால் எழுதப் பட்ட "ஆதிகன்னடம்" என்னும் நூலில் கொரக கல்வெட்டின் விபரங்கள் கூறப்பட்டுள்ளன. கி. பி. 1408-ல் எழுதப்பட்ட கொரக கல்வெட்டு பின்வரும் விபரங்களைக் கொடுத்துள்ளது. இது சான்றுர அர சனுன வீர வைரவனுலும் அவனது மகனுகிய பூபால பாண்டியனுலும் கோவிலுக்கு கொடுக்கப்பட்ட கா ணியை உறுதிப்படுத்துகின்றது. இவரகள் கேர்வே

சத்தை தலைநகராக வைத்து அரசு செய்தான். பலத்கரகனவில் வசந்தகீர்த்தி இராவுலா நடை பெறும் பொழுது பார்ஸ்வநாதாவுக்கு பூசை செய்தலும், ரிஷிகளுக்கு அரசனால் கட்டப்பட்ட கொத்தளத்தில் அன்னதானமிடுதலும் முக்கிய வைபவங்களாகும். இக்காலத்தில் சான்றுர-ஆளுப வம்சத்தினரின் தனி ஆட்சி நடைபெறுகின்றது. 21.

(பக்கம் 415.)

திரு. ரெபேர்ட் சீவெல் சான்றுர மன்னனாகிய இரண்டாம் வீரனைப் பற்றிய கல்வெட்டு ஆதாரங்கள் எடுத்துக்காட்டியுள்ளார். அது பின்வருமாறு கூறுகின்றது. இரண்டாம் வீரன் தனது அரசை (மேல் கன்னடம்) அரசுக்குரிமையில்லாதவர்களாகிய சாளுக்கியரிடமிருந்து காப்பாற்றினான். கல்வெட்டு

---

இல-EC Viii இல. 47. 22. நூல்: தென்னிந்திய சரித்திர ஆதாரங்கள் ரெபேர்ட் சீவெல்.

இந்த விபரத்தையும் இன்னும் பல விபரங்களையும் கோராக என்னும் இடத்திலுள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன. இது மார்கழி மாதம் 27-ம் திகதி வியாழக்கிழமை 1408-ம் ஆண்டு எழுதப்பட்டதாகும்.

கேர்வாசாவை தலைநகர வைத்து அரசுசெய்த வீரவைரவ சம்பாலனும் அவனது மகனாகிய பூபால பாண்டியனும் இந்த கல்வெட்டில் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். பூபால பண்டியன் வீர வைரவ சம்பாலன் கீழ் யுவராஜனாக அரசு செய்தான்.

இவர்கள் சான்ருர் என்பதை இந்த கல்வெட்டிலுள்ள பின்வரும் சொற்கள் நிரூபிக்கின்றது.

"வட மதுரைத் தலைவன், பட்டிபொம்மிச்ச புரத்திற்கு அரசுரித்துடையவன்—பத்மாவதி தேவதையை வணங்குபவன்—குரங்கு கடவுளை கொடியில் சின்னமாக வைத்திருப்பவன்—சிங்கத்தை விருதாகயுடையவன் உக்கர வம்சத்தவன்—ஜினதத்தனின் குடும்பத்தைச் சேர்ந்தவன்.

ஜினதத்தன் கன்னடத்தில் சான்ருர வம்சத்தவரில் முதல் மன்னனுகும். ஜினதத்தனின் குடும்பத்தவன் எனக் கூறும் பொழுது தானும் சான்ருன் என பாண்டியன் பெருமைப்படுகின்ருன்.

சென்னையில் கல்வெட்டு ஆராய்ச்சியாளராகிய திரு. K. V. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் பின்வருமாறு மேற்கூறிய கல்வெட்டை ஆராய்ந்து கூறியுள்ளார்கள் "மேற்கூறிய பூபால பாண்டியனும் வீர பாண்டியனும், ஒருவனேயாகும். வீரபாண்டியனே கார்காளத்தில் புகழுடைய கோர்மளாவின் சிலையை கி. பி. 1432-ல் கட்டினுன். பூபால பாண்டியன் மதுரைக்கு அரசனுகியதும் வீரபாண்டியன் என்ற பெயரினுல் அழைக்கப்பட்டான். மைசூரும் குடக பூமியும் 23. திரு. ரைஸ் அவர்கள் (பக்கம் 239)

தென் மைசூரில் உடையார் வம்ச ஆட்சியைப் பற்றி மேற்கூறிய நூலில் கூறப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவனுகிய அபிநப பாண்டியதேவ உடை

யான், தான் ஜினதத்தனின் குடும்பத்தவனென கல்வெட்டில் கூறியுள்ளான். இதனுல் உடையார் வம்சத்தவரும் சான்ருர் என கல்வெட்டு கூறுகின்றது 24.

மைசூரில் சாண்டார் இரு குடும்பங்களாக பிரிந்து ஆட்சிசெய்தனர். மௌரியருடன் தெற்கே வந்த சான்ருர், ஆட்சியாளர்களாக மைசூரில் குடியேறினர். வட மதுரையிலிருந்து படையெடுத்து வந்து, கன்னடத்தை ஆட்சிசெய்த ஜினதத்தனின் சந்ததியினர் மற்றைய பிரிவினராகும். முன்கூறியவர் கதம்ப குலத்தவர் என்ற பெயருடன் ஆட்சி செய்தனர். பின்கூறியவர் சான்ருர வம்சத்தவர் என்ற பெயருடன் ஆட்சிசெய்தனர்.

1. After Karikalan the Cholas once again sink into obscurity. Their power was laid low by the Kalabhras and they remained submerged during the period of Pallava-Pandyan ascendency. Their line, however never became extinct. Round the Telungu districts there ruled Princes claiming descent from Karikalan. They did not lose their hold on Uraiyur nor were they completely ousted from the region of the Kaveri P 220. Ceylon and Indian History L. H Horace Perera B.A

2. This was perhash partly accelerated by the invasion of the Kadamba Kingdom by the Santara King, Jegadeva. The latter seems to have taken advantage of the weakness of the Kadambas, caused no doubt by their protracted struggle with the Hoysalas, and encroached on their territories This is evidenced by an inscription of Jegadeva, dated 1160, which says that he was ruling over the Banavasi "Twelve Thousand" besides his hereditary province of Santalige "Thousand" Cf The Kadamba Kula George M. Moraes.

3. From the name Bhairava we may conclude that the Sareya-Bhairave was one of the Santara Chieftains of Karkala. Possibly this was the old family of the Santaras that migrated westwards-Page 110 Cf The Kadamba Kula George. M. Moraes.

4. In N. W. Mysore Koppanad tract on the Tunga river was ruled by the Santara Marudeva, who bore the name "Jeka-deka-vira-Hoysala", in acknowledgement apparently of Hoysala overlordship. E. C (vi Kplo) the Historical Inscriptinos of S. India, Robert Sewell-Madras, 1932.

5. In Mg. 63 the chief Bhairarasa, son of Bhairarasa is shown to be ruling the Kalasa country. He is given the prefix of "Santara' Page 269 Cf The Historical Inscriptions of' S. India, Robert Sewell.

6. The Santara Chief Santaya deva gave a grant in the Shimoga district of Mysore in reward to a man for bravery in fight. (E. C. Viii Sa 95 ) P. 124. Cf The Historical Inscriptions S. India Robert Sewell.

7. Some inscriptions at Humcha in N. W. Mysore throw light on the pedigree of the Santara chiefs of that place. We learn from one that the Ganga chief "Arumulideva" had a daughter, Chattala. who was married to the Pallava chief and that her sister, the Ganga princess Kanchala, was married to the Santara chife Vira or Bira Deva.(E. C viii Nr 35, 36, 39, 40.) Cf The Historical Inscriptions of S. India–P. 86.

8. In Saka 1010 (AD 1088-9), the Vibhava Samvatsara, we find Santivarma II, Santa or Santaya governing the Banavasi "Twelve Thousand" and the Panungal or Hangal "Five hundred" as the feudary of Vikramaditya VI.

His wife was Sriyadevi of the Pandya family Cf. "The dynasties of the Kanarese districts by J F. Fleet" Page 85.

9. The Ephigraphic Report of the Southern circle for 1926 P 106-It was Hultzch who converted suppositions into facts thus—Mr. Rice's volume contains many records of certain later families, which seem to be connected with the ancient Alupas-They are the Changalvas, Kongalvas, Nadalvas, Santaras and the rulers of Kalasa and Karkala Cf. "Ancient Karnataka" Vol I-"History of Iuluwa by Bhaskar Anand Saletore M. A. Ph D Lond) P. 106.

10. The Hosgunda chieftains were of the Santara stock, with their chief town, first at Kallise and then at Hosgunda, which they made their, rajadhani. We have already discussed the importance of the Siddhesvara temple "viragal" which describes the aid Alupa Jegadevarasa gave his ally Vira Santaradeva. in A D. 1164 against Birarasa of Hosgunda P. 263 "Ancient Karnataka" Vol I "History of Tuluwa" by B A Saletore.

11. Kulasekharadeva Alupendradevas III. claims for independence as expressed in the....

cannot be justified in view of the activities not only of Santaras, who had already gained grouud within the limits of the Alva Kingdom; but also of those of another Karnataka power which had successfully cast both over the Santaras as well as the Aluphas its sway since A. D. 1346 The new Karnataka power was fully established later as the Vijeyanagara Empire (1385-6). P 145. "Ancient Karnataka" Vol I by B. A. Saletore.

12. We may therefore place Alupa Kumara Pandya Jeyasingarasa in the ninth or tenth century A D. when the Alupas had dynastic connection with the Santaras, from whom they borrowed the name Pandya P. 156 "Ancient Karnataka" Vol I by B A. Saletore.

13. "Svasti Sri Santararaalu Medumanam illi eridu vildan"—"Ancient Karnataka" Vol I

14. With Jinadatta Raya the Cantas or the Santaras, who were of the Ugra-vamsa, worshippers of the goddess Padmavathie, boon lords of Northern Madura appear for the first time in the Nagar Taluka with Patti Pombuchcha as their capital, Rice—Mysore and Coorge p. 138.

15. The Santares had extended thir influence to Udayavara, Barakuru and perhaps even to Mangauru as well.
Cf-Rice—Mysore and Coorge P. .228.

16. One of the Santara (Kings who created the Santalige 'Thousand' into a separate Kingdom was Hiranyagabha Vikrama Santara (Kandukacharya, Danavinoda) Hiranyagarbha married Lakshmi Devi, daughter of the Banavasi King, Kama Deva (Alva vamsa). Their son was Cagi Santara, who married the daughter of Alva Rananjaya called Enjala devi. Long after Cagi Santara had ruled over the Santalige "Thousand" there came Ammana Deva, who married Hocula (Hoysala) Devi. By her he had two children, a daughter named Birabbarasi and son called Tailpa Deva. Birabbavarasi was given in marrage to Banki Alva. Tailapa Deva married Banki Alvas younger sister called Mankabbharasi. Tailapa's second gueen was Kalleyabbarasi, daughter of the Ganga King Paleya Deva. They had three Children–Bira Deva (Vira Santara), Singi Deva, Barmma Deva. One of the Queens of Birunge Vir Santara was Bijjala Devi, daughter of Nolemba Narasingha Deva. The latter was ruling the Kadamba area. Cf. Rice–Mysore and Coorge Page 228.

17. In fact by the first half of the 14t hcentury. the Santaras had secured an unassailable position in Tuluwa. page 237.
Cf Rice–Mysore and Coorge.

18 The Pandya Deva, mentioned in the inscriptions from Kotekai was no other than the Pandya Chakravartin, Bhujabala Kavi Alupendara Deva, who reigned from A D. 1113 to 1155

First it proves beyond doubt that Pandyan Chakravartin Bhujabala Kavi Alupendra's crowned queen was a Santara princess with the cognomen of "Pandya". Here we have another link.

Secondly it introduces a Santara figure of Ugra-vamsa, whose exact relationship with the Santara princess cannot be determined. Cf Rice-Mysore and Coorge, Page 237.

19. It was to protect the Tulu country against the aggressive designs of the Hoysalas that Pandyan Chakravartin Vira Jegadevarasa Pandya not only cemented the Alupa-Santara alliance by marrying a Santara princess, but also bp witnessing a grant of land to the god Mahadeva in Barakuru by the Santara Chicf Jegadeva. page 239 Rice-Mysore & Coorge.

20 The Jain colassus of Gomata at Karkala was set up in this year by Vira Pandya, Chicf of Kalasa, son of Bairava His Family was allied to the Santara family of Hamucha.

(E. I. viii 122, V. R ii, S. Kan 208; 63 of 1901: IA ii 353; E I vii 109)–The Historical Inscriptions of S. India, Robert Sewell.

21 The Koraga record dated Saka 1331 (A. D. 1408) registered the gift of land by the Santara King, Vira Bhairava, and his son, Pandya Bhupala, ruling from the capital Kervese, at the instance of Vasantakirti Ravula of the Bulatkaragana for offerings to the image of Parsvanatha and for feeding Risis in the basti at Barakuru built by the King has already been commented upon-while delineating the relations between the Alupas and the Santaras–530 of 1928 P 415. "Ancient Karnataka" Vol I by Bhaskar Anand Saletore M. A., Ph D (Lond)

22. Vira II: He is said in E. C viii No. 47, the date of which is 1062–63, to have freed his state from those who had no right to it (Chalukyas have no right to rule S. Mysore) The Historical Inscriptions of Southern India by Robert Sewell.

23. The stone inscriptions, which give us this and other details, was found in Koraga– A. D. 1408 Dec. 27, Thursday.

The record was issued when Veera Bhairava Ksampala and his son Pandya Bhupala were ruling from the capital Kervese Evidently Pandya Bhupala was associated with his Father as a Yuvarajah that the rulers were of Santara family is proved by this inscription "lord of Northern Madura, boon lord of Patti Pombuchchapura, worshipper of the goddess

Padmavathi, one who head the banner of the monkey god and the insignia of a lion, one who belonged to the Ugra vamsa and the family of Jinadatta".

The Madras Govt Epigraphist, Mr. K. V. Subramaniam Aiyar, has identified the Pandya Bhupala of the above inscription with the Vira Pandya, who built the famous Gomala statue at Karkala in A. D 1432 Rice-Mysore and Coorge, Page 239.

24. Abhinava Pandya Deva Odeya of the family of Jinadatta: his stone record of Saka 1478 (A D. 1556-7) is found in Hiriyangangadi in Karakala (70 of 1901, Ephigraphic Report for 1926-7 pp 108-9)

# ★ சோழ வம்ச நாடார்களின் வரலாறு ★

# சோழ வம்ச நாடார்களின் வரலாறு

In the Manu Smrti it is stated that "from a vratya of the Ksatriya caste sprang the Jalla, the Malla, the Lichchavi, the Nata*, the Karana, the Khasa and the Dravida.

(Some Ksatriya tribes of Ancient India by Bimala Charan Law, Ph D, M. A. D. L.)

பிமல சாறன் லோ என்பவரால் குறிப்பிட்டபடி நாடார் மன்னர் தனி இனத்தவர் என்றும், பொதுவில் வேறு மன்னர்களும் திராவிடரில் உண்டு என்றும் விளக்கியுள்ளார். மேற்கூறிய மன்னர்கள் ஆரியகுலத்தவரல்ல. அக்குறிப்பில் திராவிட மன்னர்கள் என கூறியிருப்பது சங்க காலத் தொடக்கத்தில் தென்னிந்தியாவை ஆட்சி செய்த மன்னர்களாகும். நாடார் வட இந்தியாவை சேர்ந்தவர்களானபடியால் திராவிடருடன் சேர்த்துக்கொள்ளப் படவில்லை. ஆனால் நாடார்களும் சிந்து நாகரிக வழித் தோன்றல்களாகிய திராவிடருடன் தொடர்புள்ளவர்களாகும். நாடார் குலத்தவர் சூரியவம்சத்தைச் சேர்ந்தவர்கள். அதனால் சான்றோர் அல்லது சான்றார் என அழைக்கப்பட்டனர்.

"சான்றோன், சான்றான், என்ற சொற்கள் சால் என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். திரிகடுகம் பதினெண்கீழ்க் கணக்கிலொன்று. அதில் "சான்றோன், சான்றோர்" என்னும் பண்டைய பதங்கள்

"சான்றுன் சான்றுர்" எனத்திரிபு பெற்றதைக் காண்க—திரி க 82: "சான்றுருட் சான்றுன் எனப் படுதல் எஞ்ஞான்றும்" வணக்கத்திற்குரிய பிதா H. S. தாவீதடிகள் **Rev Fr H. S. David** (B. A.-Hons) 1st class History M.A. (Sanskrit), Ph D (Tamil) தனது நூலாகிய—**"An Etymological and Comparative Lexicorn of the Tamil Language"** ஒப்பியல் தமிழ் அகராதி முதலாம் பாகத்தில் கூறியுள்ளார். புனல் நாடன், சென்னிநாடான், காவிரிநாடன், கழனிநாடன் என்பன சூரியகுல மன்னர்களின் பட்டங்களாகும்.

சந்திரகுப்த மௌரியனின் படையெடுப்புக் காலத்தில் சான்றுர் சோழநாட்டில் வந்து குடியேறினுர்கள். (கி. மு. 322). அசோகன் காலத்தில் இன்னும் அனேகர் வந்து குடியேறினர். இவர்கள் ஆந்திர, கன்னட பகுதிகளில் ஆட்சியாளர்களாக அமர்த்தப்பட்டனர். இக்காலத்தில் சோழநாட்டின் ஒரு பகுதியை திரையர் எனப்படுவோர் ஆட்சிசெய்தனர். இவர்கள் மீனவர்களாகும். உள்நாட்டை குறும்பர் ஆட்சிசெய்தனரென பல சரித்திர ஆராட்சியாளர் கூறுகின்றனர். ஆந்திர, கன்னட பகுதிகளைக் கைப் பற்றிய சான்றுர், சோழநாட்டிலும் தங்கள் பொற்காலத்தை ஆரம்பிக்க வழிதேடினர். அக்காத்தில் தமிழ்நாட்டு மன்னர்களிடையே நிலவிய பிரிவும், பலவீனமும் நாடார்குல மன்னர்களுக்கு அப்பகுதி ஆட்சியைக் கைப்பற்ற வசதியளித்தது. இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றியதும் கிராமணி அல்லது

தலைவர் என மக்களால் அழைக்கப்பட்டனர் தலை+ ஆள் என்ற சொல்லே "தளையர்" என மருவியது. இன்றும் யாழ்ப்பாணத்தில் சான்றார் தளைய பகுதி எனவே அழைக்கப்படுவர். கன்னடத்தை ஆட்சி செய்த சான்றார்களுக்கும் இப்பட்டம் இருந்ததை முன் கண்டோம்.

ஒரு தேசத்தில் பல ஊர்கள் உண்டு. ஒவ்வொரு ஊருக்கும் ஒரு தலைவன் இருப்பான். அவனது மூப்பிலே அவ்வூர் நடைபெறும். அவ்வூர் புகழுக்காகவும், மக்களது நன்மைக்காகவும் அவன் வாழ்வான் இப்படியான தலைவர்களுக்குள் வீரமுள்ளவர்களும் பூமியை ஆள விரும்பியவர்களும் இருந்தனர். இப்படிப்பட்டவருக்குள் ஓர் உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர்களே தமிழ்நாட்டில் குடியேறிய தளையன்கானத்தைச் சேர்ந்த சான்றாராகும். "கானம்" சான்றார் வாழும் இடத்தைக் குறிப்பிடும் சொல்லென திரு. (H R. Pate கூறுகின்றார். **H R. Pate I.C.S. Gazeteer of Tinnevely District** 1911—1914) இவர்கள் ஒன்று சேர்ந்ததின் முக்கிய நோக்கம். நிலம் பிடித்து ஆட்சிசெய்வதேயாகும். இவர்கள் கிறிஸ்துவுக்குப் பின் முதலாம் நூற்றாண்டில் ஆட்சியைக் கைப்பற்றினர். கரிகாலன் சான்றார வம்சத்து மன்னனாகும். சங்ககாலத்தில் சூரிய குலத்தவர் சான்றோர், சான்றார் எனவும் பள்ளப்பகுதியில் வேளாண்மை செய்வோர் பள்ளர் எனவும், வியாபாரம் செய்வோர் வணிகர் எனவும் அழைக்கப்பட்டனர். சங்ககாலத்தில் தமிழர்களிடையே தொழில் (சாதி) வேற்றுமையிருக்கவில்லை.

சங்ககாலத்தில் சோழ அரசர்களுக்குள் இரு வம்சத்தவர் வாழ்ந்தனர், கிள்ளி வம்சத்தினர், சென்னி வம்சத்தினர் என்பனவாகும். சென்னி வம் சத்தினரே சான்றூர்களாகும். சுந்தரமூர்த்தி சுவா மிகள் தேவாரம் இதைக் கூறுகின்றது.

"கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற
கொடிறன் கோட்புலி சென்னி நாடார்
தொல் புகழ் நாட்டியத்தான் குடி
நம்பியை நாளு மறவார்"—

இவர்கள் தளையன்கானத்தவர் என அழைக்கப் பட்டனர். வட இந்தியாவிலிருந்து ஆக்கிரமிப்பாளர் களாக படையெடுத்து வந்த சான்றூர் கிள்ளி வம் சத்தினரை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றினர். உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னி புகழுள்ள சான்றூர வம்சத்து சோழ மன்னனாகும். கரிகாலன் இவனது மகனாகும். கரிகாலன் காலத்திலேயே சேர நாடும் சான்றூர் ஆட்சிக்குட்படுகின்றது. உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னியின் ஆட்சி காலமே பெரிப்புளு ஆசிரியர் வாழ்ந்த காலமாகும் (கி.பி. 70) "தமிழர் சால்பு" க. வித்தியானந்தன் M. A. Ph D. P. 29. மேற்கூறிய ஆசிரியராகிய பெரிப்புளுசு தெற்கே சாண்டான் ஆட்சி மிக உச்சநிலையை அடைந்துள்ளதாக கூறியுள்ளார்.

சூரிய வம்சத்தவர்களாகிய சான்றூரின் இனக் கொடிகள் புலிக்கொடியும், சிங்கக்கொடியுமாகும். இம்மிருகங்களை தமிழ்நாட்டில் காணமுடியாது.

பிகார், வங்காளப் பகுதிகளில் இம்மிருகங்கள் அதிகமாக காணப்படும். அதனால் சான்றோரின் வட இந்திய தொடர்புக்கு இது சிறந்த சான்றாகும். கரிகாலனின் தந்தை தளையன்கானத்தைச் சுற்றியுள்ள ஊர்களையும் சேர்த்து ஆட்சிசெய்தவனாகும். தளையருக்குச் சொந்தமான பகுதி "தளையன்கானம்" என அழைக்கப்பட்டது கரிகாலன் சிறுவனாக இருக்கும் பொழுதே தாய் தந்தையர் இறந்துவிட்டனர். அரண்மனையில் உள்ளவர்களும் பிறவூர் தலைவர்களும் அரசகுமரனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்தனர். இளவரசன் குகையில் அடைக்கப்பட்ட சிங்கக்குட்டியைப் போன்று செய்வதறியாது திகைத்தான். சுதந்திர பறவையாக வெளியேறும் நன்நாளை நோக்கிக்கொண்டிருந்தான். ஓர் நாள் இவ்விடத்திலிருந்து தப்பித்து தனது மாமனாகிய இரும்பிடதளையார் (Irumbida Thalaiyar) என்பவனின் வீட்டுக்குச் சென்று தஞ்சம் புகுந்தான். (திராவிடன்-E. L தம்பிமுத்து). கரிகாலனின் மாமனாரின் பெயர் இரும்புடைய தளையார் என்று இருக்கவேண்டும். (இரும்பு ஆயுதங்களையுடையவன் என்பதே அர்த்தமாகும்.) கரிகாலன் தனது மாமனாரின் உதவியுடனும், மக்களின் உதவியுடனும் தனது படைக்கு தலைவனாகி எதிரிகளை அடக்கி ஆட்சியைக் கைப்பற்றினான்.

காலப்போக்கில் சோழர் பலம் குன்ற சேரன் செங்குட்டுவன் சோழரையும், பாண்டியரையும், வென்று தமிழ்நாட்டை ஆட்சிசெய்தான். செங்குட்

டுவன் பின் சேரன் ஆட்சி நிலைநிற்கவில்லை பாண்டியன் நெடுஞ்செளிஞன் சேரரை வென்று தனக்கு கீழ் கொண்டுவந்தான் சோழ மன்னன் தன் இனத் தலைனை சேரனுக்கு உதவி செய்தான். இப்போரில் நெடுஞ்செளிஞன் சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இளங்கோ, வெண்மான், பொருநன் என்போரை வென்று அடிபணியச் செய்தான். இப் போர் சோழப்பிரதேசத்திலுள்ள தலையன்கானத்தில் நடைபெற்றது. இப்பகுதி தலையரின் பலக்கோட்டையாகும். இப்போரில் வென்ற பாண்டியன் தனக்கு "தலையன்கானத்தை வென்றவன்" எனப்பட்டம் சூட்டிக்கொண்டான். (Victor of the Talaiyanganam–Dravida E. L. தம்பிமுத்து) சங்ககாலத்து பாண்டியர் சான்றோராக இல்லாததால், பயங்கர வீரர்களாகிய தலையரை வென்றதையிட்டு மகிழ்ச்சியடைந்து, தனக்கு தலையரை வென்றவன் எனப்பட்டம் சூட்டுக்கொள்ளுகின்றான்.

இப்போருக்குப்பின் பலகாலமாக சோழர் பின்தங்கியிருந்தனர் பாண்டியர், களப்பிரர், பல்லவர் கீழ் அடிபணிந்திருந்தனர். கி. பி. 850-க்குப் பின்பே பலமடையத்தொடங்கினர். எழுநூறு வருடங்களாக சோழர் ஆட்சி மங்கியிருந்தாலும் அரசகுடும்பத்தினர் தங்களை நாடாள்வார் (நாடார்) எனக்கூறி தங்கள் தனித்துவத்தை ஆந்திரா, மைசூர் பகுதிகளில் காற்பாற்றிவந்தனர். கன்னட மக்கள் இவர்களை ஆளுபா, ஆள்வா வம்சம் என ஆழைத்தனர். நாடாளுபவர்கள் (நாடார்) தங்களை அரசகுலத்தவரெனக்கூறிச் சான்றோருக்குள் உயர்ந்த பிரிவினராகக் கருதத்தொடங்கினர்.

நாடாள்வாருக்குள் விஜயாலயன் என்னும் நாமமுடைய தலைவன் 9-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்தான் கி.பி 850-ல் விஜயாலயன் தஞ்சாவூரை முத்தரையரிடமிருந்து பிடித்து அப்பகுதிக்கு அரசனுனன் அவனது மகன் ஆதித்தனே பல்லவரையும், பாண்டியரையும் வென்று சோழப்பகுதியை மீண்டும் தங்கள் ஆட்சிக்குள் கொண்டுவந்தான். இவனுக்குப்பின் வந்த மன்னர் தங்களை ஆதித்தனின் சந்ததியினர் எனக்கூறிக்கொள்வதில் பெருமையடைந்தனர். நாடாளுபவருக்குள் இப்பிரிவினர் தங்களை புகழுள்ள குலமென அழைத்துக்கொள்வர் ஆதித்த நாடார் என்பது ஆதித்த சோழனின் சந்ததியிலுள்வர்கள் என்பதே அர்த்தமாகும்.

ஆதித்தனின் மகனுகிய முதலாம் பராந்தகன் பிறநாடுகளைப் பிடிப்பதில் ஆர்வம் காட்டினுன். பராந்தகன் (கி. பி 907-932) பாண்டியருடன் போர் தொடுத்தான். பாண்டியரை பராந்தகன் வென்று விடுவானுயின் தங்கள்மேல் படையெடுப்பான் என இலங்கை மன்னர் பயந்து பாண்டியருக்கு போரில் உதவிகொடுத்தனர். ஆனுல் பாண்டிய மன்னன்தோற்கடிக்கப்பட்டான். பாண்டிய மன்னனுகிய இராசசிங்கன் தனது அரசமுடியையும் வேறு விலையுயர்ந்த அரச ஆபரணங்களையும் கொண்டு இலங்கையிற் சரண்புகுந்தான். சிங்கள மன்னனுகிய 5-ம் தப்புளுவிடம் அப்பொருள்கள் பாதுகாப்பாகக் கொடுக்கப்பட்டன. இதைக்கேள்வியுற்ற பராந்தகன் தப்புளுவை அப்பொருள்களைத் தன்னிடம் கொடுத்து

விடும்படி பயமுறுத்தியும் பயனில்லாததால் இலங்கைமேல் படையெடுத்து அநுராதபுரத்தைக் கைப்பற்றினன், சோழன் தனது நாட்டில் இல்லாததை அறிந்து இராஷ்டிரகூடர் சோழநாட்டைத் தாக்கினர் இதையறிந்த பராந்தகன் அநுராதபுரத்திலிருந்து விரைந்து, இராஷ்டிரகூடருடன் போராட வேண்டியவனுனன்.

சோழ மன்னரில் மகா இராசராசனும் (கி. பி. 985-1015) அவன் மகன் 1-ம் இராசேந்திரன் (கி. பி. 1016-1044) ஆகியவர் அதிகீர்த்தி பெற்றவர்களாகும் 1-ம் பராந்தகனுக்குப் பின் சோழரின் ஆதிக்கம் குறைந்தது. ஆனல் மகா இராசராசன் சோழதேசத்தை ஒரு மகா பேரரசாக்கி சிறப்பான ஆட்சியும், மகாவலிமையும் அதற்கு அளித்தனன். பாண்டியரையும், சேரரையும் வென்று சாளுக்கியரினதும் பலத்தை அடக்கினன். கலிங்க தேசத்தையும் அடிப்படுத்தினன். அதனல் அவனது பேரரசு வடக்கே மகாநதி தொடக்கம் தெற்கே பாண்டிய, சேரநாட்டின் எல்லையை அடங்கிற்று. அதன்பின் இலங்கைமேல் படையெடுத்தான். அநுராதபுரம் அவனல் நிர்மூலமாக்கப்பட்டது. இலங்கையில் இராசரட்டை சோழ மாகாணமாக மாறிற்று. இவ்வரசன் நிறுவிய கடற்படையின் உதவியினல் மாலைதீவும் பிடிக்கப்பட்டது. இவ்வரசனின் மகனுகிய 1-ம் இராசேந்திரன் தன் தந்தையரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, சோழ பேரரசை உன்னத நிலை அடையச்செய்தான். தந்தையரின் கடற்படையின் உதவியினல் சேர

நாட்டையும், இலங்கைத்தீவு முழுவதையும் தன்னடிப்படுத்தினுன். அந்தமான், நிகோபர் தீவுகளும் சோழ பேரரசுடன் சேர்க்கப்பட்டன. இவன் கங்கை நதி வரை தன் சைனியங்களுடன் சென்ருன். இச் செயலை விழாக்கொண்டாடி "கங்கை கொண்ட சோழன்" என்னும் நாமம் பூண்டு "கங்கை கொண்ட சோழபுரம்" என்னும் தலைநகரம் நிறுவினுன் இக் காலத்தில் கங்கை நதிக்கு அருகாமையில், இன்று பண்டில்கன் (Bundelkhand) என அழைக்கப்படும் பகுதி, சாண்டாழ் (Chandel) வம்சத்தினரின் ஆட்சியில் இருந்தது. வட இந்தியாவில் எஞ்சியிருந்த சான்ருர்களே சாண்டாழ் என அழைக்கப்பட்டனர். சான்ருர் தென்னிந்தியாவை நோக்கி படையெடுத்து வந்தகாலத்தில், இவர்கள் வட இந்தியாவில் தங்கி விட்ட மக்களாகும். இராசேந்திர சோழன் காலத்தில், பண்டில்கன் பகுதியை (கங்கை நதிக்கு அருகாமையிலுள்ள இராச்சியம்) தங்கன் (1000-1050) என்னும் சாண்டாழ் வம்சத்தவன் ஆட்சி செய்தான். இவர்களுக்குச் சோழர் தங்கள் ஆதரவைக் கொடுத்து சுற்ற உள்ள இடங்களை அதிகாரம் செய்தனர் இன்னும் தென் கன்னடத்தில் ஆதிக்கம் செலுத்திய சான்ருர்களுக்கு சோழர் ஆதரவு கொடுத்தனர். இக்காலத்தில் தென் கன்னடத்தில் சான்ருர் ஆட்சி பலமடைந்து வந்து, பிற்கால பாண்டியர் காலத்தில் உச்சநிலையை அடைந்தது.

இராசேந்திர சோழன் ஆட்சியின் பின் சோழரின் ஆதிக்கம் குன்றிவந்து 13-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தென் இந்தியாவில் சான்ருர வம்சத்து பாண்டியரின் ஆதிக்கம் ஏற்பட்டது. இதன் பின் துருக்கியரின் கீழும் விஜயநகர, நாயக்க மன்னர் கீழும் போர் அடிமைகளாக சூரியகுலத்தவர் நசுக்கப்பட்டனர்.

சோழ அரசர் தங்கள் சாதிப்பெயருடனே பிற நாடுகளில் ஆட்சி செய்திருக்கின்றனர். கி. பி. 8-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தமிழ் தேசத்திலிருந்து (க்ஷத்திரிய) சான்றோர் குலத்தவர் எழும்பி "Tsandra dynasty, Chandra dynasty, or Chandra race, சான்ருர ராஜவம்சம் அல்லது சான்ருர் குலம் என்ற நாமமாய் இந்து—சீன தேசத்து அரகன் (Arakan) நாட்டில் வேதாளி (Wethali) என்னும் இடத்தை தலைநகராக்கி (கி. பி 788-957) வரை அரசாண்டார்களெனவும் அக்காலத்தில் அவர்கள் அவ்விடத்தில் சைவசமய அடையாளங்களுடன் வெளியிட்ட காசுகள், அதேகாலத்தில் தமிழ் தேசத்திலரசாண்ட சோழ ராஜாக்களின் காசுகளும் ஒற்றுமையிருக்கின்றனவென்றும், பர்மா இந்தியா முதலிய தேசங்களில் சரித்திர ஆராய்ச்சி நிபுணர்களாகிய ஸர் பேய்ரி அவர்களும் (Lieut Gen Sir Arther Playre), ஸர் வோல்டர் எலியட் அவர்களும், (Sir Walter Elliot, K. C. S. I., L. L. D.) எழுதியிருக்கிருர்கள், இச்சோழ வம்சத்தவர் "சாண்" என

அழைக்கப்பட்டனர். (சாண் — ராஜாக்கள்). பர்மா தேசத்தின் கடைசியரசனுன சாணு குலத்தவனுகிய தீபா என்பவன், தம் குலம் சத்திரிய குலமென தெரிவிப்பதாக இந்து தேச சரித்திரம் எழுதிய யே. ரி. வீலர் (J. T. Wheeler) கூறுகின்ருர். சாணு அரசு (Shan States) என்ற பகுதி பர்மாவில் இன்றும் உண்டு.

சோழ அரசன் நாடன் என அழைக்கப்பட்டான். அவனது சந்ததியினர் "நாடான்" அல்லது "நாடாள்வார்" என அழைக்கப்பட்டனர். சோழர் ஆட்சிக்காலத்தில் நாடாள்வார் பட்டமுடையோரே சேர, சோழ, பாண்டிய, ஈழநாட்டில் ஆட்சியாளர்களாக நியமிக்கப்பட்டனர். இக்காலத்தில் பாண்டிய நாட்டில் வடவலதிருக்கடை நாடாள்வார், அங்குட்ட நாடாள்வார், புங்குண்ட நாடாள்வார், கெண்டியூர் நாடாள்வார், கெங்கையாறு நாடாள்வார், தவண்டூர் நாடாள்வார், வீரகங்க நாடாள்வார், அளத்தூர் நாடாள்வார், கலவண்டைய நாடாள்வார், பாண்டி மண்டல நாடாள்வார், அஞ்சுக்கோட்டை நாடாள்வார், ஆட்சிசெய்தனர். இவர்களின் பெயர்கள் இலங்கை சூலவம்சம் என்னும் சரித்திர நூலில் காணப்படுகின்றது இரண்டாம் இராசாதிராசனுடைய திருவாலங்காட்டுக் கல்வெட்டில் இராசகம்பீர அஞ்சுக்கோட்டை நாடாள்வார் சோழபகுதிக்கு ஆட்சியாளனுக இருந்ததாகக் கூறப்படுகின்றது.

"சேனாதிபதி உய்யங்கொண்ட வளநாடன்
திரை முந்நீர் நாட்டு நாடார் கிழான்
ராஜராஜன் பரநிருப ராக்க தரான
வீர சோழ இளங்கோவேள் ஒருவன்
ஆடையூர் நாடாள்வான்"

திரு. A. கோபிந்தநாதரால் M. A செந்தமிழ் பிலவங் ஹு கார்த்திகை மீ இதழ் பக்கம் 49-ல் எடுத்துக்காட்டியுள்ள சோழ சாஸனப்பகுதியாகும். இக்காலம் கி. பி. 1178 ஆகும் நாடார் கிழான்–நாட்டுக்கு உரிமையாளன். சிற்றரசர்கள் நாடார் கிழான், நாடாள்வான் எனக்குறிக்கப்பட்டுள்ளது.

சூரிய வம்சத்தினர் வட இந்திய திராவிட மக்களால் "சான்றோர்" என அழைக்கப்பட்டனர். சூரியன் என்பதற்கு சமஸ்கிருதத்தில் "Sakshi" ஸக்ஷி என்ற பதமும் வழங்கியிருப்பதாக அமரகோஷம், ஹலாயுதம் முதலிய நிகண்டுகளால் துலங்குகிறது சைவ புராணங்களில் சிறந்து விளங்கும் பெரிய புராணத்தில் கூறப்படும் பக்தர்கள் அறுபத்திமூவருள் ஒருவரான ஏனாதிநாத நாயனார் சான்றார் குலத்தவரென்று சேக்கிளார் கூறுகின்றார் வட மொழியில் பக்தவிலாசம் எழுதிய உபமன்னியு ரிஷியும் இவரை "சாஷி குலோத்பவ"; அதாவது சூரிய குலத்தவனெனக் கூறுகின்றார் இதனால். இவர் சூரியகுலத்தவனாகிய சோழ அரசனின் இனத்தவனென விளங்குகிறது. அதனால் சான்றார் சூரியவம்சத்தவர் என்ற உண்மை நிரூபிக்கப்படுகின்றது.

இவ்விபரத்தை தரும் சேக்கிழார், குலோத்துங்க சோழனின் (1078-1118) மந்திரியாகும்.

இக்காலத்தில் அரசவம்சங்களுக்குள் சான்ருர வம்சத்தவரின் புகழ் உச்சநிலேயிலிருந்தது இவர்களது புகழ் சோழ, பாண்டிய, சேர நாடுகளிலும் கன்னடம், குடகபூமி, மலேயா, இலங்கை, சுமத்திரா, பர்மா போன்ற இடங்களிலும் பரவியிருந்தது. சங்க காலத்திற்குப்பின் வீழ்ச்சியடைந்த சான்ருர், ஆளுப சான்ருர் என தென் கன்னடப்பகுதியில் தங்களேப் பலப்படுத்தி வாழ்ந்து, விஜயாலயன் கீழ் பின்பும் புகழுடையத்தொடங்கினர். சான்ருர வம்சத்தவரின் ஆட்சிக்காலங்களிலே மட்டும் தமிழருடைய சாம்ராச்சியம் மேலோங்கி நின்றது.

# பாண்டிய நாட்டில் நாடார் மன்னர்களின் எழுச்சி.

ஆந்திரத்தையும், சோழநாட்டையும் அரசு செய்த சான்றோர வம்சத்தவர், பாண்டிய நாட்டிலும் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கினர். 10-ம் நூற்றாண்டில் இராசராசசோழன் (985-1015) காலத்தில் பாண்டியநாடு நாடார் மன்னர்களின் ஆட்சியில் அடங்கிற்று. சோழ சாம்ராச்சியத்தில் உள்ளடங்கிய பாண்டிய, சேர கன்னட, ஈழ நாடுகளைத் தங்கள் ஆதிக்கத்தில் நிரந்தரமாக வைத்திருக்க விரும்பினர். ஆனால் சோழ பாண்டிய, கன்னடப் பகுதியை மட்டுமே வைத்திருக்கக்கூடியதாக இருந்தது. காலப்போக்கில் பாண்டிய, கன்னட பகுதிகள் மட்டுமே சான்றோரின் பலக்கோட்டையாக மாறுகின்றது.

சோழ மன்னனாகிய இராசராசன், சோழவம்சத்தவர்களையே பாண்டிய, சேர, ஈழநாடுகளுக்கு அரசாளுபவர்களாக நியமிக்கின்றான். பாண்டியன் என்ற பட்டத்துடன் முதல்முதலாக இராசராசனின் மகனாகிய சாடவர்மன் சுந்தர சோழ பாண்டியன் அரசனாக பாண்டிய நாட்டுக்கு நியமிக்கப்படுகின்றான். இவனது ஆட்சி 1040-ல் முடிவடைகின்றது. (சோழர்-K. A. நீலகண்ட சாஸ்திரி). இவன் கங்கை கொண்ட சுந்தர பாண்டியன் எனவும் அழைக்கப்பட்டான். சோழர் பாண்டியரை வீழ்த்தியதும்,

பாண்டியன் என்ற பட்டத்தைத் தங்களுக்கு வைத்து அரசாண்டனர். வென்ற மன்னர், தோல்வியடைந்த மன்னனின் பட்டங்களையும் சேர்த்துக்கொள்வது வழக்கம்.

முதலாம் குலோத்துங்கன் (1070-1112) கீழைச் சாளுக்கிய இனத்தவனுகும். அவனது தாய் சோழ அரசகுமாரியாகவிருந்த படியால், சோழ அரசவுரிமைக்கு வேறு யாரு மில்லாதபடியால், இவனே சோழ அரசனுகின்ருன். அதனுல் சோழ அரசகுலத் தவருக்கு, இவன்மேல் பொருமை ஏற்படுகின்றது. குலோத்துங்கன் சோழ அரசகுலத்தவரின் நட்பைப் பெறுவதற்காக பாண்டிய நாட்டில் அவர்களுக்கு பதவிகள் கொடுத்தான். இக்காலத்தில் ஆதித்தன் குடும்பத்தினர் பாண்டிய அரசர் ஆதரவுடன் பாண்டிய நாட்டில் குடியேறுகின்றனர். இக்காலத்தில் சந்திரகுல பாண்டியரில் பலர் கொலைசெய்யப்பட்டனர். 1094-ல் குலோத்துங்கன் ஐந்து பாண்டியரை, அந் நாட்டிலிருந்து வெளியேற்றினுன். அந்நாட்டின் ஆட்சி சூரியகுல பாண்டியரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் கன்னடத்து சான்ருர வம்சத்தவருடன் விவாக தொடர்பு வைத்து தங்களைப் பலப் படுத்திக்கொண்டனர். இவர்கள் பாண்டியன் என்ற நாமத்துடன் நாட்டை ஆண்டனர்.

குலோத்துங்கன் பிற்காலத்தில் பாண்டியர் தம தென்னுதிருக்க எல்லைகளை நன்கு வகுத்து, சோழப் படையினர் குடியேற்றப்பட்டனர். இக்குடியேற்றமே

திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுர பகுதிகளில் சான்றூர் அதிகமாகக் காணப்படுவற்கு முக்கிய காரணமாகும். பாண்டியரின் பகுதியில் சோழப்படையினர் இராசராசன் காலத்திலிருந்து குடியேற்றப்பட்டு வந்தனர் பாண்டியரின் எல்லையை காவல்செய்வதும், சோழ சாம்ராச்சியத்தைத் தற்காப்பதும் சோழப்படையின் நோக்கமாக இருந்தது. சந்திரகுல பாண்டியரும், அதிகாரிகளும், போர் வீரர்களும் நசுக்கப்பட்டனர். சந்திரகுல பாண்டியர் கீழ் அமைச்சர்களாகவும், சேனாதிபதிகளாகவும் பதவி வகித்த மறவர், தங்கள் பதவிகளை இழந்ததும், சான்றூர்களின் பகைவர்களாக மாறினர். தங்கள் அதிகாரங்கள் சான்றூர்களுக்கும், வேளாளருக்கும் போவதைக் கண்ட மறவர் காலப்போக்கில் விஜயநகர அரசர்களினதும், நாயக்கரினதும் ஆதரவாளர்களாக மாறினர்.

சோழ அரசவம்சத்தினர் பாண்டிய நாட்டில் குடியேறியமைக்கு பல சான்றுகள் உள்ளன. பாண்டிய நாட்டில் வந்து குடியேறிய சான்றூர் சோழ நாட்டிலுள்ள பெயர்களையிட்டனர். கரிவளம் வந்த நல்லூரையடுத்து சோழபுரம் என்ற ஊர் இருக்கிறது அவ்வூரில் கோட்டை கொத்தளங்கள், அரண்மனைகளிருந்த பழைய சின்னங்களும் இன்றளவும் காணப்படுகின்றன.

ஸ்ரீ வைகுண்டத்துக்கு மேற்கே மூன்றுவது மைலில் ஆதிச்ச நல்லூர் என்ற ஒரு ஊர் இருக்

கிறது. இவ்வூரில் பூர்வீக மண்தாழிகள் பூமியிலுள்ளிருந்து தோண்டி எடுக்கப்பட்டன. இவைகள் சென்னைப் பொருட்காட்சிசாலையில் காணப்படுகின்றன. மேற்கண்ட ஊர்கள் இராசராசன், இராசேந்திரன், 1-ம் குலோத்துங்கன் மன்னர்களின் பிரதிநிதிகளோ, அரசகுமாரர்களோ பாண்டிய நாட்டிலிருந்து அரசாண்ட இடமாகும். அக்காலத்தில் சோழபுரம், அதிச்சநல்லூர், போன்ற இடங்கள் சோழநகரங்களாக விளங்கின.

பாண்டிய நாட்டை அரசாண்ட சோழவம்சத்தினர் தங்களுக்கு பாண்டியன் என பட்டம் சூட்டிக்கொண்டனர். சோழநாட்டில் ஆட்சியுரிமையை குலோத்துங்கனிடம் பறிகொடுத்த சான்றுர மன்னர்கள் பாண்டிய நாட்டை நிரந்தரமாக வைத்திருக்க, தங்களைப் பலப்படுத்திக்கொண்டனர். இதனுல் சான்றுருக்கும், உண்மையான பாண்டியருக்குமிடையே பல உள்நாட்டுப் போராட்டங்கள் ஏற்பட்டன. உண்மையான பாண்டியர் அழிக்கப்பட்டு, சான்றுர் பாண்டிய வம்சத்தினராக மாறினர்.

1169 ல் ஸ்ரீ வல்லபன் இறந்ததும், அவனது மகன் குலசேகரன் பாண்டிய நாட்டுக்கு அரசனுகின்றுன். (திராவிடன்—E. L. தம்பிமுத்து) இவன் திருநெல்வேலியில் அரசாண்டான் திருநெல்வேலி சான்றுரின் பலக்கோட்டையாக இக்காலத்தில் இருந்தது. இக்காலத்தில் உண்மைப் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த பாராக்கிரம பாண்டியன் மதுரையில்

அரசாண்டான். குலசேகரன் மதுரையைக் கைப் பற்றி அரசாள விரும்பினுன். அதனுல் இருவருக் குமிடையே உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியது, குலசேகரன் பக்கத்தில் நாடாள்வார்கள் போராடி ஞர்கள். இலங்கையில் தம்மகீர்த்தி என்னும் புத்த குருவால் எழுதப்பட்ட சூலவம்சம் 1-ம் பகுதியில் பின்வரும் விபரங்கள் காணப்படுகின்றன. இப்போ ரில் குலசேகரன் பக்கத்தில் நின்று போராடிய நாடாள்வார்கள் பின்வருமாறு.

1. புங்குண்ட நாடாள்வார்.
2. அளத்தூர் நாடாள்வார்.
3. கலவண்டைய நாடாள்வார்.
4. அஞ்சுக்கோட்டை நாடாள்வார்.
5. ஆதாளையூர் நாடாள்வார்.
6. பாண்டி மண்டல நாடாள்வார்.
7. கொங்கமங்கள நாடாள்வார்.
8. அகலந்த நாடாள்வார்.
9. கீழ்மங்கள நாடாள்வார்.

நாடாள்வார் சோழ ஆட்சியாளர்களின் பட்டப் பெயர். அதனுல் இக்காலத்தில் சோழ மன்னரின் ஆட்சி நடைபெற்றமை நிரூபிக்கப்படுகின்றது. இவர் கள் குலசேகரன் பக்சம் நின்று போராடியமைக்கு காரணமென்ன? இவர்கள் எல்லோரும் பராக்கிரம பாண்டியனை எதிர்த்தமைக்கு காரணமென்ன? சூரிய குலத்தவர்களாகிய நாடாள்வார்கள் சந்திரகுல பாண்டியரை முற்றுக அழிப்பதே நோக்கமாகும்.

அடுத்து மதுரையில் பராக்கிரமன் குலசேகர பாண்டியனுல் தாக்கப்பட்டதும், பராக்கிரமன் இலங்கையில் பராக்கிரமபாகுவிடம் உதவி கேட்கின்ருன். சோழ அரசன் யாருக்கும் உதவிகொடுக்க வராத சமயத்தில் சோழரின் உதவியை வேண்டியிருக்கலாமே! இலங்கை மன்னனின் உதவியை வேண்டியதின் மர்மமென்ன! சோழ அரசனுக்கும், குலசேகரனுக்கும் இரத்தத் தொடர்பு இருந்ததால் அவன் இலங்கை அரசனிடம் உதவிகேட்டான். மதுரையை ஆட்சிசெய்தவனே உண்மையான பாண்டியன். திருநெல்வேலியில் ஆட்சிசெய்தவன் சோழவம்சத்தைச் சேர்ந்தவனுகும். இப்போரில் குலசேகரன் பராக்கிரமனை கொலைசெய்கின்ருன். பராக்கிரமனின் மகனுகிய வீரபாண்டியனுக்கு உதவிசெய்ய பராக்கிரமபாகுவின் படை மதுரைக்கு வந்தது. குலசேகரன் சில காலம் போராடி தோல்வி கண்டபின்பே சோழ மன்னனின் உதவியை வேண்டினுன். சோழர் உடன் உதவி கொடுக்கின்றனர். இப்போரில் குலசேகரனே வெற்றியடைகின்ருன்.

பாண்டிய நாட்டுக்கு அரசனுகிய குலசேகரன் பான்டிய நாட்டை பலமுள்ள அரசாக்க முற்பட்டான். சோழரின் ஆதிக்கத்தை ஒழித்துக்கட்டுவதாக முடிவுசெய்தான். கீழச்சாளுக்கிய தொடர்புடைய சோழரை சான்ருர் விரும்பவில்லை. இதனுல் சூரியகுல பாண்டியருக்கும், சோழருக்கும் விசுவாசமான நட்பிருக்கவில்லை. சோழருக்கு எதிராக, சிங்களவர் உதவியுடன் படையெடுக்க ஆயத்தம்

செய்தான். சோழன் குலசேகரனை அடிபணியச் செய்து விக்கிரம பாண்டியன் என்பவனே பாண்டிய அரசனுக்கின்றுன். இதற்கிடையே வீரபாண்டியன் என்னும் சந்திரகுலத்தவன் சேர அரசனின் உதவி யுடன் பாண்டியநாட்டைக் கைப்பற்ற முயற்சி செய்து தோல்வியுற்றுன்.

சோழனுல் சடாவர்மன் சுந்தர சோழ பாண்டி யனின் சந்ததியில் பிறந்த சடாவர்மன் குலசேகரன் பாண்டியநாட்டுக்கு அரசனுக்கப்படுகின்றுன். இம் மன்னனுக்குப் பின் அரசுசெய்த அரசர்கள் சோழக் குலப்பெயர்களையேயிட்டனர். அதனுல் இவர்கள் சோழ வம்சத்தவனுன இராசராசனின் மகனுகிய சடாவர்மன் சுந்தர சோழ பாண்டியனின் சந்ததி யினராகும். இவனது குலப்பெயரை வைத்தே அரசு செய்கின்றனர். உண்மையான சந்திரகுலபாண்டியர் சூரிய குலத்தவனின் குடும்ப பெயரை வைத்திருக்க மாட்டார்கள்.

சடாவர்மன் குலசேகரன் (1190—1216
மாறவர்மன் சுந்தரபாண்டியன் 1216—1239)
சடாவர்மன் குலசேகரன் II
மாறவர்மன் சுந்தரபாண்டியன் II
சடாவர்மன் சுந்தர பாண்டியன் II (1253-1270)
மாறவர்மன் குலசேகரன் (1310)

சடாவர்மன் சுந்தரபாண்டியன் II என நேரடி யாகவே சோழ அரசனின் சந்ததி எடுக்கப்படு கின்றது. 14-ம் நூற்றுண்டில் பாண்டியர் வீழ்ச்சி

யடைந்த பின்பும், சிற்சில பகுதிகளில் இவர்களது ஆட்சி நிலைத்திருக்கின்றது. திருநெல்வேலி' கன்னியாகுமரிப் பகுதிகளை விஜயநகர அரசர்களால் ஆட்சிசெய்ய முடியவில்லை.

அடுத்ததாக தென் கன்னடப் பகுதியை ஆட்சி செய்த சான்றுர வம்சத்தவருக்கும், பிற்கால சூரிய குல பாண்டியருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. குலோத்துங்க சோழனுக்கு முன் ஆட்சி செய்த சோழ மன்னரும், பிற்கால பாண்டியரும் இராஷ்டிரகூடருடனும், சங்க வம்சத்தவருடனும், சேர, சாளுக்கிய, கலிங்க, தெலுங்கு மன்னர்களுடனும் போராடி, அவர்களை அடக்குகின்றனர். ஆனல் தென் கன்னடத்தை ஆட்சி செய்த சான்றுர்களுடன் போராடியமைக்கு ஒரு வித சான்றும் இல்லை. பிற்கால பாண்டியர், அவர்களுடன் விவாக தொடர்பு வைத்ததும் அன்றி, தாங்களும் சான்றுர் என்பதை தென் கன்னடத்திலுள்ள கல்வெட்டுகளில் தெரிவித்துள்ளனர். கி. பி. 1432-ல் ஆட்சி செய்த, வீரபாண்டியன் அல்லது பூபால பாண்டியன் கோரக என்னும் இடத்திலுள்ள கல்வெட்டில், தான் சான்றுர வம்சத்தவனை ஜினதத்தனின் இனத்தவன் என எழுதியுள்ளான். தென் கன்னடத்தை ஆட்சிசெய்த சான்றுர வம்சத்தவனுகிய ஜெகதேவனை, ஹொய்சலர் தாக்கும் பொழுது பாண்டியர் ஜெகதேவனுக்கு உதவி கொடுத்தனர். 14-ம் நூற்றுண்டில் கன்னடத்தில் சான்றுர் உச்சநிலைமையடையந்ததற்கு பாண்டியரின் உதவியும் காரணமாகும்.

பிற்காலத்திலுள்ள சூரியகுல பாண்டியர் தம் பெயருக்குப் பின்னுல் நாடன், நாடான் என்ற பட்டங்களைப் பாவித்தமைக்கு ஆதாரங்கள் உண்டு. சான்ருர வம்சத்தவரின் ஆட்சியில் புகழின் உச்ச நிலையை அடைந்த பாண்டியநாடு 1310-ல் வீழ்ச்சியடைந்தது. 1310-ல் பாண்டிய நாட்டில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டது. சகோதரர்களாகிய சுந்தர பாண்டியனுக்கும் வீரபாண்டியனுக்குமிடையே வாரிசுரிமைப்போர் ஏற்பட்டது. சுந்தர பாண்டியன் தோல்வியடைந்ததும் மகம்மதிய சக்கரவர்த்தியிடம் சரண் புகுந்தான். மாலிக் கபூர் என்பவரின் தலைமையில் சுந்தரபாண்டியன் படையெடுத்து வந்து பாண்டிய அரசைக் கைப்பற்றினன். இஞதல் பல வீனமடைந்த பாண்டியநாடு சேரர் ஆட்சிக்குட்பட்டது. இதன் பின் பாண்டியர் சிற்சில பகுதிகளை மட்டுமே ஆட்சி செய்தனர். விஜயநகர சாம்ராச்சியம் புகழுடையத்தொடங்கியதும் பாண்டிநாடு அதன் பகுதியாயிற்று.

வட இந்தியாவிலிருந்து தீரச்செயல்களை விரும்பி தெற்கே வந்த சூரிய குலத்தவராகிய சான்ரேர், மேற்சொல்லியவாறு பல நூற்ருண்டு காலமாக தென் இந்தியாவை அரசாண்டனர். ஆந்திர, கன்னட, சேர, சோழ, பாண்டிய பிரதேசங்கள் சான்ருர்களின் ஆட்சிக்குட்பட்டது. இவர்கள் நாடன் என்ற குலப்பட்டத்துடன் தென்னகத்தை ஆண்டனர். அரசர்களின் சந்ததியினர் தங்களை நாடாள்வார் அல்லது நாடார் என அழைத்து பிரதேசங்க

களுக்கு அதிபதியாக இருந்தனர். வெற்றியின் உச்சத்தை நோக்கி பல சாம்ராச்சியங்களை அமைத்த நாடார் குலத்தவர் விதியின் கையில் சிக்குண்டு 14-ம் நூற்றுண்டில் வீழ்ச்சியுற்றனர். 1500 வருடங்களாக அரசபோகங்களை அனுபவித்த சான்றுர் மற்றையோருக்கு அடிபணிவதை விரும்பவில்லை. மகதத்தை ஆட்சிசெய்தவர்கள், ஆந்திரத்தை வெற்றி கண்டவர்கள், சந்திரகுலத்தவரை அடிபணியச் செய்தவர்கள்—சூரியகுலத்தவர், துருக்கியரைக் கண்டு திகைத்தனர். மகம்மதியர் கீழ் அடிபணிவதைவிட மாழுதல் நன்றென நினைத்த சூரியகுலத்தவர் மகம்மதியர், நாயக்கரின் ஆட்சியை வெறுத்தனர். கடைசி மட்டும் தமிழ்நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடினர். மற்றைய சாதியினர் மகம்மதிய, நாயக்கரின் ஆட்சியைஏற்றுக்கொள்ள, நாடார் குலத்தவர் பின்பும் அரசைக் கைப்பற்ற வழிதேடினர். அரசாண்ட கரங்கள் அடிமைத்தொழில்புரிய மறுத்தன. பூமியை ஆளும் ஆசை அவர்களை அரசியல் அனுதைகளாக்கிவிட்டது சான்ருர் நாயக்க அதிகாரிகளால் துன்பத்துக்குள்ளாக்கப்பட்டனர் அரசியல் அனுதைகளாக்கப்பட்ட சான்ருரின் காணி பூமிகளும், பொக்கிஷமும் பறிக்கப்பட்டன. பல மச்சுமாளிகைகளில் வாழ்ந்த அரசகுடும்பத்தினர் குச்சுகளிலும், குடிசைகளிலும் வசிக்கலாயினர். பல நகரங்களை அமைத்து ஆட்சிசெய்த தமிழ்நாட்டு அரசகுலத்தவர் கானகத்தை நாடிச் சென்றனர் நடார் குலத்தவரின் பொருளும், பொக்கிஷமும் நாயக்கருக்கு அடிமைத்தொழில் புரிபவருக்கு அன்பளிப்

பாகக் கொடுக்கப்பட்டன. ஆட்சியாளரின் வைராக்கியம், சான்றோரை நசுக்குவதில் இன்பம் கண்டது. சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களாக ஆக்கப்பட்டனர். ஆச்சியாளர்களாகிய நாயக்கர் தம் எல்லைக்குள் ஒருவித தொழிலும் சான்றுருக்கு கொடுக்கப்படாதென ஆணையிடப்பட்டது. அரசியல் அடிமைகளாக துன்புறுத்தப்பட்ட சான்றுரில் மானமுள்ளோர் காடுகளை வெட்டி பயிரிட்டு வாழ்ந்தனர். அதிகாரிகளின் அட்டூழியங்களுக்கு அஞ்சிய சிலர் தங்களை செட்டிகளென்றும், முதலியார் என்றும் பெயர் மாற்றி வியாபாரம் செய்துவந்தனர். தோல்வியை சகிக்க விரும்பாத சான்றுர வம்சத்து புரோகிதர் வேறிடங்கள் சென்று கோவில்களில் தங்கள் குலப் பெயரை மறைத்து வாழ்ந்தனர். சாதாரண ஏழை போர்வீரர்கள் மது இறக்கி தங்கள் குழந்தைகளின் பசிக்கொடுமையை போக்கினர். வாளுடன் வாள் மோதக்கண்டு பரவசமடையும் சான்றுர வீரரில் சிலர் ஆதரிப்பார் யாருமின்றி பனைத்தொழிலில் செய்தனர். இக்காட்சியை சகிக்கமுடியாத நாடார் குல மன்னர்கள், தங்கள் தன்மானம் காத்த போர் வீரர்களைக் காப்பாற்ற முடியாமல் தலைகுனிந்தனர். இம்மன்னர்கள் தங்களுக்கே உணவைத் தேட முடியாமல் வாடி வதங்கினர். 18-ம் நூற்றுண்டு முடியுமட்டும் சான்றுர் அரசியல் அனுதைகளாக துரோகிகளின் அட்டூழியங்களால் இம்சிக்கப்பட்டனர். இந்திய இதிகாசத்தில் பல பகுதிகளில் சாம்ராச்சியங்கள் அமைத்து யாழ்ந்தவர்களின் சோகக்கதை ஆரம்பமாயிற்று. கங்கை நதியிலே பறக்கவிடப்

பட்ட தமிழன் கொடி, தமிழ்நாட்டிலே துரோகிக ளால் தரைசாய்க்கப்பட்டது சுயநலவாதிகளை தம் கைப்பொம்மையாக வைத்து அந்நியர் தமிழ்நாட்டை ஆண்டனர். உயர்ந்த பதவிகளால் கௌரவப் படுத் தப்பட்ட நயவஞ்சகர், அரசகுலத்தவரின் எழுச் சியைக் காண அஞ்சி நிரந்தர அடிமைகளாக அவர் களை வைத்திருந்தனர். இதுவே சான்ருர வம்சத் தவரின் பரிதாப முடிவாகும்.

# பாண்டிய நாட்டில் நாடார் மன்னர்களின் வீழ்ச்சி.

பிற்கால சோழ மன்னர்களின் எழுச்சிக்காலத்தில், பாண்டிய நாடும் சூரியகுலத்தவரின் ஆட்சிக்குட்பட்டது. இக்காலத்தில் மீனவர்களாகிய சந்திர குல பாண்டியரின் வீழ்ச்சியைப்பற்றி கலிங்கத்துப் பரணி மிக அழகாகக் கூறுகின்றது.

"மீனம் புகு கொடி மீனவர்
விழி அம்பு உக ஓடிக்
கானம் புக வேளம் புகு
மடவீர்! கடை திறமின்"

"விட்ட தண்டினின் மீனவர் ஐவரும்
கெட்ட கேட்டினைக் கேட்டிலை போலும் நீ!"

இப்போரில் வெற்றியீட்டிய மன்னர் சூரியகுலத்தவரென்பதை பின்வரும் பா விளக்குகின்றது.

"வண்டல் பாய் பொன்னி நாடனை வாழ்த்தி
மாமதுரை வெங்களத்தே மதுரிக்க அட்டு
உண்ட கூழொடு நாவும் சுருண்டு புக்கு
உள் விழுந்து, அற ஊமைகள் ஆளவும்"

சோழரினுல் தோற்கடிக்கப்பட்ட மீனவர்களாகிய' பாண்டியர் மயங்கிவிடுகின்றனர். நாடார் பாண்டியன் என்ற நாமத்துடன் பாண்டிய நாட்டை ஆட்சிசெய்கின்றனர். சோழ அரசு கீழைச்சாளுக்

கியர் வசம் சிக்கியதும் பலயீனமடைந்து, பாண்டிய நாடு சான்ருரின் பலக்கோட்டையாக மாறி, சூரிய குல பாண்டியர் எழுச்சியடைகின்றனர்.

இக்சூரியகுல பாண்டியர் 14-ம் நூற்ருண்டில், வீழ்ச்சியடைகின்றனர். சூரியகுல பாண்டியரின் வீழ்ச்சியைப் பற்றி மதுரைத்தரை வரலாறு பின் வருமாறு கூறுகின்றது. ''மதுரைக்கு வாய்ந்த பெருமாளும் நாஞ்சிநாடு போனர். பெரிய ஆலயத்துப் பஞ்சாட்சரமதிலும் பதினன்கு கோபுரங்களும் தெருவீதியும் இடிபட்டன. கற்பக்கிரகம், மகாமண்டபம், அர்த்தமண்டபம் வரைக்கும் தப்பியிருந்தது,' இவ்வாறு துருக்கியரின் ஆக்கிரமிப்பு விபரமாக கூறப்பட்டுள்ளது. கி. பி. 1324-1372 மட்டும் அல்லாவுட்டீன், உடயூஜி, குத்புட்டீன், கியாதுடீன், நாகருடீன், அடில்ஷா, பஃருடீன், முபரக்ஷா, அல்லாவுடீன், சிக்கர் தர் ஷா என எட்டு மகம்மதிய இராசாக்கள் மதுரையை ஆண்டனர்.

நோல்வியடைந்த பாண்டியர் மகம்மதியரின் ஆட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை. வேறிடங்கள் சென்று மக்கள் தலைவர்களாக ஆட்சிசெய்தனர். வேளாளரும் மறவரும் மகம்மதியர், விஜயநகர அரசர் ஆட்சியை ஏற்றுக்கொண்டதினல் பல உயர்ந்த பதவிகள் வழங்கப்பட்டன. வேளாளர் தமிழ்ப் பிரபுக்கள் குலத்தவராகும். மறவர் சந்திரகுல பாண்டியரின் போர்வீரர்களாகும். மறவர், நாயக்கர் உதவியுடன் இரமநாதபுர பகுதிக்கு ஆட்சியாளர்

களாக மாறுகின்றனர். 1604-1752 மட்டும் மறவர் இராமநாதபுரப் பகுதியில் சிற்றரசர்களாக ஆட்சி செய்தனர்.

பாண்டியரின் சந்ததியினராகிய நாடார் குலத்தவர், போராட்டங்கள் மூலம் வீழ்ச்சியடைந்து வந்தனர். நாயக்கர் தமது ஆதரவாளர்களுக்கு கௌரவ பதவிகள் கொடுத்தனர். ஆனால் அரசியல் எதிரிகள் போர் அடிமைகளாக்கப்பட்டனர். பாண்டிய வம்சத்தவனான அவனிவேந்தராம பாண்டியனை பாண்டிய நாட்டுக்கு அரசனாக்கும்படி விஜயநகர வேந்தன் தனது சேனாதிபதியாகிய நாகமநாயக்கனை அனுப்பினான். ஆனால் நாகமநாயக்கன் தனது ஆதரவாளனாகிய அரியநாயக முதலியார் உதவியுடன் பாண்டிய மன்னனை வீழ்த்தி 1559-ல் அரசைக் கைப்பற்றினான். அரியநாயக முதலியார் நாயக்கருக்கு செய்த உதவிக்கு கைமாறாக அவனது சாதியினராகிய வேளாளர் முன்னூறு வீட்டுக்காரரை மதுரை நகருக்கடுத்த சோழவந்தானிலும், மற்றும் பல்லரை திருமங்கலத்திலும் நாயக்கர் குடியேற்றினர்.

விசுவாச நாத நாயக்கருக்கும், ஐந்து பாண்டிய மன்னர்களுக்கும் நடந்த போரில் வேளாளர் விசுவாச நாயக்கர் பக்கம் நின்று போராடினர். மற்றும் பாண்டிய அரசனுக்கு மாறாக வடகரை ஜமீந்தார் பெரியசுவாமி சின்னனைஞ்சாத்தேவர், தளகர்த்தர் இருளனைஞ்சாத் தேவர், தாயாதி, பெரியனைஞ்சாத் தேவர் தலைமையிலுள்ள மறவர் சேனை போரிட்டது

மகம்மதியரது ஆட்சியாற் சிதறுண்ட பாண்டிய மன்னர் பரம்பரையச் சேர்ந்த ஐந்து குடும்பத்தினர் தனித்தனியே மதுரை, தென்கன்னடம், கரிவளம் வந்த நல்லூர். தென்காசி, திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தம் வசப்படுத்தி ஆண்டனர். மகம்மதிய அரசர்கள் தமிழர்களை பலவகையிலும் துன்புறுத்தினர். இதைப் பொறுக்கமுடியாத பாண்டிய, சோழ இளவரசர்கள் மக்கள் பக்கம் சேர்ந்து போராடினுர்கள். பாண்டியர் தங்கள் நாட்டை பின்பும் கைப்பற்ற முயற்சிசெய்தனர். பாண்டியர்களில் ஒருவனுன இராஜசிம்ம பாண்டியன் சின்னமனூரில் மறைந்து வசித்திருந்ததாக சரித்திரம் கூறுகின்றது. சேதர்மன் விக்கிரம பாண்டியன் (1401-1422) இராமநாதபுரப்பகுதியை அரசாண்டனர். அரிகேசரி பராக்கிரமன் (1422-1462)தென்பாண்டியப் பகுதியை அரசாண்டான். அவன் மதுரையைக் கைப்பற்றி சிலகாலம் ஆண்டான். அவன் தன்னை கொற்கை வேந்தன் என அழைத்துக்கொண்டான்.

வீரபாண்டியன் (1552 1564) தன் மகளை ஆதித்த நாடார் குலத்தலைவனெருவனுக்கு திருமணம் புரிவித்து, அவனை வீரபாண்டிய பட்டணத்திற்கு மன்னனுக்கினுன் என ஆதித்த நாடார் சரித்திரம் கூறுகின்றது. ஆதித்த நாடார். ஆதித்த சோழனின் சந்ததியினராகும். பாண்டிய வம்ச சரித்திரம் எழுதிய திரு. R. அரிகராமையர் இவ்வரசன் கயத்தாற்றுக் காவலனுன வெட்டும் பெருமாள் பாண்டியனேடு "இளவேலன்கால்" என்னும் இடத்திற் போ

ராடி அவனை வென்று கயத்தாற்று இராச்சியத்தை தன் இராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டான் எனக் கூறுகின்றார். கயத்தாற்றில் ஆண்ட வெட்றிம்பெரு மாள் என்பவன் முன்கூறப்பட்ட ஐவர் இராஜாக் களின் மூத்தோனாகிய குலசேகரப் பெருமாள் பாண் டியனுக்குத் தன் புத்திரியை மனஞ்செய்து கொடுத் தவனாகும். வெட்டும்பெருமாள் சந்ததியினர் தென் கடற்கரையிலுள்ள குட்டநாட்டிற் சென்று வசித்து வந்தனர். இவர்களுடைய சந்ததியினர். வெட்டும் பெருமாள், குத்தும் பொருமாள், வீரசூரப் பெரு மாள் என அழைக்கப்படுகின்றனர்.

கன்னடியன்-வெட்டும் பெருமாள் போர் (1547) நடந்த கயத்தாறுக்கு அருகேயுள்ள இளவேலங்கால் என்னும் ஊரில் பத்துக்குத்து கற்கள் காணப்படு படுகின்றன. அவற்றில் குதிரை மேல் ஒருவனும், காலாள் ஒருவனும் சண்டையிடுவதாக சித்திரங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

ஐந்து பாண்டியருக்குள் மூத்தோனின் பெயர் குலசேகரனாகும். இவனே வீனாதிவீணன் கதையில் குறிப்பிடப்படும் பாண்டிய அரசனாகும். 16-ம் நூற் ருண்டின் பிற்பகுதியில்தான் கன்னடியர்-குலசே கரன் போர் நடந்திருக்கவேண்டும். கன்னடிய இளவரசி உடன்கட்டையேறிய ஊராக வடுகச்சிமதில் என்ற ஊர் சுட்டிக்காட்டப்படுகின்றது. அங்கு ஒரு கோயில் உண்டு. மேற்கூறிய கன்னடியர் மைசூரை அரசுசெய்த சான்றார்கள் அல்ல. இக்காலத்தில் மை சூரை ஆண்ட சான்றார வம்சம் வீழ்ச்சியடைந்து விட்டது.

தென்காசிப் பாண்டியர் சந்ததி: குலசேகர பாண்டியன் குறும்பலாப்பேரியில் வந்து தங்கிய இடம் "குலசேகரபுரம்" என்று இன்றும் வழங்கப் படுகின்றது. குலசேகர பாண்டியனது மகன்—மலையராம பாண்டியன்—இவனது சந்ததியினராகிய முன்னூறு வீட்டுக்காரரர்கள் இக்காலத்தில் அக்கம் பக்கங்களில் வசித்து வருகிறுர்கள். இவர்களைப் பற்றி 29-9-1916-ல் வெளிவந்த "திராவிடாபிமானி" (சேலம்) பத்திரிகையில் கொஞ்சம் சொல்லப்படுகின்றது. கெங்கைகொண்டானிலிருக்கும் "சத்திரிய ராஜக்களின்" சந்ததியினர் எனக் கூறப்படுகின்றது.

தென்காசித்தாலுகாவில் வீரகேரளம் புதூருக்குப் பக்கத்தில் வாழ்ந்து சென்னைப்பட்டணத்தில் குடியேறிய டாக்டர் A. C. ஆசீர்வாத நாடார் தென்காசியையாண்ட அபிராமபாண்டியனின் சந்ததியினராகும். திருச்செந்தூர் தாலுகாவைச் சேர்ந்த பள்ளக்குறிச்சி கிராமத்தில் வசிக்கின்ற விசுவநாத நாடார் தென்காசி பாண்டியரின் சந்ததியைச் சேர்ந்தவராகும்.

நாஞ்சிநாட்டில் அகஸ்தீஸ்வரம் என்னொரு நகரம் உண்டு. கி. பி. 1560-ல் நிகழ்ந்த நாயக்க-பாண்டிய யுத்தத்தில் நாஞ்சி நாட்டுக்குச் சென்ற நால்வர் பாண்டியரின் ஒருவனது சந்ததியில் உதித்த "நாகமணி மார்த்தாண்ட நாடனது" குடும்பம் ஒன்று அகஸ்தீசுவரத்தில் புகழுடன் வாந்து வந்திருக்கின்றது. இக்குடும்பத்தார் "ஜமீந்தார்" அல்லது "பண்ணையார்" என்னும் சிறப்புப் பெயருடன் விளங்கினர் கி. பி. 1871 வரை புகழுடன் வாழ்ந்தனர்.

## அஞ்சுபத்து நாடார்கள்:

திருவளுதி வளநாட்டில் தெற்கேயுள்ளது மான வீரவளநாடு. அது வடபத்து தென்பத்து என இரு பிரிவாக பிரிக்கப்பட்டிருந்தது. தென்பக்கத்தில் மான வீர நாடு ஆண்ட மானுட்சியா நாடன், வல்லநாடு ஆண்ட சின்னமாடநாடன், சித்தன்விளையிலாண்ட வள்ளக்குட்டி நாடன், அடப்பனூரிலாண்ட குல சேகர நாடன், நங்கைமொழியில் ஆண்ட சொக்கன் திருபாபு நாடன் என ஐந்து ஜமீந்தார்கள் இருந் தனர். இவர்கள் ஐந்துகரை நாடார்கள் அல்லது ஐந்துபத்து நாடார்கள் எனவும் வழங்கப்பெறுவர். இவ்விபரம் குமாரசுவாமி நாடன் கதையென்னும் சரித்திர பாடலிற் காணலாம். இவர்கள் பிற்கால பாண்டியரின் சந்ததியாராவர். மகம்மதியர் ஆட்சி யால் நிலைகுலைக்கப்பட்ட அரசர்களாகும்.

## பதின்மர் பிரபுக்கள்:

மானவீரவளநாட்டின் வடபக்கத்தில் 1. ஆதிச்ச நாடன். 2. கோவிந்த பணிக்க நாடன். 3. வீரப்ப நாடன். 4. நீத்தியப்ப நாடன், 5. பிச்சநாடன். 6. அய்யகுட்டி நாடன். 7. திக்கெல்லாம் கட்டிய நாடன், 8. நினைத்தது முடிந்த நாடன். 9. அவத் தைக்குதவிய நாடன். 10. குத்தியுண்டா நாடன். எனப் பதின்மர் பிரபுக்கள் கிராமாதிபதிகளாகப் பிரபலம் பெற்று விளங்கினார்கள். கி. பி. 1639-ல் எழுதப்பட்டதாகிய குதிரைமொழித்தேரிச்சார்பி லுள்ள முத்துக்கிருஷ்ணபுரத்தின் தெற்கே நிற்கும்

ஒரு பெரிய சாஸனக்கல்லின் கண், இப்பதின்மர் பிரபுக்கள் பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. குடிகள் மீது தீர்வைகள் விதிக்கவும், விலக்கவும், ஏற்ற இறக்கவும் அதிகாரம் வாய்தவர்களாகவும் இருந்தனர்.

**எழு கரைக்காரர்:**

மானவீர வளநாட்டில் பற்பல கிராமங்களில் ஆட்சியை தமக்கு உரிமையாகக் கொண்ட ஏழு கரைக்காரர் என்ற பிரபுக்கள் வாழ்ந்திருந்தார்கள் அவர்கள் பெயர்களாவன-1 தலைவன்-வெட்டியாண் டான். 2. சிம்மங்கரையான். 3. பின்னங்கரையான் 4. குமாரக்கரையான். 5. அத்திபெரியவன் 6. அறம் வளர்த்தாண்டான். 7. சரவணை பெரியவன். பரதவ ருக்கும் மேற்கூறிய நாடார்களுக்குமிடையே யுத்தம் ஏற்பட்டது. அதில் ஏழுகரைக்காரரே வென்றனர். "பரதவர் படைவெட்டு" என்று இப்போர் பெயர் பெறும். வெற்றியாண்டான், வெற்றிகொண்டான் சந்ததியினர் "வெற்றி நாடான் குலம்" என அழைக் கப்படுவர்.

ஏழுகரைக்காரருக்குத் தாயாதிகளான வீரப்ப நாடன், தீத்தியப்பநாடன், வடமலை நாடன், என்ற மூவரும் தனக்கு எழுவரும் சரியானபடி தாயபாகம் தராமையினூற், காயமொழியில் வாழ்ந்த ஆதித்த நாடனின் உதவியுடன் போரிட்டு தங்கள் பங்கைப் பெற்றனர். இம்மூவரில் வடமலை நாடனது சந்ததி யார் பள்ளிப்பத்திலும், வீரப்பநாடனின் சந்ததியார்

சீருடையாபுரத்திலும், தீத்தியப்ப நாடனின் சந்ததியார் பரமன்குறிச்சியிலும் இன்றும் வாழ்ந்துவருகிருர்கள். கொற்கைபாண்டியரின் ஆதிச்சந்ததியார், பகைவரது இன்னல்களுக்குச் சிறிதும் அஞ்சாமல் கொற்கையையடுத்த குறும்பூரில் வாழ்ந்திருந்தார்கள். இவர்கள் பிற்காலத்தில் மதுரைச் சீமைக்கு வந்து குடியேறினுர்கள். எனினும் இவர்களுக்கும் "குறும்பூர் நாடார்கள்" என்னும் பெயர் வழங்கப்பட்டுவந்தது. அரும்புக்கோட்டை, விருதுநகர், சிவகாசி, சமுதி, பெருநாழி முதலியவூர்களில் "குறும்பூர் நாடாக்கள்" என்னும் பெயர் இன்றளவும் காணப்படுகின்றது. குறும்பூர் நாடாக்கள் குதிரை மொழித்தேரியின் வடகீழ்பாகத்தில் ஏழு சிறு இராச்சியங்கள் ஸ்தாபித்து செல்வாக்குடன் பூமியாதிபத்யம் நடத்தினர் அவர்கள் பின்வருமாறு அழைக்கப்படுவர். 1. கானம் நாடாக்கள். 2. மூலப்புளி நாடாக்கள். 3. அம்மன்புரம் புதுக்குடி நாடாக்கள். 4. மூலக்கரை நாடாக்கள். 5. நல்லூர் என்னும் வீரமாணிக்கபுரம் நடாக்கள். 6. நாலுமாவடி நாடாக்கள். 7. குறும்பூர் என்னும் பணிக்கநாடன்.

**குட்டத்து நாடாக்கள்:**

கி. பி 1785-ல் எழுதப்பட்ட சாஸனக்கல் ஒன்று குலசேகரன் பட்டணத்தில் உளது. அச்சாஸனத்திற் குறிப்பிட்டிருக்கும் குட்டம் சத்திர மார்த்தாண்ட பணிக்க நாடன், குமாரவீர மார்த்தாண்ட நாடன் முதலியோர் அப்பகுதியில் அக்காலத்தில் அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த பிரதிநிதிகளாய்ப் பிரபுகுல மக்களாக விளங்கினரெனத் தெரிகிறது.

மகம்மதியரின் ஆட்சியின் கீழ் நாயக்கர் பாண்டிய நாட்டுக்கு தொடர்ந்து ஆட்சியாளர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு பாண்டியரின் சந்ததியினர் தொடர்பாக எதிர்ப்பைக் காட்டிக் கொண்டு வந்தனர். அதனுல் பாண்டிய வம்சத்தினராகிய நாடார் பலவகையிலும் துன்புறுத்தப்பட்டனர். இராமப்பையன் நாயக்கன் ஆட்சியில் நாடார் இனத்தவர்களுக்கு பல அட்டூழியங்கள் செய்யப்பட்டன. நாடார்களின் கிளர்ச்சிகளை அடக்கமுடியாத அரசாங்கத்தார். அவர்களை கடலில் தள்ளும்படி உத்தர விட்டனர். இவ்வுத்தரவு காயற்பட்டினத்திலிருக்கும் மரைக்காயர்களுக்கு கொடுக்கப்பட்டது. அவர்கள் நாடார்களில் பலரைக் நடுக்கடலுக்குக் கொண்டு சென்றனர். அங்கு அவர்கள் இஸ்லாம் மதத்தில் சேர்வதென்ருல் மன்னிப்பளிப்பதாகக் கூறினர் நாடார்கள் தங்கள் உயிருக்கு அஞ்சி இஸ்லாம் மதத்தில் சேந்தவர்களும் உண்டு. இந்நாடாரை நாயக்கரின் எல்லையில் குடியேற்ருமல் இலங்கையில் மன்ஞர்த் தீவிலுள்ள பேசாலையை அடுத்த தாராக்குண்டு, எருக்கலம்பிட்டி போன்ற இடங்களில் குடியேற்றினர். இலங்கையில் இப்பகுதியிலுள்ள முஸ்ஸிலிம்கள் மற்றைய பகுதிகளைவிட விவேகம் கூடியவர்களாக காணப்படுகின்றனர். நாயக்கர் ஆட்சிக்காலத்தில் நாடார்களின் காணிபூமிகள் பறிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டனர். இக்காலத்தில் நாடார்கள் வாழ்க்கைக்கு அஞ்சி, சொத்துக்களை இழந்து மாற்றுப் பெயருடன் வாழ்ந்தனர். சிலர் முஸ்லிம்களாக மாறினர்.

கட்டப்பொம்மு, நாயக்கர் காலம்: இவனது காலத்திலும் நாடார் இனத்தவர்களுக்கு எதிராக தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. பல சிற்றூர்களிலே பாண்டியரின் சந்ததியினர் சிற்றரசர் போல் ஆட்சி செய்து வந்தனர். கயாமொழி, படுக்கப்பத்து, மா வீடுபண்ணை போன்ற ஊர்களைச் சுற்றியுள்ள கிராமங்கள் சோழவம்ச நாடார்களின் ஆட்சியில் இருந்தது. காயமொழிப்பகுதி 1780-ல் சிவந்தி ஆதித்த நாடாரின் ஆட்சியில் இருந்தது. குட்டம் அக்காலத்தில் அழகப்ப வீர மார்த்தாண்ட நாடனுடைய தலைமையின் கீழ் இருந்தது. இவ்விரு பகுதிகளையும் திசைக்காவல்வரி கட்டும்படி கட்டபொம்மன் கட்டளையிட்டான். இவர்கள் மறுக்க கட்டபொம்மன் படைதிரட்டி போருக்கு எழுந்தான். ஊமைத்துரையின் தலைமையில் நாயக்க படை வந்தது. நாடாரின் படையுடன் போரிட்டு நாயக்கர் படை பின்வாங்கி ஓடியது. ஆதித்தரும், மார்த்தாண்டரும், முரட்டுக் கட்டையும் தமிழரை ஒன்றுபடுத்தி நின்று போராடினர். ஆதித்தனுர் குடும்பத்தினர் திருச்செந்தூர் ஸ்ரீ முருகக்கடவுளின் பத்தர்களாக இருந்தபடியால், கட்டப்பொம்மனுக்கும், ஆதித்தனுருக்கும் மிடையே சமாதான உடன்படிக்கையை பிராமணர் கொண்டு வந்தனர். இதன்பின் நாயக்கரும், நாடார்களும் நண்பர்களாக மாறினர். நாயக்கர் மேல் ஆங்கிலேயரின் தாக்குதலும், நட்புக்கு ஒரு காரணமாகக் கூறலாம். 1799-ம் வருடம் கட்டப்பொம்ம நாயக்கருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டபொழுது ஆதிக்க வம்சத்தினர் மிகவும் வருந்திப் புலம்பியதாக கூறப்படுகின்றது.

பாண்டிய நாட்டில் ஒரு சிற்றரசாகிய திருவழுதி நாட்டின் தலைநகராகிய "குருகூர்" என்னும் இடத்தில் நம்மாழ்வார் அல்லது திருவழுதி நாடனுக்கும் "நாடான்" "நாடன்" என்பது சாதாரண பட்டப் பெயராக நூல்களிலும் சாசனங்களிலும் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த திருவழுதி நாடனின் நேரான சந்ததியார் ஸ்ரீ வைகுண்டம் தாலுகா நட்டாத்தியை யாண்டவரும் நாடார் குல ஜமீந்தார் என்று சொல்லப்பட்டிருப்பவருமான நட்டாத்தி திருவழுதிநாடன் என்னும் வைகுண்ட நாடார் ஆகும்

இனி நாடார் குலத்தவர்தான் பிற்கால பாண்டியரின் சந்ததியினர் என்பதை ஆராய்வோம் தென்னிந்தியாவில் சைவமதத் தலைவராகிய "லோககுரு" எனப்பட்ட சிரிங்கேரி மடத்து ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் நாடார் குலத்தவரையும் தனது ஆதீனத்துக்குள்ளாக்க வேண்டி தம்முடைய ிஷ்யர்களிலொருவரான மைசூர் சமஸ்தானம், தாராபுரம் தாலுகா, குளஞ்சிவாடி, கேற்கேசுர அக்கிரகாரம், ஸ்ரீ மடத்திலிருந்த சிவசுவாமி சாஸ்திரியரின் பௌத்திரர் சிவராமசுவாமி சாஸ்திரியாரை நியமித்து அவருக்கு சவுமிய ௵ (கி பி. 1789) கொடுத்த அதிகாரப் பத்திரமாகிய தாமிரசாஸநத்தில் ..........
பாண்டிய குலமாயும் சிவகோத்திர சம்பன்னளாயும் பாண்டிய தேசத்தில் பிறந்தவளாயும் க்ஷத்திரிய வமிஸாளாயுமிருக்கிற நாடாக்கள் குலம் சமஸத தது கரும குல குருவாய நெமுக ம செயது............

மேற்கூறிய சாஸனத்திலிருந்து மைசூரில் அரசாண்ட சான்றுர வம்சம், பாண்டிய வம்சத்தவருடன் தொடர்புள்ளவர்களென்பது புலனுகின்றது.

சோழ, பாண்டிய அரசகுலத்தவர், ஆயிரம் வருட காலமாக அரசகுலமாக வாழ்ந்து, பின் அந்நியரின் ஆட்சியை ஏற்றிருப்பார் என்பது நம்பமுடியாத வாதாட்டமாகும். அப்படி அரசகுலத்தவர் அடிபணிந்திருந்தால், அரசவம்சம் மகம்மதிய, விஜயநகர மன்னர்களின் ஆட்சியை பாண்டியர் ஏற்றிருந்தால், நாயக்கருக்கு பதிலாக பாண்டியரே சிற்றரசர்களாக ஆட்சிசெய்திருப்பார். ஐரோப்பியரும் இவர்களுக்கு உதவிசெய்திருப்பார் இன்று அந்த அரசகுலம், அரசாங்க மானியத்தில் கௌரவமாக வாழ்ந்திருக்கும், ஆனால் தமிழ் அரசகுலத்தவர் தன்மானமே பெரிதென கடைசிமட்டும் போராடி சகல சொத்து சுகபோகங்களையும் இழந்தனர். 14-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் வீழ்ச்சியடைந்த பாண்டியர் பின் 250 வருட காலமாக, தமிழன் கொடியை தரணியில் பறக்க முயற்சிசெய்தமையால் ஆத்திரமடைந்த ஆட்சியாளர் அவர்களுக்கு பல உபாயங்கள் செய்து நசுக்கினர்.

இந்தியாவில் நாடார் பழங்காலத்தில் நிலபுலங்கள் உடையவர்களாக இருந்தனரென்று பல சான்றுகள் உள்ளன. ஆங்கில கிழக்கிந்திய கொம்பனிக்காரர் ஆற்காட்டு நவாப்பிடமிருந்து தமிழ் நாட்டை கையேற்ற தொடக்கத்தில் அதை அளந்து ஒழுங்கு பண்ணியவரான திரு. லஷங்டன அவர்கள் (S. R. Lushington) 1802-ல் எழுதிய நம்முடைய முதலாம் அறிக்கையிலும்; 1820-ம் வருடத்தளவில் திருநெல்வேலி ஜில்லாவில் அளவை செய்த திரு. தர்புள்

அவர்களும் (Thomas Turnbull), திருநெல்வேலி பகுதியில் இரண்டாவதாக அளவை நடத்திய மதிப்பிற்குரிய திரு பக்கிள் அவர்களும் (R. K. Puckle) மதுரைப் பிரிவுக்கு "மானுயல்" எழுதிய திரு நெல்சன் அவர்களும் (J. H. Nelson), 1871-ம் வருடம் மதராஸ் சென்ஸ் உத்தியோகஸ்தரான சார்னிஸ் அவர்களும் (Cornish W. K.), 1879-ம் வருடத்தில் திருநெல்வேலிப் பிரிவு மானுவல் எழுதிய திரு. ஸ்டுவர்ட் அவர்களும் (A. J. Stuart), நாடார்களே நிலப்பிரபுக்களென்பதை ஏற்றுள்ளனர்.

நாடார் தங்கள் வீழ்ச்சிக்காலத்தில் அனுபவித்த துன்பங்களைப் பற்றி "மதராஸ் டைம்ஸ்" பத்திரிகையில் (28-11-1900) பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "தங்கள் அரசாட்சி நின்று போன கால முதல் சாண்டார் அடைத்திருக்கும் துன்பங்களுக்கு கணக்கு வழக்கில்லை. நெடுக வந்த வேற்றரசர்கள் மிகவும் பரிதாபிக்கத்தக்க விதமான கொடுரங்களை அவர்களுக்கு நடப்பித்தார்கள். அரசபோகங்களை இழந்த சான்றுர் எதிரிகளால் வதைக்கப்பட்டமை ஆச்சரியமான விஷயமல்ல.

They adversity the (the Chantas) have been exposed to since the days of their rule has been great: Awful treatment has been meted out to them by the successive rulers. it is no wonder that they have suffered so.

# சேர நாட்டில் சான்றுர்களின் அரசு.

கரிகால சோழனுகிய சான்றுர வம்சத்து மன்னன் சேரவம்சத்துடன் விவாக தொடர்பு வைத்து சேரநாட்டிலும் சூரியவம்சத்தவரின் ஆட்சியை மலரச்செய்கின்றுன். சங்ககாலத்தில் சோழமன்னருக்கும், சேர மன்னருக்கும் இருந்த ஒற்றுமைக்கு இதுவே காரணமாகும். சங்ககாலத்தில் சோழரும், சேரரும் ஒன்றுசேர்ந்து பாண்டியருடன் பலமுறை போராடியுள்ளனர். தலையன்கானத்து போர் இதற்கு சிறந்த உதாரணமாகும். சான்றுருக்குள் திருபாபூர் நாடார், உடைய மார்த்தாண்ட நாடார் நாகமணி மார்த்தாண்ட நாடார் என்ற பட்டங்கள் சேரர் வழங்கியதாக திரு. நாகம்ஐயா கூறுகின்றுர். சேர அரசர் காலத்தில் சான்றுர் மிகவும் கௌரவமாக நடாத்தப்பட்டு வந்தனர். சேரர் குடநாடன் என்ற பட்டத்தை வைத்திருந்தனர்.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பலஸ்தீனு நாட்டிலிருந்து சேரநாட்டில் வந்து குடியேறிய யூதர்களுக்கு அக்காலத்தில் ஆட்சிபுரிந்தோர் எழுதிக்கொடுத்திருந்த தாமிர சாஸனப்பட்டயத்தில் கையொழுத்திட்டிருப்பவர்கள்.

1. கோவர்த்தன மார்த்தாண்டா வேணுடைணு
2. கோதை ஸ்ரீ கந்தவேனுவழி நாடன்.
3. மானவேல் பலமானவில் ஏரால நாடன்.
4. ஈராயிரஞ் சாத்த வள்ளுவன் நாடன்.
5. கோதையிரலி நெடுப்புரையூர் நாடன்.

இவர்கள் ஐந்து சிற்றரசர்களாகும்.

திருவாங்கூர் ஸ்டேட் மானுவல் எழுதிய திரு. நாகம்ஐயா B. A. F. R. Hist,s பின்வருமாறு கூறுகின்றுர்:- ''சாணுர் தின்னவேலியிலிருந்து தென் மலேயாளத்தில் வந்து குடியேறியிருக்கவேண்டும். இவர்களின் பழைய ஐதிகங்களில் இருந்து, மலே யாளத்தில் சேர அரசர்களின் அழைப்பித்தலின் பேரிலே வந்து குடியேறியுள்ளனர். எட்டு வீட்டு நாடாக்கள் என்ற பெயருடன் இன்றும் எட்டு குடும் பங்கள் உண்டு. மலேயாளத்தில் ஏரனியல் எனப் பட்ட சேர அரசர்களின் பழைய தலேநகரிலேயே அதிகமான சாணுர் காணப்படுகின்றனர் மலேயா ளத்தில் 1,55,864 சாணுர் வசிக்கின்றனர் ஏரணியில் மட்டும் 43,044 சாணுர் வசிக்கின்றனர். திருநெல் வேலிக்கு அருகாமையிலுள்ள அகஸ்தீஸ்வரம், தோ வல போன்ற கிராமங்களில் முறையே 23,718, 3263 சாணுர் மட்டுமே காணப்படுகின்றனர். தமிழ்நாட் டின் எல்லேயை விட, மலேயாளத்தின் பழைய தலே நகரில் சாணுர் அதிகமாக வசிப்பதிலிருந்து, அவர் களுக்கும், அரசர்களுக்கும் இருந்த நெருங்கிய தொடர்பை காட்டுகின்றது. அவர்கள் சேரநாட்டு அரசர்களின் ஆதரவில் வாழ்ந்தனர் என்பது நிரூ பிக்கப்படுகின்றது. அவர்கள் ஆதிகாலம் தொடக் கம் நிரந்தரமாக மலேயாளத்தில் வசித்து வருகின் றனர். ஏரனியலில் மற்றைய சாதியினரை விட சா ணுரே கூடுதலாக காணப்படுகின்றனர். இவர்கள் வலங்கை சாதியினருக்குள் மிக உயர்ந்த இடத்தைப் பெறுகின்றனர். வலங்கை உகர்வு கொண்டார், அல்லது வலங்கை உய்ய கொண்டார் என்ற பட் டங்களே வைத்திருந்ததாக பழைய உறுதிகளிலும் இன்றைய உறுதிகளிலும் காணலாம்.

அதனுல் சாண்டார் ஆதியில் சேர அரச குல மாக இருந்து, 9-ம் நூற்ருண்டின் முற்பகுதியில் சேரமான்பெருமாள் ஆட்சியுடன் வீழ்ச்சியடைந் தனர். அதன் பின்பே நம்பூதிரி குடும்பத்தினர் (பிராமணர்) சேரநாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி னர் இவர்கள் சேரநாட்டில் மருமக்கள் ஆட்சி முறையை புகுத்தியதின் மூலமாக, சான்ருர் வீழ்ச் சியடைந்தனர். அரசர்களின் நண்பர்களாக வட இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய நம்பூதிரிகள் அரசகுலத்தை அழித்து தங்களே அரசவம்சமாக்கிக் கொண்டனர். நம்பூதிரிகள் ஆட்சிக்காலத்திலேயே கேரளத்தில் தமிழ்மொழியின் செல்வாக்கு மங்கி மலேயாளம் தேசிய மொழியாக மாறிற்று.

1. The Shanars of Travancore seem to have migrated into the Southern Taluqs of Travancore either from or through the Tinnevelly district

The traditions of some of the old families show that their ancestors had been called into the country by some of the ancient Kings of Travancore. There are eight families to this day known as the Ettuveetu Nadakkal. Of all the talugs in Travancore, Eraniel has the largest number of Shanars. out of a total of 1,55,864 Shanars in Travancore, 43,044 are

found in the Eraniel talug, the earliest seat of the Travancore Sovereigns, while the talugs of Agasthiswaram and Tovala, which lie nearer to Tinnevelly than Eraniel, have only 23,718 and 3263 respectively. This Fact lands countenance to an inference that they were patronised by the ancient Kings of Travancore, They have permanatly settled down in the country. They are more numerous than any other castes in Eraniel. Shanars occupy a very high place among the right hand classes. The Shanars are known as Valankai-Ugarva kondar or Valankai-Uye-kondar. These terms are found in ancient and modern title deeds-The Travancore State Manual-Nagam Aiya B. A. F. R. Hist. S.

# சேர நாட்டில்—சென்னிநாடான் அரசர் பரம்பரை
## சோழ—சேரர் தொடர்பு

முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி

வேற்பஃறடங்கைப் பெருவிறற் கிள்ளி — உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி

கரிகாற் சோழன் கி. பி. 50–75

- சேரலாதன் சேர அரசன் (55-90)
- சேட்சென்னி நலங்கிள்ளி (95-105)
- மாலனந்தான்
- நெடுங்கிள்ளி

சேட்சென்னி நலங்கிள்ளி:
- கிள்ளிவளவன் (105-120)
- பெருநற்கிள்ளி (120-150)

சேரலாதன்:
- செங்குட்டுவன்
- இளங்கோ வடிகள் (சிலப்பதிகார ஆசிரியர்)

# 8. இலங்கையில் சான்ருர ஆட்சி தமிழ் சான்ருர்கள்.

மா, பலா, கமுகு, வாழை முதலிய மரங்கள் மரகதப்பத்தல் வேய்ந்ததோ என சந்தேகிக்கும் வண்ணம் வயல் வெளிகளிலே, கோலக்குன்றுகளிலே நீலம் கலகலவென சிந்து பாடும் சிற்ருேடை அருகே, அலை ஓசை ஒலிக்கும் கடலோரங்களிலே இயற்கை எழிலில் மயங்கிய போர்வீரர்களின் சந்ததியினர் வாழுமிடம் மாதோட்டம். திருக்கேதீஸ்வரத்தைச் சுற்றி வாழ்ந்த தளையன்கமத்தவர் என்னும் வேளாண்மையை தொழிலாகவுடைய சான்ருர் (சேனுதிபதி இரத்தினமணி கங்கவள நாடாள்வாரின் சந்ததியினர்) தங்கள் தலைவன் கீழ் ஒன்று சேருகின்றனர். அன்று வருடாந்த சாதித்திருநாள். தலைவன் புலிக்கொடியைப் பறக்கவிடுகின்ருன். எல்லோர் வாயிலும் தங்களை அறியாமலே இக்கீதம் வெளிவருகின்றது.

''காராளி சூலுலகில் மேன்மை தாங்கும்
காவேரி நகருடையோன் சோழராயன்
பேரான வம்சத்தில் பெருமைபெற்ருேன்
பிரதான கங்கைவள நாடாழ் நாடன்
பூராய குருசில் பொன்னரிய மாலை
புலிக்கொடியும் மூலாறு வரிசை
யோங்கும் நேராளி கொண்ட நாவற்குளத்தில்
நீடுழி வாழ்வு பெற்று வாழ்க நாமே''

நாவற்குளம் திருக்கேதீஸ்வரப் பகுதியிலிருக்கும் ஒரு ஊராகும். அது திருக்கேதீஸ்வர கோவிலிலிருந்து ஒரு மைல் தூரமாகும். திருக்கேதீஸ்வரத்தை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். 1. திருக்கேதீஸ்வரம், கோவில் அரண்மனை உள்ள இடம். 2. மாந்தை-மேட்டு நிலம். 3. நாவற்குளம்-வயற்பிரதேசம். சோழ அரசகுலத்தவராகிய இச்சான்றூர் நொச்சிகுளம், கற்கடந்தகுளம், நற்றுங்கண்டல் (பனங்காமம்) நெடுங்கேணிக்கு அருகாமையிலுள்ள ஒதியமலை, பட்டிகுடியிருப்பு, என்ற ஊர்களிலும் காணப்படுகின்றனர். இவர்கள் சைவசமயத்தவராகவும், கத்தோலிக்கராகவும் பிரிந்து வாழுகின்றனர். இவர்கள் வேளாண்மையை தொழிலாகக் கொண்டவர்கள். இவர்கள் சுற்றியுள்ள நிலங்களுக்கு அதிபதியாகக் காணப்படுகின்றனர்.

மேற்கூறிய குலக்கீதம் ஆதித்த நாடார் என்பவரால் எழுதப்பட்ட "நற்கருணை வாசாப்பு" என்ற நாடகத்தில் காணப்படுகின்றது. இவர் கற்கடந்தகுளத்தில் 1799-1849-ம் ஆண்டு வரை வாழ்ந்தவராகும். இலங்கையில் நிரந்தர வாசிகளான சான்றுருக்குள் "நாடான்" என்ற பட்டம் இக்குடும்பத்தினர் மத்தியில் மட்டுமே காணப்படுகின்றது, இவர்கள் தங்களை சேனாதிபதி இரத்தினமணி கங்கவள நாடாள்வாரின் சந்ததியினர் என்றும், ஆதித்த நாடன் பரம்பரை என்றும் அழைப்பர்.

இலங்கையில் சோழர் ஆட்சிக் காலத்திலேயே தமிழ் பேசும் சான்ருர் இலங்கைக்கு வந்தனர். 11-ம் நூற்ருண்டு தொடக்கத்தில் இராசராசசோழன் இலங்கையைப் பிடித்தபொழுது தனது இனத்தவரையும், வேளாளரையும் ஆட்சியாளராக திருகேதீஸ்வரத்திலும், அனுராதபுரத்திலும், பொலநறுவையிலும் நியமித்தான். திருக்கேதீஸ்வரத்தில் தாழிக்குமரனும், பின் சேனுதிபதி இரத்தினமணி கங்கவள நாடாள்வாரும் வடபகுதிக்கு சிற்றரசர்களாக நியமிக்கப்பட்டனர். பொலநறுவையில் மங்களப்பாடி வெள்ளாலன், சோழப்பல்லவரையன், ராஜாதிராஜா முதக்ககரை நாடாள்வான், முகரி நாடாள்வான், மோகனூருடையான் திருபூவணதேவன், நல்லூர்ருடையான் பஞ்சத்திவாணன், தில்லேக்கரசு தியாக சிந்தாமணி மூவேந்த வேளாண் ஆகியோராகும். அநுராதபுரத்தில் ஐயமுரி நாடாள்வார் ஆட்சி செய்தான். நிந்தவினேதபுரத்தில் இளேயமும்முடி சோழ அனுக்காலப் பெரும்மிடை வளவன் ஆட்சிசெய்தான் மேற்கூறிய விபரங்களே 16-11-69-ம் திகதி வீரகேசரி கலாநிதி இந்திரபாலாவின் கட்டுரையிலும் காணலாம். நாடாள்வார் நாடார் இனத்தவரென சரித்திர கலாநிதி நாகம் ஐயா கூறுகின்ருர். வேளாளர் தமிழ் பிரபுக்கள் குலத்தவராகும். வேளாளரும், சான்ருர்களுமே வேளாண்மை செய்யும் வலங்கையர்களாகும். வேளாளர், நாடார் மற்றும் அவர்களுடைய குடிமக்களும் வலங்கையர் எனவும், மறவர், வன்னியர், பள்ளர் இடங்கையர் எனவும் அழைக்கப்பட்டதாக திரு. S. காசி செட்டியார் கூறுகின்ருர்.

மாதோட்டம்: மன்னார் மாவட்டத்தில் காணப் படும் ஒரு பகுதியாகும். கட்டுக்கரை குளத்தைச் (Giants Tank) சுற்றியுள்ள பிரதேசமே மாதோட் டமாகும். இதன் தலைநகரம் திருக்கேதீஸ்வரமாகும் திருக்கேதீஸ்வரத்திலேயே அரண்மனையும், துறை முகமும் இருந்தது. இது சிங்கள அரசர்களின் துறை முகமாக விளங்கி வந்தது சிங்கள தமிழ் அரசர் கள், அரசியல் ஆதிக்கத்தை வைத்திருப்பதற்காக இந்தநகரை தங்கள் கைக்குள் வைத்திருக்க விரும் பினர். சிங்களத்தில் இந்நகர் "மகாதீர்த்த" என அழைக்கப்பட்டது.

சோழ அரசர் காலத்தில் இப்பகுதி அதிமுக்கிய ஸ்தானத்தை அடைகின்றது. வடபகுதியை ஆட்சி செய்த சோழ சிற்றரசன் திருக்கேதீஸ்வரத்தில் இருந்தான். இது இந்தியாவுக்கு அண்மையிலுள்ள நகரமாக இருந்தபடியால் சோழர், இந்த நகரத்தில் மிகக் கவனம் செலுத்தினர். திருக்கேதீஸ்வரத்திற்கு "இராசராசபுரம்" என பெயரிட்டனர். இதை இலங் கையின் தலைநகராக்க சகல ஆயத்தங்களும் செய் யும் தருவாயில் சோழ சாம்ராச்சியம் வீழ்ச்சியுற்றது. சோழர்காலத்திலும், அதற்கு பின்பும் சகலவித அரசியல் புரட்சிகளுக்கும் மறைவிடமாக விளங் கியது. இரண்டாம் விக்கிரமன் காலத்தில் தமிழ் படைக்கு தலைமை தாங்கிய வீரதேவன் மாதோட் டத்தைச் சேர்ந்தவனாகும். 13-ம் நூற்றாண்டில் கங்க வம்சத்தவனாகிய மாகனின் பின் யாழ்ப்பாண அரசு எழுச்சியுற்றது. இதன் பின் யாழ்ப்பாண அரசர் தங்களுடைய சிற்றரசனை திருக்கேதீஸ்வரத்தில்

வைத்திருந்தனர். யாழ்ப்பாண அரசர் காலத்தில் மாதோட்டம் சிறந்து விளங்கியது. யாழ்ப்பாண அரசர் மாதோட்டத்தில் வன்னியரையும், சிங்கள வரையும் அடக்குவதற்கு சிறந்த படையை வைத் திருந்தனர். போர்த்துக்கீயர் மாதோட்டத்தைக் கைப்பற்றும் பொழுது மகத்தன் என்பவன் திருக் கேதீஸ்வரத்தில் சிற்றரசனாக ஆட்சிசெய்தான். போர்த்துக்கீயர் மாதோட்டத்தைக் கைப்பற்றியதும் தங்கள் வசதிக்காகவும்,தற்காப்புக்காகவும் மன்னாரில் ஆதரவாளர் குடியேற்றப்பட்டு, அது தலைநகராக்கப் பட்டது.

யாழ்ப்பாண அரசு: தொடக்கத்தில் இப்பகுதி நாகதீவம் என அழைக்கப்பட்டது. நாகதீபம் மூன்று பிரிவுகளாக நிர்வகிக்கப்பட்டது. மேற்கு பகுதி மணிபல்லவம், மணிநாகதீபம், மணிபுரம் என அழைக்கப்பட்டது. மத்திய பகுதி வலிகம அல்லது மணலூர் என அழைக்கப்பட்டது. கிழக் குப்பகுதி எருமைத்தீவு என்றும் எருமை முல்லைத் தீவு என்றும் பெயர் பெற்றது. நாகமன்னர்கள் இப்பகுதியை ஆட்சிசெய்தனர். அவர்கள் சிங்கள மன்னர்களுக்குக் கீழ் சிற்றரசர்களாக ஆட்சி செய் தனர். கி. பி. 1213 ல் கலிங்க வம்சத்தவனாகிய மாகன் இலங்கைமேல் படையெடுத்து சிங்கள அரசைக் கைப்பற்ற முயற்சிசெய்தான். இவன் கன்னட நாட்டை ஆட்சிசெய்த கங்க வம்சத்தவ னாகும். செண்பகப் பெருமாள் வென்று துரத்தி விட்ட 6-ம் செகராசசேகரனைச் சிங்கள சந்தேசய

நூல் "கன்னடன்" என அழைத்தமை குறிப்பிடத் தக்கது. யாழ்ப்பாண அரசர்களுடன் தொடர்புள்ள மடப்பள்ளிகள் கன்னடத்தைச் சேர்ந்தவர்கள். பண்டைக்காலத்தில் மடப்பள்ளிப் பெயர் கொண்டவூர் கலிங்க தேசத்தில் காணப்பட்டது. பாண்டிய நாட்டில் "சேது" என்னும் பிரிவை ஆட்சிசெய்த கங்க குலத்தவரே யாழ் அரசை கைப்பற்றினர். இவர்கள் கலிங்க தேசத்திலிருந்தே கன்னடத்தில் குடியேறி ஆட்சி செய்தனர். 13 ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் சான்ருர வம்சம் கன்னடத்தின் பெரும் பகுதியை ஆட்சிசெய்தமையால், கங்க வம்சத்தினர் சான்ருரின் ஆதரவுடனே இலங்கைமேல் படையெடுத்துள்ளனர்

தொடக்கத்தில் மாகன் இலங்கை முழுவதையும் கைப்பற்றி ஆட்சிசெய்தாலும், காலப்போக்கில் அவன் பொலநறுவையிலிருந்து வெளியேற்றப்பட்டான். அவனை இலங்கையிலிருந்து வெளியேற்ற முடியாமலிருந்தது. அவன் வடபகுதியைக் கைப்பற்றி சிங்க நகரத்தை தலைநகராக்கிக் கொண்டான் இதன் பின் யாழ்ப்பாண அரசு பலமுற்று விளங்கியது. யாழ்ப்பாண அரசர்கள் தங்களது சிற்றரசர்களை திருக்கேதீஸ்வரம், அடங்காபற்று, ஊர்காவற்துறை போன்ற இடங்களில் நியமித்திருந்தனர்.

கி. பி. 1265-ல் சேதவர்மன் வீரபாண்டியன் இலங்கைமேல் படையெடுத்தான். யாழ்ப்பாண அரசன் பாண்டியனுக்கு திறைசெலுத்த வேண்டி நே

ரிட்டது. 1284-ல் ஆரிய சக்கரவர்த்தி இலங்கைமேல் படையெடுத்து, இலங்கை பாண்டிய சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாக்கப்பட்டது. ஆரிய சக்கரவர்த்தி யாழ்ப்பாணத்திலிருந்து ஆட்சிசெய்தான். இவன் முழு இலங்கையையும் ஆட்சிசெய்தான். யாழ்ப்பாண அரசனின் கோட்டைகள் கொழும்பு, வத்தளை, நீர்கொழும்பு, சிலாபம் போன்ற இடங்களில் காணப்பட்டன. 1360-க்குப் பின் யாழ்ப்பாண அரசர் சிங்களப் பகுதிகளை இழந்தனர்

15-ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாண அரசு விஜயநகர சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாக மாறுகின்றது. விஜயநகர மன்னனுகிய இரண்டாம் தேவராயன் (1422-1446) யாழ்ப்பாணத்தை விஜயநகர சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாக்கினுன். 1450-ல் சிங்கள மன்னனுகிய VI-ம் பரரக்கிரமபாகு யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றினுன். 1478-ல் பரராசசேகரன் சிங்களவர்களை வென்று யாழ்ப்பாண அரசை சுதந்திர நாடாக்கினுன். கி. பி. 1591-ல் போர்த்துக்கீயர் யாழ்ப்பாண அரரைக் கைப்பற்றினர். தமிழ் அரசு நிரந்தரமாக அந்நியருக்கு அடிமையாகிறது.

யாழ்ப்பாணத்து அரசர் நாணயம்:

யாழ்ப்பாணத்து அரசநாணயம் செப்புக் காசு மட்டுமே போலும். இவை நங்காலத்துச் சதமும் அரைச் சதமும் போன்ற அளவுள்ளவை. பொன் வெள்ளிக் காசுகள் பிறநாட்டரசருடையவை. இங்கு

வழங்கினவாகத் தோன்றும் வராக (பன்றி) உருவந் தாங்கிய வராதன்கள், கப்பற் சித்திரமுடைய "சாண்டான் காசு" ஆதிய மாத்திர மன்று உரோமரின் பொன் வெள்ளி நாணயங்கள் தாமும் யாழ்ப்பாணத் தின் வெவ்வேறிடங்களிற் பழம் புதையலாய்க் கண் டெடுக்கப்பட்டு வருகின்றமையை நோக்குக.
"யாழ்ப்பாண வைபவ விமர்சனம்" வண ஞானப் பிரகாச அடிகள். பக்கம்: 97.

வன்னி நாடு: சிங்கள மன்னர் தமிழ் நாட்டிலிருந்து தமிழ் போர்வீரர்களை வரவேற்று தங்கள் படையில் வைத்திருந்தனர். அவர்களுக்கு வன்னியில் நிலங்கள் கொடுக்கப்பட்டன. சிங்கள அரசர் தமிழ் அரசகு மாரிகளை விவாகம் செய்வது மூலமும், தமிழ் அரச ரின் படையெடுப்பு மூலமும் இன்னும் அனேக தமிழர் வன்னியில் குடியேறினர். இக்காரணங் களால் வன்னி பயங்கர போர்வீரர்கள் நிரம்பிய பகுதியாக காணப்பட்டது. சிற்சில காலங்களில் இப்போர்வீரரின் தலைவர்கள் சிங்கள அரசர்களை யோ, யாழ்ப்பாண அரசர்களையோ மதியாது சுதந் திரமாக ஆட்சி செய்தனர்.

இப்பகுதி காட்டுப் பிரதேசமாக விளங்கிதால் வன்னி என அழைக்கப்பட்டது. சோழ அரசர் காலத்திற்குப் பின்பே இப்பகுதி சிறப்புற்று விளங் கியது இப்பகுதியில் முக்கியமாக வன்னியர், கரை யார், முக்குவர், கம்மாளர் காணப்பட்டனர். இச்

சாதியினரே "வன்னியான்" என்ற பட்டத்துடன் வன்னியில் ஆட்சிசெய்தனர். மாதோட்டம், அடங்காப்பற்று இதற்குள் சேரவில்லை. ஆனையிரவுக்கும், மன்னருக்கும் திரிகோணமலைக்குமிடையே 18 வன்னி இராச்சியங்கள் இருந்ததாக கூறப்படுகின்றது. இன்று வன்னியரில் அனேகர் தங்களை வேளாளர் என பெயர் மாற்றி அழைத்துவருகின்றனர். வன்னியர் ஓமாந்தை, பூனகரி, பனங்காமம், முள்ளியவளை, திரிகோணமலை, நானுட்டான், நடுச்செட்டிகுளம், புதுக்குடியிருப்பு, துணுக்காய், உடையூர் என்ற பகுதிகளை ஆட்சிசெய்தனர். முக்குவர் மட்டக்களப்பை ஆட்சிசெய்தனர். கரையார் முல்லைத்தீவுப் பகுதியை ஆட்சிசெய்தனர். கம்மாளர், வேளாளர் சான்ருர்களைப் போன்று யாழ்ப்பாண அரசர்களுக்கு ஆதரவாக இருந்தனர். இதனுல் போலும் கம்மாளர் திருக்கேதீஸ்வரத்தின் சிற்றரசர்களாக நியமிக்கப்படட்டனர். கம்மாளருக்கு திருகேதீஸ்வர கோவில் பங்கிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய வன்னியர் என்ற சாதியினர் விஜயநகர அரசர்களால் வன்னியில் குடியேற்றப்பட்டனர். யாழ்ப்பாண அரசை விஜயநகர மன்னன் கைப்பற்றியதும் வேளாலரும், சான்ருர்களும் விஜயநகர மன்னர்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லை. இவ்வலங்கையரின் ஒற்றுமையை முறியடிக்கவே 1420-ல் விஜயநகர அரசனுல் வன்னியர் வன்னியில் சிற்றரசர்களாக நியமிக்கப்பட்டனர். விஜயநகர அரசர் காலத்தில் வன்னியருக்கு அரசர்களைப் போன்று

சகல அதிகாரங்களும் கொடுக்கப்பட்டது. பிராமணரினது செல்வாக்கும் அதிகரித்தது. விஜயநகர அரசர்களின் ஆதரவுடன் சான்ருரின் பலக்கோட்டையாகிய அடங்காப்பற்று கைப்பற்றப்பட்டு, முள்ளியவளை தலைநகராக்கப்பட்டது. இப்பகுதிக்கு வன்னியர் ஆட்சியாளர்களாக நியமிக்கப்பட்டனர். விஜயநகர அரசர்களின் வீழ்ச்சிக்குப்பின் வன்னியர் திரும்ப பலயீனமுற்றனர். இதற்குப்பின் வன்னியருக்கும், யரழ்ப்பாண மன்னர்களுக்கும் அடிக்கடி போராட்டங்கள் நடைபெற்றன. வன்னியர் சிங்கள மன்னர்களின் உதவியுடன் யாழ்ப்பாணத்தின் மேல் படையெடுத்தனர். யாழ்ப்பாண அரசர் இவர்களைப் பலமுறை அடக்கி தங்கள் அதிகாரத்தைச் செலுத்தினர். அவ்வதிகாரத்தை ஏற்றுக்கொண்டமைக்காக வன்னியர் தளையரை தங்கள் ஊர்த்தலைவராக நியமித்தனர். இத்தளையர் யாழ்ப்பாண அரசர்களுக்கு நம்பிக்கையாக இருந்து வன்னியரின் கிளர்ச்சிகளை அடக்கி வந்தனர்.

தளையர் சான்ருருக்குள்ளிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதனுலேயே இச்சாதியினர் தளையபகுதி என யாழ்ப்பாணத்தில் அழைக்கப்படுகின்றனர். "தலையர் (தலையாரி) என்போர் ஊர்த் தலைவர்களாயிருந்தனர். "Sergent of Native Militia" (படைத் தலைவர்) வன்னியர்—கலாநிதி சி. பத்மநாதன். பக்கம்: 77, 102

தரை என்ற அரசியல் பிரிவு பல கிராமங்களை உள்ளடக்கியது. பல கிராமங்களில் வாழ்ந்த ஒரே தொழிலைப் புரிந்தோரை உள்ளடக்கியது. இத்தரை களுக்கு தலையார் அல்லது அதிகாரி என்போர் இருந்தார்கள். அவர்கள் தலைவரிக்கு பொறுப்பாக இருந்தனர். (பண்டைய யாழ்ப்பாணத்தின்-அரசியல் சமூக அமைப்புகள்-சே. பத்பநாதன்) வீரகேசரி வார வெளியீடு 25-3-71.

போர்த்துக்கீயர், ஒல்லாந்தர் காலத்தில் இவ் வன்னியர் கண்டி அரசர்களுக்கு ஆதரவாக, அந் நியருக்கு எதிராக போரடினர். பண்டார வன்னியன் இவர்களுக்குள் முக்கிய தலைவனுகும். ஆங்கிலேயர் காலத்தில் முள்ளியவளையும், பனங்காமமும் வீழ்ச்சி யுற்றது. பனங்காமத்தில் வன்னியர் வீழ்ச்சியடைந் ததும், தலையராகிய சான்ருர் அப்பகுதியில் செல் வாக்கடையத்தொடங்கினர். இங்கு பாண்டியன்குளம் என்னும் கிராமத்தின் தாய் உறுதி இச்சான்ருர் களின் பெயரிலேயே இருக்கின்றது.

**அடங்காப்பற்று:**

முள்ளியவளை, பட்டிக்குடியிருப்பு, ஒதியமலை, பண்டாரக்குளம் என்ற கிராமங்களை உள்ளடக்கிய பகுதியே அடங்காப்பற்ருகும். இதன் தலைநகரம் முள்ளிமாநகர் என அழைக்கப்பட்ட முள்ளியவளை யாகும். இப்பகுதி சோழ அரசர்களால் சிங்களவரிட மிருந்து கைப்பற்றப்பட்டு சான்ருர்களிடம் ஒப் படைக்கப்பட்டது. இச்சான்ருர்களுக்குள் சந்திரவன்

புகழுள்ளவனுகும். இத்தகவலே வையாபாடல் என்னும் நூலில் காணலாம் இப்பகுதியில் வலங்கையர் ஆதிக்கத்தில் எல்லா சாதி மக்களும் வாழ்ந்தனர்.

இப்பகுதி மக்கள் சிங்களவர்களுக்கு திறை கொடுக்காமல் சுதந்திரமாக வாழ்ந்ததால் அடங்காப்பற்றென அழைக்கப்பட்டது. கங்க வம்சத்தவர்களாகிய யாழ்ப்பாண அரசர்களுக்கும், சான்ருர்களுக்கும் அரசியல் நட்பும், விவாகத் தொடர்பும் இருந்ததால், யாழ்ப்பாண அரசர் இவர்களே ஆதரித்தனர். யாழ்ப்பாண அரசர் போர்வீரர்களாகிய சான்ருர்களின் பகமையை விரும்பாததும், அடுத்த காரணமாகும். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சான்ருர் தங்கள் இனத்தவர்களுக்கு மாருக போராட விரும்பவில்லே.

1422-ல் விஜயநகர அரசர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் யாழ்ப்பாண அரசர்களின் போர் வீரர்களான சான்ருர் தாக்கப்பட்டனர் தமிழ் நாட்டிலிருந்து வன்னியர் குடும்பங்கள் கொண்டு வரப்பட்டு சிற்றரசர்களாக நியமிக்கப்பட்டனர். அடங்காப்பற்றில் சான்ருர் தாக்கப்பட்டு, வன்னியர் எழுச்சியுற்றனர். முள்ளியவளேயில் வன்னியர் ஆட்சி ஏற்பட்டதும். விஜயநகர அரசர் யாழ்ப்பாணத்தை இழந்ததும் சான்ருர் மீண்டும் எழுச்சியுற்றனர். ஆனுல் அடங்காப்பற்று திரந்தரமாக வன்னியரின் ஆளுகைக்கு உட்பட்டது.

முள்ளியவளையை வன்னியர் கைப்பற்றியதும் சான்ருர் தாக்கப்பட்டனர். பெரும் தொகையான சான்ருர் முள்ளியவளையைவிட்டு முடவன் குடியிருப் பில் மறைந்து வாழ்ந்தனர். முள்ளியவளையில் எஞ்சி இருந்தவர்கள் தங்களை வேளாளர் என பெயர் மாற்றி வாழ்ந்தனர். இப்படியாக பெயர் மாற்றி அழைத்தவர்களை முள்ளியவளை-கணுக்கேணி பகுதி யில் காணலாம். முடவன் குடியிருப்பில் மறைந்து வாழ்ந்த சான்ருர் விஜயநகர அரசர் யாழ்ப்பாண அரசை இழந்ததும் ஒதியமலை, கற்குளம் பட்டிகுடி யிருப்பு போன்ற கிராமங்களில் குடியேறினர். இப் பகுதியில் யாழ்ப்பாண அரசர்களின் ஆதரவால் கிராமத் தலைவர் பதவி (தளையர்) சான்ருர்களுக்கு கிடைத்தது. ஒல்லாந்தர் காலத்தில் வன்னியர் பக்கம் சேர்ந்து போராடிய சான்ருர் போர் அடி மைகளாக்கப்பட்டு யானைக்கு உணவு கொடுக்கும் தொழிலைச் செய்தனர். ஆங்கிலேயர் இப்போர் அடி மைகளுக்கு சுதந்திரம் கொடுத்தனர்.

இச்சான்ருர் போர்களினுலும், கொள்ளை நோய் களினுலும், யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு குடிபெ யர்ந்து சென்றதாலும் தொகையில் குறைந்தனர்.

**மட்டக்களப்பு-பகுதியிலுள்ள சான்ருர்:**

**இராசராசசோழன் காலத்திலும், இராசேந்திர சோழன் காலத்திலும் பொலநறுவையைச் சுற்றி போர்வீரர்களாக அமர்த்தப்பட்டவர்களாகும்.**

சோழவம்சத்தவருக்கும்,சிங்களவர்களுக்கும் நடந்த போராட்டங்களில் சான்ருர்களில் பலர் மடிந்தனர். எஞ்சியவர் மட்டக்களப்பைச் சுற்றி மறைந்து மறைந்து வாழ்ந்தனர். காலப்போக்கில் இவர்கள் சிங்களப்படையில் சேவைசெய்யத் தொடங்கியதால் அம்பாரைப் பகுதியில் குடியேற்றப்பட்டனர். கல்முனை, கல்லாறு, அக்கரைப்பற்று, வந்நாறுமூலை போன்ற ஊர்களில் குடியேற்றப்பட்டனர். இவர்கள் சிங்கள அரசர்களுக்கு சேனுதிபதிகளாகவும், அமைச்சர்களாகவும், போர்வீரர்களாகவும் கடமையாற்றினர். இவர்கள் சிங்களப்பகுதிகளில் வாழ்ந்ததால் போர்த்துக்கீயர், ஒல்லாந்தர் காலத்தில் மட்டக்களப்பிலுள்ள முக்குவ சட்டங்கள் இவர்களைப் பாதிக்கவில்லை. கிழக்கு மாகாணத்தில் பல ஊர்களில் காணப்படும் சான்ருர் அம்பாரைபகுதியிலிருந்தே குடியெழும்பி சென்றதாகக் கூறுகின்றனர். அதனுல் சிங்கள அரசர்களுக்கு சேவை செய்தமை நிரூபிக்கப்படுகின்றது.

**கற்கடந்தகுளம்:** இவ்விடமும் சிங்கள அரசர்களின் இராஜதானியாக இருந்ததற்கு சான்றுகள் உண்டு. சிங்கள அரசன் திருக்கேதீஸ்வரத்தைத் தற்காப்பதற்காக இவ்விடத்தை அரண் செய்துள்ளான். காலப்போக்கில் சோழ அரசர்கள் இவ்விடத்தைக் கைப்பற்றி சான்ருர்களிடம் ஒப்படைத்தனர். பாண்டயன்கட்டு என்ற இடம் பாண்டியரும் இவ்விடத்தில் ஊசலாடியதை நினைவூட்டுகின்றது.

இக்கிராமத்தில் பல அரிய புராதன சின்னங்கள் கிடைத்துள்ளன. மாளிகைமோட்டை என்னும் இடத்தில் சிங்கள அரசனின் மாளிகையிருந்தது. சிங்கள அரசர் மூர்க்கமானவர்களாக (கோபமுடையவர்) இருந்தபடியால் மூர்க்கரையன் குளம் (மூர்க்க+ராயன்+குளம்) என அழைக்கப்பட்டது. இவ்வூரில் பாண்டியன்கட்டு, கோட்டைக்குளம் இராக்கிகுளம் (இராயன் குளம்) என்ற பெயர்கள், பழங்கா காலத்தில் அரண் செய்யப்பட்ட கிராமமென்பதை நிரூபிக்கின்றன. 1846-ல் டைக் (Dyke) என்பவரால் அழகான வேலைப்பாடுகளுடைய தூணின் நுணிக்கல் இவ்வூரில் கண்டெடுக்கப்பட்டது. (Mannar Monograph, W. J. S. Boake C.C.S.) Colombo museun library. ஐந்து அரசர்களின் சிலைகளும், பல புத்த பெருமானின் சிலைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த புத்த சிலைகளில் ஒன்றை ஆராய்ததிலிருந்து பொலநறுவைக் காலத்தைச் சேர்ந்ததாக முடிவு கட்டலாம். புத்த வருஷம் 2493-ல் (1950) சில புத்த குருமார் இங்கு பன்சல கட்டி, இத்தமிழரை புத்த சமயத்திற்கு மாற்ற முயற்சிசெய்தனர். அவர்களுக்கு மக்களின் ஆதரவு கிடைக்காததால் குடியெழும்பினர்.

இக்குளத்தை வெட்டும் பொழுது தூணுக்குப் பாவிக்கப்பட்ட கல் கண்டெடுக்கப்பட்டது. அதனால் கல்+கிடந்த+குளம் எனப் பெயர் ஏற்பட்டது. காலப்போக்கில் கற்கடந்தகுளம் என மருவியது. இன்று இங்கு சான்றுர்கள் மட்டுமே காணப்படுகின்

றனர். முற்காலத்தில் எல்லா சாதி மக்களும் இங்கு வாழ்ந்துள்ளனர். இங்கு சான்ருர்களுக்கே ஏராள நிலபுலங்கள் காணப்படுகின்றன இக்கிராமத்தவர் சந்ததி சந்ததியாக விதானைமார்களாகவும் சிற்சில காலங்களில் உடையார்களாகவும் கடமையாற்றியுள் ளனர். இவர்கள் கல்வியில் முன்னேற்றமடையாத தால் பின்தங்கியுள்ளனர். மாதோட்டத்தில் மற் றைய கிராமங்களைவிட பொருளாதார நிலையில் முன்னேற்றமடைந்துள்ளனர். 1813, 1821, 1867-ல் ஏற்பட்ட கொள்ளைநோய்களினுலும், போர்த்துக் கீயர், ஒல்லாந்தர் காலங்களில் ஏற்பட்ட யுத்தங் களினுலும் பலர் இறந்தனர்.

இம்மக்கள் மத்தியில் ஆதித்தன், கொடித்தோர் வீரசிங்கம் பட்டங்கட்டி, சில்வா, பெரேரா, போன்ற பட்டங்கள் உண்டு. சில்வா, பெரேரா, கோமஸ், சம்பாய்வு என்ற குடும்பப்பெயர்கள் போர்த்துக் கீய நாமங்களாகும். கொடிதோர் அல்லது கொடு தோர் குடும்பத்தினரின் ஆதி இருப்பிடம் பாண்டி யன் கட்டாகும் இப்பெயர் வந்தமைக்கு பல கார ணங்கள் கூறப்படுகின்றது. முதலாவதாக கொடித் தோட் செம்பியன் என்னும் சங்ககால சோழ மன் னனின் சந்ததியினர் எனக் கூறப்படுகின்றது. மற் றையோருக்கு பதவிகளும், பணமும் வழங்கியதால் கொடுத்தோர் என்ற பெயர் வந்ததாக வாதாடுகின் றனர். கொடிதுலக்கு என்னும் சிங்கள சேனுதிபதி யின் பதவியை வகித்ததால் இப்பட்டம் ஏற்பட்ட தாக சிங்களவர் கூறுகின்றனர்.

இலங்கையை ஆட்சிசெய்த பெருமாளாகிய அரசனுக்கு நரசிம்ஹன் இடுகுறிப்பேரென்றும் அவன் சத்திரிய குலத்தவனான மதுரை பாண்டிய அரசனின் மகளாகிய அல்லி ராணியை விவாகம் செய்தானென்றும் அவனுடைய குலமும், நாடார்களாகிய சான்றோர் குலமும், ஏககுலமென்றும், கொச்சி அரசின் (ஜனவிவரணம்) எக்னுகிரபி எழுதிய திரு. ஆனந்த கிருஷ்ண ஐயரவர்கள் (L K. Anantha Krishna Iyar B. A.) எழுதியுள்ளார்கள். இவனும் அடங்காப்பற்றில் அரசு செய்தவர்களில் ஒருவனாக இருக்கலாம்.

## யாழ்ப்பாண மன்னர் சான்றோர்களை ஆதரித்தமைக்கு காரணங்கள்:

1. யாழ்ப்பாண அரசர் கங்க வம்சத்தைச் சேர்ந்தவர்கள் கன்னடத்தில் கங்க வம்ச அரசர்கள் சான்றார வம்சத்து மன்னர்களுடன் திருமணத் தொடர்பு வைத்திருந்தனர். கங்கை இளவரசியான காஞ்சலா சான்றார வம்சத்து வீரதேவனை விவாகம் செய்தாள். முதலாம் தைலன் என்னும் சான்றார வம்சத்து மன்னனின் இரண்டாம் மனைவி கங்க வம்சத்தவளாகிய கலையரசியாகும் காமதேவனின் மகள் அரியாதேவி கங்கை அரசனை விவாகம் செய்தாள்.

2. பிற்கால பாண்டியர் சான்றார் என கல்வெட்டுகள் தெளிவாகக்கூறுகின்றன. பாண்டியர் யாழ்ப்பாணத்தை ஆளும் பொழுது சான்றார் உயர்

நிலையடைந்திருப்பர். யாழ்ப்பாண அரசர்களுக்கு கங்கைநாடான் என்ற பட்டம் இருந்தது. சோழ அரசர்களுக்கும் இப்பட்டம் இருந்தது. சான்ருர்கள் ஆதியில் கங்கைநதியிலுள்ள மதுரை அரசை ஆட்சிசெய்து, பின்பே தெற்கு நோக்கி படையெடுத்துவந்தனர். அதனுலேயே கங்கை நாடன் என்ற பட்டம் ஏற்பட்டது.

3. சிங்கள அரசவம்சம் சிங்கக் கொடியுடைய துராவ (Durawa) எனப்படும் சிங்களச் சான்ருர்களாகும்.

4. நிலபிரபுக்களான வேளாருக்கும், போர்வீரர்களான சான்ருர்களுக்கும் வலங்கையர் என்ற முறையில் ஐக்கியம் இருந்தது. யாழ்ப்பாண அரசர் மறவரை ஆதரிக்கவில்லை.

யாழ்ப்பாண அரசர் காலத்தில் வேளாளர், சான்ருர், தனக்காரர் மற்றைய சாதியினரைவிட உயர்ந்தவர்களாகும். மேற்கூறிய மூன்று சாதியினருக்கு மட்டுமே கிராமங்களை ஆள உரிமையளிக்கப்பட்டது சான்ருர் படைக்கும், வேளாளர் நிர்வாகத்திற்கும் தனக்காரர் நிதிக்கும் பொறுப்பாகயிருந்தனர். அதிகாரிவரி வேளாளர், சாண்டார், தனக்காரர் என்னும் சாதியினருக்கே உரித்தாகயிருந்தது. மேற்கூறிய விபரங்களை யாழ்ப்பாண வைபவ கௌமுதி 75-ம் பக்கத்தில் காணப்படுகின்றது. இந்நூல் திரு. K. வேலுப்பிள்ளை என்பவரால் எழுதப்பட்டது. இவர் வேளாள குலத்தைச் சேர்ந்தவராகும்.

யாழ்ப்பாண வைபவ கௌமுதி யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட சாதிமுறையை பின்வருமாறு ஒழுங்குபடுத்திக் கூறுகின்றது. — தேசவழமைச் சட்டம்.

முதலாவது பிரிவு: வேளாளர், சான்றூர், தனக்காரர்.

இரண்டவது பிரிவு: பரதேசிகள், மடப்பள்ளி, மலையாளி.

மூன்றும் பிரிவு: மீனவர் (கரையார், முக்கியர், பரவர், செம்படவர், கடையர், திமிலர்,)சோனகர், செட்டிகள், தட்டார், நெசவுக்காரர், குசவர், சாயக்காரர், எண்ணெய்க்காரர், சிவியார், கன்ணர், மேசன்மார், தையற்காரர், செருப்புக்காரர், மறவர், கோவியர், வண்ணர், அம்பட்டர்.

நலாம் பிரிவு: நளவர், பள்ளர், பறையர், துரும்பர்,

தமிழ் பேரகராதி யாழ்ப்பாணம் மேலைப்புலோலி சைவப்பிரசாரணர் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டதாகும். இவர் ஆறுமுகநாவலரின் சீடராவர். இவரது அகராதி 1899-ம் வருடத்தில் வெளியிடப்பட்டது. அதில் பின்வரும் விபரங்களையும் காணலாம்.

(i) சௌண்டிகர் — கள் விற்போர்.
(ii) துவசர் — கள் விற்போர்.
(iii) படுவர் — கள்விற்போர்.
(iv) பிழியர் — கள் விற்போர்.

சான்ருருடன் தொடர்புள்ள சொற்கள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது.

(1) சால் — மிகுதி
(2) சான்ருர் — சாணுர், சான்ருேர்.
(3) சான்ருேர் — அறிஞர்.
(4) சான்ருேன் — சூரியன், அறிஞன்.
(5) கிராமணி — கிராமமுற்ருேன், சாணுருட் பெரியவன், சான்ருேன்.
(6) நாடன் — கார்த்திகை நாள், சோழன்
(7) நாடான் — சாணுருக்குரிய பட்டப்பெயர்.
(8) சாணன் — கெட்டிக்காரன்.
(9) சாணுன் — ஒரு சாதியான், சான்ருன்.

யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள சான்ருர் தமிழ் அரசர்களின் போர்வீரர்களாக கடமையாற்றினர். அவர்களுக்கு காணிகள் கொடுக்கப்பட்டு பண்டத்தரிப்பு, ஆனைக்கோட்டை, வல்வெட்டி, பளை, கிளாலி, இயக்கச்சி, மிருசுவில், கொடிகாமம், கச்சாய், மன்னன் குறிச்சி, சோழன்பற்று, அரசர்கேணி, வண்ணர்பண்ணை, தெற்கு அளவெட்டி, கதிரிப்பாய், சங்கானை, தொண்டமனுறு, நவாலி போன்ற கிராமங்களில் குடியேற்றப்பட்டனர் வன்னியில் பனங்காமம். ஒதியமலை, கற்குளம், கதிரன்குளம், சின்ன புதுக்குளம், மற்றும் முல்லைத்தீவுக்கு, அருகாமையிலுள்ள முதலியாகுளம், பெரிய புளியங்குளம், மணற்குளம், போன்ற கிராமங்களில் காணப்படுகின்றனர்.

சிங்களப் பகுதிகளில் காணப்பட்ட சான்ருர் சோழ அரசர்களாலும், யாழ்ப்பாண அரசர்களாலும் தற் காப்புக்காக அப்பகுதிகளில் நிலங்கள் கொடுத்து குடியேற்றப்பட்டவர்களாகும். இவர்களில் ஏராளமா ஞேர் சிங்களச் சான்ருர்களுடன் (துராவ) ஒன் றித்துவிட்டனர். இங்கு தொழிலையும்விட இனப்பா சமே காணப்படுகின்றது.

யாழ்பாணத்தில் வேளாளரும், சான்ருர்களும் சமமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்ததாக யாழ்ப் பாண வைபவ கௌமுதி கூறுகின்றது ஆனல் சான்ருர்களில் ஒரு சாரார் அடிமையாக்கப்பட்டு கோவியருடன் சேர்க்கப்பட்டனர். இவர்கள் மட்டும் குறைவாக கணிக்கப்பட்டதற்குக் காரணமென்ன? அடிமைகளை மூன்று பிரிவுகளாக T. இராமநாதன் அவர்கள் பிரிக்கிருர்கள். (Tesawalamai–The Laws and customs of the inhabitants of the Province of Jaffna by T. Sri Ramanathan) 1. போர் அடிமைகள். 2. பெற்றேரர்களினுல் பிள்ளைகளை நில பிரபுக்களுக்கு விற்றல். 3. குடிமக்கள் (பள்ளர், பறை யர், அம்பட்டர், வண்ணூர்). சான்ருர் முதலாம் பிரி வைச்சேர்ந்தவர்களாகும். துராவஎனப்படும் சிங்கள சான்ருர்களே சிங்கள அரசவம்சமாகும். இவர் களை யாழ்ப்பாண அரசர் அடிமைபடுத்திய பொழுது சிங்களக் கமக்காரரான கோவியருடன் (போர் அடி மைகள்) ஒன்று சேர்க்கப்பட்டு அடிமைத்தொழில் புரிந்தனர். ஒல்லாந்தர் காலத்தில் இச்சான்ருர் "சாண்டார் வெலெபேட்றே" (வேலைப்பற்று) என

அழைக்கப்பட்டனர். இவர்கள் சேனைத்தலைவர் சுற்றேட்டஞ் செய்கையில் சாமான் சுமக்கவும், திசாவைக்கு பந்தம் பிடிக்கவும் வேண்டும் என யாழ்ப்பாண கௌமுதி கூறுகின்றது.

மேற்கூறியவற்றிக்கு ஸ்ரீ இராமநாதன் அவர்கள் தனது நூலில் பின்வரும் ஆதாரத்தைத் தேசவழமைச் சட்டத்திலிருந்து எடுத்துக்காட்டுகின்றார். "இரண்டாவது சாதியிலுள்ள அடிமைகள் சாண்டார் தொகையில் குறைந்தவர்கள். இவர்களுக்குள் அடிமையாக்கப்பட்டவர்கள் கோவியருக்குள் பதியப்பட்டு ஒதுக்கப்பட்டனர். மிகுதியான சான்றார் சுதந்திரமுடையவர்களாகவும், வேளாளரைப் போன்றே அரசாங்க ஊழியம் செய்யக் கடமைப்பட்டிருந்தனர்.


ஆங்கிலேயருக்குக் கீழ் போர் அடிமைகளான சான்றார்களுக்கும் சுதந்திரமளிக்கப்பட்டது. இவ் விதிகளைப் பார்வையிடவும். 15-1-1779 திகதியிடப்பட்ட அறிக்கை, 1818-ல் விதி 9, 1818-ல் விதி 10, 1821-ல் விதி 8, 1823-ல் விதி 14, 1887-ல் சட்டம் 3, 1842-ல் சட்டம் 7. "யாழ்ப்பாண தமிழர்களின் சட்டங்களும், பழக்க வழக்கங்களும் H. W. தம்பையா


தமிழ் அரசர் காலத்தில் சான்றார் ஏராளமாக இருந்திருக்கின்றனர். காலப்போக்கில் சான்றாரின் செல்வாக்கு மங்கியதும் தங்களை வேளாளர் என அழைக்கத் தொடங்கியிருக்கின்றனர். தமிழ் நாடு மலையாளம், கன்னடம் சிங்களப் பகுதிகளில்

காணும் சான்றூர்கள் கல்வியில் முன்னேற்றமடைந் தவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால் யாழ்ப் பாண குடாநாட்டில் மிகப் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர். கலப்பு திருமணமே இச்சாதி யாரின் மறைவிற்கு முக்கிய காரணமாகும். மானிப் பாய், அளவெட்டி போன்ற கிராமங்களில் இக்கலப் பை கூடுதலாகக் காணலாம். யாழ்ப்பாண குடா நாட்டில் சான்றூர்களின் உயர் நிலையிலுள்ளோர் வேளாளராக மாறியதால், மிகுதியானவர் கல்வியில் மிகப் பின்தங்கியிருப்பதால் சமூகத்தின் மதிப்பை இழந்துவிட்டனர்.

1. Referring to the Chandars the Thesavalamai Code Says: "The staves of the second Caste viz: The Chandars are but few in number and those of this caste as were in slavery were not registered in the thomboos as chandars, but under the denomination of Koviyars so that the remaining part of them are free and perform Government Services in the some manner as the Vellalas" "Tesawalamai-the laws and customs of the inhabitonts of the Province of Jaffna. by T. Sri Ramanathan.

2. Chandars were not slaves under the British-Vide Proclamation dated 15th Jan. 1779, Regulation 9of 1818, Regu 10 of 1818 Regu 8 of 1821, Regu 14 of 1823, Ordinance 3 of 1887 and Ordinance 7 of 1842." The Laws and customs of the Tamils of Jaffna by H. W. Thambiah.


ஈழநாடு
நாகதீபம்
நல்லூர்
முள்ளியவளை
(முள்ளிமாநகர்)
பனங்காமம்
மாதோட்டம்
திருகேதீஸ்வரம்
அடங்காப் பற்று
மல்வத்து ஓயா
(கதம்ப நதி)
அநுராதபுரம்
மட்டக்களப்பு
கண்டி
கொழும்பு



## 9. துராவ — "Durawe" — எனப்படும் சிங்கக் கொடியையுடைய சிங்கள சான்றுர்கள் அல்லது ஈழவர் (சாணூர்)

சிங்களச் சான்றுர்களும் வட இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வந்தனர். மசெஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களின் வீழ்ச்சிக்குப்பின், ஆரியரின் தாக்குதலுக்கு அஞ்சி காலிங்க நாட்டில் குடியேறினர். அங்கிருந்தே இலங்கைக்கு வந்தனர். இவர்களது கொடி சிங்கக் கொடியாகும். பின்வரும் கல்வெட்டு அதற்கு சான்று பகரும்.

இக்கல்வெட்டு கொரக (**Koraga**) என்னும் இடத்தில் 1408-ம் ஆண்டு மார்கழி மாதம் 27-ம் திகதி வியாழக்கிழமை எழுதப்பட்டதாகும். "Lords of Northern Madura" "insignia of a lion". என்ற கூற்றுகள் அவர்களுக்கு வட நாட்டிலிருந்த தொடர்பையும், சிங்கக் கொடிக்கு உரிமையையும் எடுத்துக்காட்டுகின்றது இவ்விபரங்களை மூன்றும் அத்தியாயத்தில் வாசித்தறியவும்.

வட மதுரை யமுனு நதியிலுள்ள அரசாகும். சிங்களச் சான்றுர்களும் இப்பகுதியிலிருந்தே இலங்கைக்கு வந்தனர். மேற்கூறிய ஜினதத்தனின் குடும்பத்தினரின் ஒரு பகுதியினரே ஆந்திரத்திலிருந்து இலங்கையில் வந்து குடியேறினர். இச்சான்றுர் கி. மு. 400-க்கு அருகாமையில் இங்கு வந்தனர். அவர்கள் பேசிய மொழி எலு எனப்படும்.

வட இந்திய திராவிட மொழியாகும். அது சாண்டாழ் எனும் தேவகுலத்தவரின் மொழியுடன் தொடர்புடையதாகும். ஆந்திரம், கன்னடம் போன்ற வட இந்திய திராவிட மொழிகள் மேற்கூறிய இரு மொழிகளுடன் தொடர்புள்ளவையாகும்.

"அன்று தற்காலம், பேசப்படும் தமிழும், மலையாளமும் தென் திராவிட மொழி என அழைக்கப் பட்டது. தெலுங்கும் கன்னடமும் அதனுடன் தொடர்புள்ள மற்றைய மொழிகளும் வட திராவிட மொழி எனப்பட்டது." இவ்வாறு பன்மொழிப் புலவர் K. அப்பாத்துரை M. A. Lt. அவர்கள் உலகத் தமிழ் மகாநாட்டு விழா மலரில் கூறியுள்ளார். ஆரியர் மொழி எனக்கூறும் பொழுது லத்தீன், கிரேக்கம், ஆங்கில, ஜேர்மன், பெல்ஜிய மொழிகளையே குறிக்கும். இவ்வாரியரில் ஒரு சாரார் வடஇந்தியாவில் குடியேறி, அங்கு வாழ்ந்த திராவிட மக்களுடன் கலப்படைந்து ஏற்பட்ட மொழியே சமஸ்கிரதமாகும் வடமேற்கிலிருந்து நாடோடிகளாக இந்தியாவுக்கு வந்த ஆரியர் தங்களுடன் பெண்களை கொண்டு வந்திருப்பரென கூறமுடியாது வட இந்தியாவில் திராவிட பெண்களை விவாகம் செய்த ஆரியரின் சந்ததியினர் கூடுதலாக திராவிட சொற்களையே தங்கள் மொழியில் சேர்த்திருப்பர் இப்படியாக வந்த மொழியே சமஸ்கிரதமாகும். சிந்துநதி தொடக்கம் பம்பாய் வரையும் முழு ஆரியமயமாக மாறிற்று. கிழக்குப்பகுதி தொடர்ந்தும் திராவிடர்களின் பலக்கோட்டையாகவே காணப்பட்டது. கிறிஸ்துவுக்கு பின்பே இப்பகுதிகளும் மொழியளவில் ஆரியமயமாகியது.

இப்படியாக கலப்படையாத திராவிட மக்களால் பேசபட்ட மொழியே எலு மொழியாகும். அசோகன் திராவிட மன்னர்களில் ஒருவனுகும் அவன் பேசிய மொழியை தேவநம்பியதீசனும் இலங்கை வாழ் மக்களும் இலகுவில் புரிந்துகொண்டனர். மௌரிய குலத்தவரின் தாய்மொழியும் எலுவுடன் தொடர்புள்ள மொழியாகும்.

இலங்கையில் குடியேறிய இனங்கள் மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன பின் வருமாறு—சிங்கள (சிங்கள), தராச்சா, இலம்பகர்ண, பாலிபோசகா, மோரியா, குளிங்கா என்பனவாகும். அதனுல் இவ்வினங்கள் தங்களது குலப் பெயர்களை தங்களது விருதுக்கொடியிலுள்ள மிருகங்களின் அல்லது பறவைகளின் பெயர்களாகவே தெரிவு செய்தனர். ஆரியருக்குள் விருதுகொடிகளையுடைய இனங்கள் வாழ்ந்ததாக இருக்குவேதம் கூறவில்லை. இங்கு குடியேறிய ஆரியரைப்பற்றி விபரமாக குறிப்புகள் எதுவும் இல்லை. அவர்கள் ஆரியமொழி பேசியதாக மட்டும் தெரிகிறது. அவர்கள் ஆரியரா அல்லது ஆரிய மொழியை பேசிய வேறு இனத்தவரா எனக்கூறமுடியாது இருக்கின்றது'' இவ்வாறு இலங்கைப் பல்கலைக் கழகத்தின் சரித்திர கலாநிதி G. C. மென்டிஸ் அவர்கள் கூறுகின்றுர்கள்.

நூல்: (இலங்கயில் ஆதி சரித்திரம் பக்கங்கள் 5, 7) 2

தொடக்கத்தில் புத்த மதமும், சமண சமயமும் ஆரியரல்லாத அரசர்கள் மத்தியிலும், ஆரியரல்லாத

மக்களிடையேயுமே பரவியது. இச்சமயங்கள் பிராமணர்களின் உயர்ச்சியை எதிர்த்தன. இவை க்ஷத்திரிய குலத்தவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சமயங்களாகும், இலங்கையிலும் ஆரியரல்லாத மக்கள் இருந்தபடியால் புத்தமதம் விரைவாக பரவியது.

இலங்கையில் ஆதியில் குடியேறிய திராவிட இனத்தவரிடையே சிங்கக் கொடியையுடையவர்கள் மற்றைய இனங்களை அடிபணியச் செய்து ஆட்சியைக் கைப்பற்றினர். காலப்போக்கில் புத்தமத செல்வாக்கினாலும், பற்பல புத்தமத ஆரியகுடியேற்றங்களினாலும் இலங்கை மக்களின் மொழி ஆரியமயமாகியது. தொடக்கத்தில் இந்நாட்டு மக்கள் எலு என்னும் திராவிட மொழியையே பேசினர். சிங்கம்+எலு என்னும் சொற்றொடர்கள் 'சிங்களம்' என மருவியது சிங்கக் கொடியையுடைய எலு மொழி பேசும் மக்கள் என்பதே அர்த்தமாகும்.

"நாடார் வர்க்கம் அல்லது அரசகுலம் என்னும் பதம் மக்களிடையே அரசகுலத்தைப்பிரித்துக் காட்டுகின்றது. இக்குலத்தவர் எல்லா ஊர்களிலும் பரந்து காணப்படுகின்றனர்" "சிங்கள சமூக அமைப்பு" இரால்ப் பீரிஸ் பக்கம்: 252. 3.

"துராவ இனத்தவர்கள்தான் சத்திரியகுலத் தலைவர்கள் என திடமாகவும் மற்றையோர் அதிர்ச்சியடையாத முறையிலும் கூறலாம்"! "தற்கால இலங்கையிலுள்ள சாதிகள் பிரைஸ் இராயன் பக்கம்: 333. 4.

“கீழ்நாட்டு சிங்களவர்களுட் துராவ இனத்தவர் முன்கூறிய சாதி மக்களுடன்-(கோவிய கரவா) உயர் சாதி மக்களென கருதப்படுவர். இச்சாதியினர் கீழ்நாட்டுச் சிங்களவர்களிடையே முக்கால்வாசி யாகும்.

“தற்கால இலங்கையிலுள்ள சாதிகள்” பக்கம் 111

5.

திரு. யேம்ஸ் வஸ்தியான் பெரேரா என்பவரால் எழுதப்பட்ட “நீதி இரத்தின வல்லிய” என்னும் நூல் துராவ எனப்படும் சிங்களச் சான்ருர் கைஷத்திர குலத்தவரென்றும், மேலும் அவர்களது சரித்திரத்தை விபரமாக எடுத்துக் கூறுகின்றது.

“நிசங்கமல்லன் பல நல்ல சேவைகளையும் செய்தாலும் சில சிங்கள அதிகாரிகள் அவனுக்கு எதிராக கிளர்ச்சிசெய்தனர். நிசங்கமல்லன் தனது கல்வெட்டில் பின்வருமாறு வாதாடுகின்ருன். காலிங்க மன்னர்களே சிங்கள அரச பீடத்திற்கு உரித்தாளர்கள் ஏனென்ருல் முதல் சிங்கள அரசனுன விஜயன் காலிங்க நாட்டவன். சோழ, பாண்டிய இளவரசர்கள் புத்தமதத்தை தாக்கியமையால், அவர்கள் அவ்வுரிமையை இழந்துவிட்டனர். கோவியகுலத்தவருக்கு (வேளாண்மை செய்வோர்) அரசாள உரிமையில்லை, ஏனென்ருல் அவர்கள் கைஷத்திரியர் அல்ல.” 6 (E Z. 2-4-164)

(இலங்கைப் பல்கலைக் கழக சரித்திரப்பீடத்தலைவராகிய சரித்திர கலாநிதி ஜி. சி. மென்டிஸ் அவர்களால் எழுதப்பட்ட இலங்கையின் ஆதி சரித்திரம் என்னும் நூலில் 77-ம் பக்கத்தைப்பார்க்கவும்.)

பழைய சிங்கள நூல்களில் துராவ எனப் படும் சாதியினர் சாண்டாஸ் எனப்பட்டனர்.— "சாண்டாஸ் அல்லது துராவ" நூல்—"சிங்களச் சமூக பழக்கவழக்கங்கள்" இரால்ப் பீரீஸ் பக்கம் 191. இன்னும் துராவ இனத்தவனுன சான்டான் தனது பெயருக்குப் பின்னுல் சாண்டான் என பெயரிடுவதை அக்காலத்தில் விரும்பினுன். 8 சமர வீர சான்றுர் எனக் காணித்தோம்பில் பதிந்திருப் பதை M. D. இராகவன் தனது நூலாகிய இலங்கை க்கரையார் 192ம் பக்கத்தில் எடுத்துகாட்டுகின்றுர்.

மேற்கூறிய துராவ அல்லது சிங்களச் சான்றுர் கள் இறக்கும் தொழிலை செய்தனர். ஆரியருக்குள் மது இறக்கும் தொழிலை உயர்ந்த சாதியினரும் செய்தனர். மது இறக்கும் ஆரியர் உயர் சாதியின ராக சமூகத்தில் கருதப்பட்டனர். ஆனுல் திராவிட ரை நசுக்குவதில் ஆர்வம் கொண்ட பிராமணர், மது இறக்கும் தொழில், மீன் பிடிக்கும் தொழில் செய்தவர்களை தீண்டாதவர்களாக ஆக்கினர் இத னுல் வீரமுள்ளவர்கள் அடிமைகளாக்கப்பட்டு தமிழ் இனமே அடிமைகளாக்கப்பட்டது. அனுல் இதே பிராமணர் வடநாட்டில் மது இறக்கும் தொழிலை செய்துவந்தனர்.

தென் இந்திய ஜன ஆராய்ச்சி விஜயமாய் பேர் பெற்ற ஆசிரியரும், மதக்குருவுமாகிய (Abbe J. A. Dubbois S. J ) டுபோ என்பவர் 19-ம் நூற்றுண்டில் எழுதிய நூல் வங்காள பிராமணரில் அனேகமா னேர் மதுபானம் விற்கும் தொழிலைச் செய்து வரு

கிருர்கள். வாசேனுக்கு Bassein) வடக்கேயிருக்கும் சோப்பாரம் என்னும் இடத்திலுள்ள "Soparas சோப்பாரர்" என்னும் பிராமணர், நாளாந்தம் தாள மரமேறி சீவிக்கிருர்களென (Dr John Wilson F. R. C. S.) டாக்டர் வில்சன் இந்திய சாதிகள் என்னும் நூலில் வெளியிட்டுள்ளார். ஒரிசா (Orissa) தேசத்திலுள்ள மஸ்தான் பிராமணர் (Mahastan) தென்னே, பனே போன்ற மரங்களேறி சீவனம் செய்வதாக திரு. A. ஸ்டர்லிங் (A. Stirling) ஒட்டிய தேச சரித்திர நூலில் எழுதியுள்ளார். நூல் B J.M. குலசேகரராஜ் "நாடார் குல வரலாறு".

"இறந்தவர்கள் புதைக்கப்பட்டு பத்து நாட்கள் துடக்கு நீடிக்கும். அதன்பின் சௌண்டிகர் குளித்து ஓமம் ஏற்படுத்தி, பன்னிரண்டு பிராமணர் விவாக தினம் போன்று சௌண்டிகரிடமிருந்து உணவும், பொருளும் பெறுவர்" தென்னிந்தியாவிலுள்ள சாதிகளும் இனங்களும்—தேர்ஸ்ரன் 9. இச்செயல் மது இறக்குவர்களும் தாங்களும் சமம் என்பதை காட்டுகின்றது. ஆனுல் திராவிடருக்குள் மட்டும் பிராமணரின் சமய ஆதிக்கத்தை ஏற்க மறுத்தவர்கள் அடிமைகளாக்கப்பட்டனரா?

திராவிடருக்குள் ஒவ்வொரு இனத்தவருக்கும், சாதிக்கும் ஒரு கொடியிருந்தது. சான்ருர்-சிங்கம் (இனம்), மறவர்—ஆண்மயில் (சாதி, பேசர்வீரர்), கரையார்—மீன் (சாதி), முக்குவர்—அன்னப்பறவை (சாதி), கம்மாளர்—குரங்கு (சாதி), மடப்பள்ளி

இனம்)—எருது, சாதி என்று குறிப்பிடும் பொழுது தொழிலால் ஒன்று சேர்ந்தவர்களாகும். ஒரு இன மக்களிடையே பல தொழில் செய்பவர்கள் இருப்பர் "குலங்கள் என்பது தொழிலால் பிரிவுருமல் நாகரிகத்துக்கு முற்பட்ட காலம் முதல் தொன்றுதொட்டு ஒரு முன்னேர் வழிமரபினராகத் தனியே பிரிவுற்று வாழும் குழு (Tribe) ஆகும்"—-இந்திய நாகரிகத்தில் திராவிட பண்பு" திரு. கா. அப்பாத்துரை M. A. L. D. தமிழ் நாட்டில் சான்ருர்கள் பற்பல தொழில்கள் செய்வதைக் காணலாம். யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லெண்ணெய் வணிகம் சான்ருரின் ஆதிக்கத்திலே உண்டு அதனுல் செட்டிகள் என்றும் வாணிபர் என்றும் அழைக்கப்படுவர். சான்ருர் தமிழ், சிங்களம், ஆந்திரம் கன்னடம், மலேயாளம், சாண்டாழ் என்ற மொழிகளேப் பேசுவர். இவர்கள் வட இந்திய திராவிட இனமாகும்.

ஒவ்வொரு இனத்தவரும் தாங்கள் வாழும் பகுதியில் அறிமுகமான சின்னத்தையே தங்கள் விருதுவாக வைத்திருந்தனர். சான்ருர்களின் கொடி சிங்கக் கொடியாகும். சிங்கம் பிகார், வங்காளம், கங்கை நதியோரமாகவுள்ள காடுகளில் காணப்படுகின்றது. அதனுல் சான்ருர்கள் இப்பகுதியிலிருந்து வந்ததை நிரூபிக்கின்றது சான்ருர்களின் கொடி சிங்கக்கொடியென கோரக கல்வெட்டில் மட்டுமின்றி சாதிப்பாடங்களிலும் காணப்படுகின்றது.

"உயர்ந்த சிங்கக் கொடியாதிபதி
சம்பரனை வென்று இரட்டைச் சங்கேந்திநோன்
ஈழந் திறை கொண்டோன்
இலங்காபுரி வேந்தன்
செட்டி தோளேறும் பெருமாள்
வாழைக் கிருகுலே வரக்கண்டோன்.
பத்திரக்காளி வரப்புத்திரன்"

சான்றுர்களை விட்டு மற்றைய இனத்தவருக்கோ சாதியினருக்கோ சிங்கக்கொடி இனக்கொடியாக காணப்படவில்லை. "சிங்கக் கொடியாதிபதி" "ஈழந் திறை கொண்டோன்", "இலங்கா புரி வேந்தன்" என்னும் சொற்கள் சான்றுர் சிங்கள அரசவம்சம் என்பதை நிரூபிக்கின்றது

சிங்களத்தில் எல—தீப என்னும் பதமும், தமிழில் ஈழம் என்னும் பதமும் "கள்" என்னும் விளக்கத்தைக் கொடுக்கும் ஈழம்—ஈழகுலச்சான்றுர், ஈழம்—கள். இப்படியாக யாழ்ப்பாணச் சரித்திர சங்கத்தின் தலைவராகிய வணக்கத்திற்குரிய பிதா S. ஞாப்பிரகாச அடிகள் தனது நூலில் எழுதியுள்ளார்.
தற்கால சிங்களம்: ஈடி—கள்ளு:
ஆதிச் சிங்களம்: எலு—கள்ளு:
எலதீபம் என்னும் சொல் அரேபியரால் செரெண்டிப் என எழுதப்பட்டது. இலங்கையை அந்நியநாட்டவர் செரெண்டிப் என அழைத்தனர். கி பி. 2-ம் நூற்றுண்டில் இப்பெயர் வழக்கத்தில் இருந்தது. இப்படியாக வணக்கத்திற்குரிய பிதா கூறியுள்ளார்

10.

எழ, எலு, ஈழம் என்னும் பதங்கள் சிங்களச் சான்ருர்களின் செல்வாக்கைக் காட்டுகின்றது. இம் மது இறக்கும் சிங்களச் சான்ருர்கள் மலேயாளத்தி லுள்ள சாணுர்களுடனும் (ஈழவர்,) ஆந்திரத்தை ஆட்சி செய்த கதம்பகுலத்தவருடனும் தொடர்புள்ள வர்களும், யாழ்ப்பாணத்திலுள்ளவர்களும் வேளாண் மை அல்லது வியாபாரத்தைத் தங்கள் தொழிலாகக் கொண்டவர்களாகும். வட இந்தியாவிலிருந்து தேசங் களைப் பிடித்து ஆட்சி செய்ய தெற்கு நோக்கி வந் தவர்கள் தொழிலால் இருகூருகப் பிரிந்து வெவ்வேறு பகுதிகளை ஆட்சிசெய்தனர்.

சிங்களச் சான்ருர்களும், (சாணுர்) ஈழவர்களும், (சாணுர்)கதம்பகுலத்தவரும் மது இறக்கும்தொழிலே விரும்பிச் செய்தவர்கள். ஈழவருக்குள் சாணுர் என் பது கௌரவ பட்டமாகும். அதேபோன்று சிங்கள அரசர்களாலும் சாணுர் பட்டயம், சாணுர் காசு, சாணுர் என்ற பட்டங்களும் வழங்கப்பட்டன. இலங் கையில் வழங்கப்பட்ட சாணுர் காசுகளும், தென் னிந்தியாவில் வழங்கப்பட்ட சாண்டான் காசுகளும் வேறுபட்டவையாகும். கரிகால சோழன் கி. பி. 75-ல் ஆட்சி செய்யும் பொழுது, இலங்கைமேல் படை யெடுத்து சிங்களவரை அடிமைப்படுத்தி இந்தியா வுக்கு கொண்டு சென்ருன் இப்படையெடுப்பு வச பனின் (67-111 கி. பி.) காலத்தில் நடைபெற்றது. இதற்கு மாருகவே கஜபாகு தமிழ் நாட்டின் மேல் படையெடுத்ததாகக் கூறப்படுகின்றது. தமிழ் நாட் டில் அடிமையாக்கப்பட்ட சிங்களச் சான்ருர் ஈழ

நாட்டிலிருந்து சென்றதால் ஈழவர் என அழைக்கப் பட்டனர். இவர்கள் அரசகுல தமிழ்ச் சான்ருர்க ளுடன் சேர்க்கப்படாமல், இடங்கை சாதியினருடன் சேர்க்கப்பட்டனர். இதைப்போன்று கதம்பகுலத்த வருடனும் தமிழ்ச் சான்ருர்கள் சேரவில்லை. இக்க தம்ப குலத்தவருக்கும், சிங்களச் சான்ருர்களுக்கும் தொடர்பிருந்தது. கதம்ப குலத்தவரை ஈழ மக்கள் ஆதரித்ததால்தான் மல்வத்து ஓயாவுக்கு கதம்பநதி என சரித்திரகாலத்தில் பெயரிடப்பட்டிருந்தது. (The Earby History of Ceylon G. C. Mendis, map, Page; 23) இலங்கையின் ஆதி வரலாறு G.C. மென்டிஸ் படம் பக்கம். 23.

மேட்கூறிய சிங்கச் சான்ருர்களாகிய ஈழவர் இலங்கையிலிருந்து குடியெழும்யி இந்தியாவிற்கு சென்றதாகவே வாதாடுவர், "மலையாளத்து ஈழவர் எனப்படுவர் பெரும்பாலும் பௌத்தரது வழித் தோன்றல்களாக இருத்தல் வேண்டும். இவர்கள் தங்கள் குலத்தலைவனை இராவணனையே கருதுகின் றனர். ஒவ்வொரு நாளும் "பாரதம்", "இராவணு யனம்" என்னும் நூல்களைத் தம் வீட்டிற் படிக்கின் றனர். இப்படி ந. நடராஜா அவர்கள் "மட்டக் களப்பும், மலையாளமும்" என்னும் கட்டுரையில் கூறி யுள்ளார். "சாணுர்" என்ற பட்டத்தையுடைய அமைச்சர்கள் சிங்கள அரசசபையில் இருந்தனர். "ஏழாம் புவனேகபாகு லிஸ்பனுக்கு, போர்த்துக்கீய மன்னனுல் தர்மபாலனின் தங்கச் சிலையை முடிசூடு வதற்கு, செல்லப்பா ஆராய்ச்சி தலைமையில் ஒரு

தூதுக் கோஷ்டியை அனுப்பினுன். கோட்டை அரசனுல் வெளியிடப்பட்ட சாணு பட்டயம் திருவரகன் பொருமாள் சாணுனுல் அத்தாச்சிப் படுத்தப்பட்டது இந்த சாணுர மந்திரிப்பதவியை ஒரு குடும்பத்தின ரே வைத்திருந்தனர். அவர்கள் திருவரன்கன் (திருவரங்கன்) என்பதற்கு திருவரகன் எனப்பிழையாகக் கூறப்பட்டுள்ளது. 11. (இலங்கையும், தமிழர்களும் சி. எஸ். நவரத்தினம் பக்கம் 225.) மேலே சாணுர மந்திரிச்சபையென குறிப்பிடப்பட்டது. சிங்களச் சான்ருர்களாகும். ஈழவருக்கு சாணுர் என்ற கௌரவ பட்டம் இருந்ததாக சரித்திர கலாநிதி நாகம் ஐயா அவர்கள் கூறுகின்ருர்கள்.

மேற்கூறிய வாதாட்டங்களுக்கு ஆதாரமாக யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்னும் நூல் இச் சிங்களச் சான்ருர்களைப் பற்றி இன்னும் பல விடயங்களை வெளியிட்டுள்ளது.

(அ) இச் சிங்களச் சான்ருர் "சாண்டு" (Santos) என அழைக்கப்பட்டனர்.

(ஆ) இலங்கையின் தமிழ் பெயராகிய ஈழம் என்னும் சொல்லுக்கு "கள்" என்னும் பெயர் அமைந் திருக்கின்றது

(இ) மலையாளத்திலேயுள்ள மரமேறிகட்டு ஈழவர் என நாமமுள்ளமையும் அன்னுர் இலங்கையிலிருந்து சிறைசெய்யப்பட்டு சென்று சேரநாட்

டில் வசிக்கும் சிங்களவர் என ஆன்ரூர் அனுமானிக்கின்றமையும், அவ்வீழவரும் தம்முன்னேர் ஈழமண்டலத்திலிருந்து வந்தாரென்னும் பரம்பரைக் கேள்வியுடையோராயிருக்கின்றமையும்.

(ஈ) சாணுன் காசு எனப்பெரிய நாணயம் பண்டு யாழ்ப்பாணத்தில் வழங்கியமையும்.

ஈழவர் அல்லது சாணர் சிறைசெய்யப்பட்டதை யிட்டு நாடார்களுக்குள் பரம்பரையாக இக்கதை கூறப்படுவதுண்டு. கரிகாலசோழன் அடிமையாக்கப் பட்ட சிங்களச் சாணுர்களை, காவேரியில் அணைகட்டும் வேலை செய்யும்படி கட்டளையிட்டனர். இச்சாணுர்கள் கூடைதொடோம் எனக் கிளர்ச்சி செய்ததால் பலருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அடுத்து மேலே சாணுன் காசு குறிப்பிடப்பட்டது. சிங்கள அரசர்களின் நாணயமாகும்.

ஆதியில் சிங்கள அரசர்கள் கீழே முழு இலங்கையும் இருந்தது. சிங்கக்கொடியையுடய துராவ எனப்படும் சிங்களச் சான்ருர்களே சிங்கள அரச வம்சமாகும். இவர்களுடன் மலையாளத்திலுள்ள ஈழவர் அல்லது சாணுர்களும் கதம்ப குலத்தவரும் ஒரே இனத்தவராகும்.

**சிங்களவர்களும், ஈழவர்களும்:**

தென் இந்தியாவில் கோதாவரி நதிக்கும், கிருஷ்ண நதிக்குமிடையியே "ஈழம் எனப்படும்

பகுதியிருந்தது. அங்கிருந்து இலங்கையில் குடியேறி வர்களே ஈழவர் எனப்பட்டனர். இவர்கள் எலு என்னும் வட இந்திய திராவிட மொழியைப் பேசினர். இவர்களது கொடி சிங்கக் கொடியாகும். கிருஷ்ண நதியோரங்களிலே கதம்பவனங்கள் ஏராளமாகக்காணப்பட்டன ஈழவர் இப்பகுதிகளில் மதுவை இறக்கி விற்று சீவித்து வந்தனர். அதனுல் இவர்கள் கதம்ப குலத்தவர் என அழைக்கப்பட்டனர். அசோகன் காலம் முடிந்ததும், சாதவாகனர் எழுச்சியடையுமட்டும் கன்னடப் பகுதி கலிங்கத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. இப்பகுதியிலிருந்தே ஈழவர் இலங்கைக்கு வந்தனர். மல்வத்து ஓயாவைச் சுற்றி இக்கதம்ப குலத்தவர் ஏராளமாக வாழ்ந்த தால் விஜயன் காலத்தில் இந்நதி கதம்ப நதிஎன அழைக்கப்பட்டது.

சிங்களவர்களை ஆரியர், ஆதிவாசிகள், திராவிடர் என மூன்று பிரிவுகளாக வகுக்கலாம் துராவ (சான்ருர்), கராவ (கரையார்), இராசரட்டையில் காணப்படும் வன்னிச்சிங்களவர் திராவிட இனத்தவர்களாகும். மலைநாட்டில் வாழ்பவர்கள் ஆதிவாசிகளாகும். மற்றையோர் வட இந்தியாவில் இந்துமத அரசர்களால் புத்த மத ஆரியர் தாக்கப்பட்டபொழுது, இலங்கையிலுள்ள புத்த மத மன்னர்களின் ஆதரவில் குடியேறியவர்களாகும்.

ஆந்திரத்தில் கிருஷ்ண நதியைச் சுற்றி ஏராளமான மக்கள் அசோகன் காலத்தில் புத்தமதத்தில்

சேர்ந்தனர். இங்கேதான் அமராவதி, நாகசுனிகண்ட (Nagarjunikonda) ஜகாயபத்த (Jaggaya peta) என்னும் புத்த தலங்கள் உண்டு. இப்பகுதி மக்கள் புத்த மதத்தில் சேர்ந்ததும் இலங்கையில் வசிக்கும் தங்கள் இனத்தவருக்கும் புத்த மதத்தை போதிக்க விரும்பினர். கிருஷ்ண நதியோர மக்களும், இலங்கை மக்களும் ஒரே மொழியைப் பேசியதால்தான் முதல் நாளே பெரும் தொகையான சிங்கள மக்கள் புத்த மதத்தில் சேர்ந்தனர். காலப்போக்கில் ஆரிய மொழிக் கலப்பினுல் சிங்களம் ஆரிய மொழியாக மாறியது புத்தமதக்குருமார் வசிக்கும் பன்சல கல்வியின் மத்திய ஸ்தலமாக விளங்கியது. அங்கு வசித்த புத்த குருமார் சிங்கள மொழிக்குள் ஏராளமான பாளி, சமஸ்கிருத சொற்களைச் சேர்த்து விட்டனர். இரண்டாவதாக வட இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய புத்தமத ஆரியரும் சிங்களவர்களுடன் கலப்படைந்து தங்கள் சொற்களை புகுத்தினர்.

தமிழருக்கும், சிங்களவர்களுக்கும் ஏற்பட்ட யுத்தங்களினுல் இக்கதம்பகுலத்தவர், ஈழவர் அல்லது துராவ இனத்தவர் கரையோரப்பகுதிகளில் மொறட்டுவைக்கும், மாத்தறைக்குமிடையே குடியேறினுர்கள். மற்றையச் சிங்களவர்களும் கரையோரப் பகுதியை நாடி குடியேறினுர்கள். ஆதனுல் இராசரட்டை வீச்சியடைந்தது, கோட்டை இராச்சியம் எழுச்சியுற்றது.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஈழவர் கூடுதலாக தமிழர்களுடன் கலந்து வாழ்ந்ததால், அவர்களது மொழியும் தமிழுடன் ஒன்றுசேர்ந்தது வட இலங்கையிலும், தென் இலங்கையிலும் காணப்படும் ஊர்ப் பெயர்கள் எலு மொழியுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. அம்மொழிக்கு தாமீழம் என கலாநிதி தாவீது அடிகள் பெயர் வைத்துள்ளார்.

1. **Dravida** was the name for the Southern Dravadian which included modern Tamil and Malayalam, while Andra was the name of the Northern Dravadian wich included Telungu and possibly Kannada and its dialects. "Tamil and Dravadian" by Panmozhippulavar, K. Appadurai M. A. Lt- உலக தமிழ் மகாநாடு விழா மலர்

2. The ancient tribes of Ceylon mentioned in the Mahavamsa are Sinha (lion), Tarachcha, Lambarkarna, Balibojake, Moriya and Kalinga. All these names probably show that the early tribes of Ceylon were people who took their clan-names from totems or emblems of beasts and birds, which they worshipped. There were no totemistic tribes among the Aryans referred to in the Rigveda, the collection of the poems of the Aryans who

settled in N. W. India, and therefore these tribes could not have been Aryan by blood There is no definite, in formation, which sheds any light with regard to the character of these Aryans, who settled in Ceylon apart from the fact that they spoke an Aryan dialect. Hence it is not possible to state whether they were Aryan by blood or whether they were a non-Aryan people who had adopted an aryan dialect as their language.

"The Early History of Ceylon" G. C. Mendis, B. A. Phd (University of Ceylon) Pages 5&7.

3. The term Nada Variga or Kingship clan seems to emphasise the fact of Kingship between people not necessarily. resident in one place "Sinhalese Social orgnisation" Ralph Peries Page 252.

4. In more seasoned and less in Flammatory tones the Durawa are ancient warrior chieftains. Castes in Modevn Ceylon. Bryce Ryan Page. 333.

5. In generally throughout the low country the (Durawe) with the previous castes (Goviya, Karawa) discussed constitute the high caste

people. amounting to probably three quarters of the Sinhalese low-country population Pagee. 111. Caste in Modern Ceylon-Bryce Ryan.

6. In Spite of all this good work done by Nissanka Malla, some of the in Shalese Chiefs appear to have resented his rule. Nissanka Malla argues in one cf his in scriptions that Kalinga dynasty had the best claim to be rulers of Ceylon as the first Sinhalese King Vijaya was from Kalinga The Cola and the Pandya Princes were unsuitable as they were hostile to Buddhism while the members of the Govikula had no right to be Kings as they were not Kshatriyas-The Early History of Ceylon. G C. Mendis B. A. (Ez Z. 4. 164) Ph. D.-University of Ceylon.

7. Chandas (Durawe)-Sinhalese Social customs, Ralph Pieries, Page 191.

8. "and a small plot of ground adjoining the one above mentioned and the said River and Grand street belong to an Inspector named Gaspar Veera Sandar" Vide: Register of Gardens and Estates, Page 192, Karavas of Ceylon, M. D Ragavan.

9 "The dead are buried, and death pollution lasts for ten days On the eleventh day those under pollution (Soundikas) bathe, and the sacred fire (homen) is raised by a Brahman, as at a wedding twelve Brahmans reci eve food and money. (vide-Thurston's castes and tribes of Southern India)

Vide-Thurston's castes and tribes of Southern India.

10. Modern Sinhalese: idi-toddy–

older Sinhalese: Hela, elu–toddy. Hela diva was turned by Arabs into Serendib, one of the foreignnames of Ceylon. This name is asold as the 2nd century A. D. being found in the Sam ariton version of the Pentateuch"

Vide: An Etymological and comparative Lexicon of the Tamil Language by Rev S Gnana prakasar O. M. I. President Jaffna Historical Society.

11. Buvaneka Bahu VII. King of Kotte, sent a small statue or image of his grandson Dharmapala in charge of a chief named Sellapah Arachchie to the court of Lisbon to be formally crowned by the King of Portugal.

The Sannas issued by King of Kotte was attested by Sannas Thiruvarahan Perumal. The Sannas ministry appear to have been held by members of one family. probably Thiruvarahan is a mistaken from of Tiruvarangan Vide: 'Tamils & Ceylon,' C.S. Navaratnam Page. 225

# 10. தமிழர் மத்தியில் சாதிமுறை

சங்க காலத்தில் தமிழர் மத்தியில் சாதிபேதம் இருக்கவில்லை சேர, சோழ, பாண்டிய மன்னர் கீழ் எல்லாத் தொழில் செய்பவர்களும் சமமாக வாழ்ந்தனர். அதனுல் தமிழ் இனம் ஒற்றுமையும், வீரமும் பொருந்திய இனமாக விளங்கி, இந்தியாவில் பல பகுதிகளை ஆட்சிசெய்தது. சங்ககாலத்தில் பின் வரும் தொழில் செய்பவர்களும், இனங்களும் காணப் பட்டனர். அந்தணர், அரசர், அளவர், இயவர், இடையர், உமணர், உழவர், எயிற்றயர், கடம்பர், கடையர், குயவர், குறத்தியர், குறவர், குறும்பர், கூத்தர், கொல்லர், தச்சர், தேர்ப்பாகர், துடியர், பரதவர், புலையர், பூண் செய் கொல்லர், பறையர், பாடினி, பாணர், பாணிச்சி, பொதுவிலமகளிர், மடையர், மறவர், மழவர், யாழ்புலவர், யானைவேட் டுவர், வண்ணுத்தி, வணிகர், விலைஞர், விலைப்பெண் டிர், வேடர், சங்ககாலத்தில் பிராமணர் காணப்பட் டாலும், அவர்களது ஆதிக்கமோ செல்வாக்கோ காணப்படவில்லை.

கி. பி. 6-ம் நூற்ருண்டில் களப்பிரரின் ஆட்சி வீழ்ச்சியடைந்தது பல்லவரின் ஆதிக்கம் தமிழ்நாட் டில் பலமடைந்தது. பல்லவர் காலத்தில் பிராமண ரின் செல்வாக்கு அதிகரித்து, சாதிமுறை தமிழர் மத்தியில் புகுத்தப்படுகின்றது. இக்காலத்தில் வன் னியர் என்னும் க்ஷத்திரியகுலத்தவர் சிற்றரசர்க ளாக இந்தியாவின் பல பகுதிகளில் பல்லவரால் நியமிக்கப்படுகின்றனர். பிராமணர் உயர்ந்த சாதி

யாகவும், மற்றும் கீழ் தொழில் புரிந்தோர் சமூகத்தில் ஒதுக்கப்படத் தொடங்கினர். இக்காலத்திலேயே வலங்கையர், இடங்கையர் என்னும் அரசியல் கூட்டணி தமிழர் மத்தியில் ஏற்படுகின்றது. தமிழ் அரசர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்களை ஆதரித்த வேளாளர்களும், சான்றுரர்களும் அவர்களது குடிமக்களும் வலங்கையர் எனப்பட்டனர். மேற்கூறிய இரு சாதியினரும் வேளாண்மையை தொழிலாக செய்தமையும் இவர்களது ஒற்றுமைக்கு ஒரு காரணமாகும். மற்றைய தொழில்களைச் செய்த சாதியினர் வன்னியர் தலைமையில் ஒன்றுபட்டு இடங்கையர் எனப்பட்டனர்.

பின் எழுச்சியடைந்த பாண்டியரும், சோழரும் சாதிமுறையை ஆதரிக்கவில்லை. கி பி. 1070-ல் கீழைச் சாளுக்கியர் சோழ குலத்தவராக மாறியதும் வன்னியர் செல்வாக்கு அதிகரித்தது. பிராமணரின் செல்வாக்கு இருந்தமையால், சாதிமுறை காணப்பட்டது. தொழில் முறையில் சமூகங்கள் பிரிந்து வாழ்ந்தன. ஒவ்வொரு சாதிக்கும் இருந்த உரிமைகள் வரையறுக்கப்பட்டன. கீழ்சாதிகளுடன் தொடர்பு கொள்வதால் அசுதியடைவதாக மக்கள் நம்பினர். மீன்பிடித்தல், மது இறக்குதல், அம்பட்டர், வண்ணர், பறையர், பள்ளர், கீழ்தொழில் செய்பவர்களாகக் கருதப்பட்டனர். அடிமைமுறையும் புகுத்தப்பட்டது. சோழரும், (1070-க்கு முன்) பிற்கால பாண்டியருக்கும் நாடாள்வாருக்கும் (நாடார்) வேளிருக்கும் (வேளாளர்) வலங்கையர் என்ற கா

ரணத்தால் சிற்றரசர் பதவிகள் அதிகமாக கொடுக் கப்பட்டனர். வன்னியரும் சிற்சில பகுதிகளைச் சிற் றரசர்களாக ஆட்சிசெய்தனர். சந்திரகுல பாண்டியர் கீழ் அமைச்சர்களாகவும், சேனதிபதிகளாகவும் கௌரவிக்கப்பட்ட மறவர் சூரியகுல மன்னர் ஆட் சியில் அப்பதவிகளை இழக்கின்றனர்.

கி. பி. 14-ம் நூற்ருண்டில் எழுச்சியடைந்த விஜயநகர அரசர்களுக்குப் பின்பே சாதிமுறை மிகக் கொடூரமான முறையில் செயல்படுத்தப்பட் டது. இந்துமதத்தின் ஆதரவாளர்களான விஜயநகர மன்னர், இந்துமதச் சமூக. சட்டதிட்டங்களுக்கு மதிப்பு கொடுத்து, பிராமணர்களின் விருப்பப்படியே சாதிமுறையை மாற்றியமைந்தனர் விஜயநகர, துருக்கிய மன்னர்களின் கீழ் சோழ, பாண்டிய நாட் டில் சிற்றரசர்களாக நியமிக்கப்பட்ட நாயகர் தொடக் கத்தில் வன்னியரையும், மறவரையும் ஆதரித்து உயர்பதவிகள் கொடுத்தனர். தொடக்கத்தில் விஜய நகர மன்னர்களை எதிர்த்து வேளாளர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வந்து குடியேறினலும், காலப்போக் கில் நாயக்கரின் ஆதரவாளர்களாக மாறி உயர் பதவிகளைப் பெற்றனர். சோழ, பாண்டிய குலத் தவர்களாக நாடார்கள் போர் அடிமைகளாக்கப் பட்டு சகலவித சமூக உரிமைகளையும் இழந்தனர். பிராமணரை விட்டு மற்றையோர் சூத்திரர் என அழைக்கப்பட்டனர். ஆங்கிலேயர் இச்சாதிமுறை யை மாற்றி, மக்களின்வெறுப்பைப்பெற விருப்பின்றி தொடர்ந்தும் சாதிமுறையில் இருப்பதற்கு தடை

யாக இருக்கவில்லை ஆங்கிலேயரின் கீழ் நாடார்கள் நேரடியாக தாக்கப்பட்டாததால் மிகவிரைவில் முன்னேறி வந்தனர். இந்தியா சுதந்திரமடைந்தது தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எழுச்சியின் பின்பே பிராமணத்துவம் நசுக்கப்பட்டு, சாதிமுறை சட்டங்கள் அகற்றப்பட்டன.

தமிழர்கள் மத்தியில் காணப்படும் அடிமை முறையை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். (1) போர் அடிமைகள் (2) நிலப்பிரபுக்களுக்கு விற்கப்பட்ட அடிமைகள் (3) குடிமக்கள்.

1. போர் அடிமைகள்:

சான்றுர்கள் அல்லது நாடார்கள் இப்பிரிவைச் சேர்ந்தவர்களாகும். சிங்கள அரசவம்சமான துராவ எனப்படுவோர் சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் அடிமையாக்கப்பட்டபோது, ஈழநாட்டிலிருந்து வந்ததால் ஈழவர் என்ற பெயருடன் இடங்கை சாதிகளுடன் சேர்க்கப்பட்டனர். விஜயநகர மன்னர் சோழ, பாண்டிய மன்னர்களை வெற்றிபெற்றதும், சோழ, பாண்டிய குலத்தவராகிய நாடார்கள் போர் அடிமைகளாக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்திலுள்ள தேசவழமைச் சட்டப்படி சான்றுர்களும், வேளாளர்களும் சமமான சாதிகளாகும். யாழ்ப்பாண அரசர்களால் சிங்களச் சான்றுர்கள் (துராவ) போர் அடிமைகளாக கைப்பற்றப்படும்போது, அடிமைகளாக்கப்படடு கோவியருடன் சேர்க்கப்பட்டனர். யாழ்ப்பாண அரசர்களுக்கும், வன்னியருக்கும் போர் நடக்

கும் பொழுது, யாழ்ப்பாண அரசர்களால் கைப்பற்றப்பட்ட வன்னியர் நளவர் என்னும் பெயருடன் அடிமைகளாயினர். நளவர் அம்பு வில்லை தங்கள் சின்னமாக இன்றும் வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

2. நிலப் பிரப்புக்களுக்கு விற்கப்பட்ட அடிமைகள்:

இலங்கையில் வாழும் கோவியரை இப்பிரிவில் சேர்த்துக்கொள்ளலாம். கோவியரை மூன்று பிரிவாக வகுக்கலாம்.

(அ) சிங்கள யுத்த அடிமைகள்: சிங்கள வேளாள (கோவிய), சான்ருர் (துராவ) உட்பட எல்லாச் சிங்களச் சாதியினரும் யாழ்ப்பாண அரசர்களால் கைப்பற்றப்பட்டதும். கோவியர் என்ற பெயருடன் அடிமைகளாயினர்.

(ஆ) கோயிலர்: இவர்கள் கோவிலில் தொண்டு செய்பவர்கள். காலப்போக்கில் கோவியர் என மருவியது. இவர்கள் சான்ருருக்குள் குருக்கள் பிரிவைச் சேர்ந்தவர்களென மட்டக்களப்பிலுள்ளவர் கூறுகின்றனர்.

(இ) மந்தை மேய்ப்போர் கோகுல அல்லது கோவிய என அழைக்கப்பட்டனர்.

பின் கூறப்பட்ட பிரிவினர் மத்தியி, பெற்ருேர் தங்கள் ஏழ்மையின் நிமித்தம், தங்கள் பிள்ளைகளை நிலபிரபுக்களான வேளாளருக்கு விற்றனர். இப்படி

யாக அடிமையாக்கப்பட்ட கோவியர் நிலப்பிரபுக் களுக்கு பிணம் காவுதல், பல்லக்கு சுமத்தல் போன்ற தொண்டுகளைச் செய்தனர்.

3. குடிமக்கள்:

நிலபிரபுக்களாகிய வேளாளரின் குடிமக்களாகிய வண்ணர், அம்பட்டர், பறையர், பள்ளர் இப் பிரிவைச் சேந்தவர்களாகும். இவர்கள் நிரந்தர அடிமைகளாகும்.

தமிழர்களுக்குள் ஒவ்வொரு சாதியிலும் குலங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. வேளாளருக்குள் நிலப்பிரபுக்களும், அவர்களின் சந்ததியினரும் உயர்குல வேளாளர் என தங்களை அழைத்துக்கொள்வர். சான்ருருக்குள் அரசர்களின் சந்ததியினர் நாடன், நாடான், நாடாள்வார் போன்ற பட்டங்களை வைத்திருப்பர். மீனவர்களுக்துள் மேலோங்கி கரையார் சைத்திரிய குலத்தவராகும். கைக்கோளர் மத்தியில் முதலியார் பட்டமுடையோர் உயர்வானவர்களாகும். ஈழவர் மத்தியில் சாணர், பணிக்கர் போன்ற பட்டங்களை சமூகத்தில் முன்னணியில் இருப்பவர் வைத்திருப்பர். உயர்குலத்தவர்களாக கருதப்படக்கூடிய வேளாளர், சான்ருர், கரையார், வன்னியர், கம்மாளர், மறவர் எல்லாச் சாதியினரையும் விட தாங்களே உயர்ந்தவர்கள் என வாதாடுகின்றனர். தமிழர்கள் மத்தியில் காணப்படும் பேதங்கள், வெளியார் இவர்களை அடிமைப்படுத்த நல்ல வசதியளித்துள்ளது எனவே இப்படியான பேதங்களைவிட்டு, எல்லோரும் ஒரே குல மக்கள் எனத் தமிழர் வாழ்ந்தால், விரைவில் உலகில் பலமுள்ள இனமாக மாறலாம்.

# 11. இலக்கியத்தில் சான்றுர வம்சம்

நாடாருக்குரிய பட்டப்பெயர்கள் அரசகுலத்தவருடன் தொடர்புள்ள பட்டங்களாகவே காணப்படுகின்றன. சான்ரோர், சான்றுர், நாடன், நாடான், தனையன் கிராமணி, சாணு, என்ற பெயர்கள் இதை நிரூபிக்கின்றன. "சாணு" என்னும் அரசகுலத்தவர் பர்மாவில் ஆட்சி செய்தனர். இலங்கையிலும், சேர நாட்டிலும் "சாணுர்" என்ற பட்டம் கௌரவ பட்டமாக சிங்கள, மலையாள அரசர்களால் கொடுக்கப்பட்டன.

"நாடன்" என்னும் சொல் சோழ அரசனை அல்லது சூரியகுல மன்னர்களை குறிக்கும். சூரிய குல மன்னர்களின் சந்ததியினர் நாடன், நாடான், நாடார், என அழைக்கப்படுவர். "நாடன்" என்னும் சொல்லைவிட நாடான் என்னும் சொல் பேச்சுக்கு இலகுவானதாகும். கரையன் கரையான், செட்டி—செட்டியார், தட்டன்—தட்டான், பார்ப்பன்—பார்ப்பான், வன்னியன்—வன்னியான், வேளாளன்-வெள்ளாளன், கன்னம்—கன்ஞர், மேற்கூறியதுபோல் பேச்சுத்தமிழில் நாடன்—நாடான் என மருவியது.

தொல்காப்பியம்—சொல்லதிகாரம் விளிமரபு
27-வது சூத்திரம்

"எஞ்சிய விரண்டி னிறுதிப் பெயரே
நின்ற வீற்றிய னீட்டம் வேண்டும்"

என்னும் தொல்காப்பிய சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எடுத்தாண்ட "குருசில், குரிசீல், ஏந்தல், ஏந்தால், தோன்றல், தோன்ருல், குழையன், குழையான், அணியன், அனியான், மக்கள், மக்காள், என்பனவாகிய மேற்கோள்கள் ஒரு பொருள் கொண்டு வருவன போன்று "நாடன், நாடான், நாடர், நாடார் என்னும் பெயர்களும் விகுதிகளால் வடிவம் மாறினும் பகுதியும் விகுதியும் பொருளும் ஒன்றெனத் துணியப்படும். நூல்: நாடார் எனும் சொல் ஆராச்சி த. விஜயதுரைச்சாமி

"ஞால நின்வழி யொழுகப் பாடல் சான்று
நாடுடன் விளங்கு நாடா நல்லிசைத்
திருந்திய வியன் மொழி திருந்திழை கணவ"

பதிற்றுப்பத்து, மூன்றும் பத்து—4-வது அகவல், நாடா என்பது அரசனைக் குறிக்கும்.

ஔவையார் வாக்கு

"கானேந் தேனேந்தேன் கடுகி வழி நடந்தேன்
யான் வந்த தூரமெளிதன்று—கூனன்
கருந்தேனுக் கண்ணுந்த காவிரி சூழ் நாடா
இருந்தேனுக் கெங்கே யிடம்

இச்செய்யுளில் வரும் 'நாடா' என்பது 'நாடன்' என்னும் பதத்தின் விளிபெயராகும், "அரசன்" என்னும் பொருள் கொண்டது.

கம்பராமாயணம், பாலகாண்டம்
கோலங்காண் படலம்—41-வது செய்யுள்

"வாளையுக ளக் கயல்கள் லாவு மதின் மேதி
மூளை முது கைக்கிழிய மூரிய வரான் மீன்
பாளை விரி யக் குதி கொள் பண்ணை வள நாடா
நாளையென வுற்ற பக னற்றவ னுரைத்தான்.

கம்பராமாயணம், ஆரணிய, காண்டம்
சூர்ப்பனகைப் படலம், 122-வது செய்யுள்

"ஏற்றவனே வரிசிலையோ னியம் பாமு னிகலாக்கி
சேற்றவனே தன் கணவ னருகிருப்பச் சினந்-
[திருகிச்
சூற்றவனே நீருழக்குந் துறை கெழுநீர் வள நாடா
மாற்றவனைக் கண்டக்கா வழலாதோ மண-
[மென்றுள்

பெருந்தேவனார் பாரத வெண்பா
உத்தியோகப் பருவம்

"அழித்தழித் தென் கண் முகப்பெயர்ச்சுணன்
[றன் ணுண்மைக்
கிழித்த வரை நல்லாட்க ளென்றுன்—சுழித்தரங்கம்
சிந்தியோடும் பழனச் சேனுடா பாண்டவர்க்காய்
வந்தியோ கங்கை மகன்.

நளவெண்பா—கலித்தொடர் காண்டாம்
26-ம் செய்யுள்:

வான்றோய நீடுயர்ந்த மாடக்கொடி நுடங்கத்
தான்றேன்று மற்றித் தடம்பதிதான்—வான்-
[றேன்றி

வில்விளக்கே பூக்கும் விதர்பனுடானுடைய
நல் விளக்கே யெங்க ணகர்

விதர்ப்ப நாடானுடைய—விதர்ப்ப ராஜனுடைய.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய
தேவாரம்—திருநாட்டியத்தான் குடி
10-வது பாசுரம்

கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற
கொடிறன் கோட் புலி சென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத்தான் குடி
நம்பியை நாளு மறவாச்
சேடார் பூங்குழற் சிங்கடியப்பன்
திருவாரூர னுரைத்த
பாடீராகிலும் பாடு மின் றொண்டீர்
பாடதும் பாவம் பற்றறுமே

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் காலம் கி. பி. 9-ம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.
சென்னி நாடார்—சென்னி வம்சத்தவராகிய சோழர்

பெருந்தேவனார் பாரதக வெண்பா-உத்தியோக பருவம்

மூத்தானிருக்க விளையா னரசாளல்
கோர்த்தரும மென்கின்றாய் கொற்றவனே-மாத்தன்
செறிகுன்றத் தெள்ளருவி சேய்யலேக்கு நாடா
நெறிகுன்றச் சொல்லுவதோ நீ

நாடானே! மூத்தவன் இருக்கையில் இளையவன் அரசு புரிதல் நியாயமாமோ'' என்பதாம்.

பாரத வெண்பா—52-வது செய்யுள்.

நாடறிய நாடார் சபையகத்தே பாஞ்சாலி
நாடறிய தூசுரிந்த நாசத்தால்—நாடறியத்
தன்னே வந் தீர்க்கத் தழை பூங் குழல் விரித்த
பொன்னே யவ் வன்ன மகள்

பாண்டிய அரசர்களுக்கும் நாடன், நாடான் என்ற பட்டங்கள் இருந்ததாக பின்வரும் பாக்களி ணுல் அறியலாம். இப்பாக்கள் எழுதப்பட்ட காலத் தில் பாண்டியநாட்டை சூரியகுலத்தவராகிய சான் ருர் அரசு செய்தமை குறிப்பிடத்தக்கது.

அருணுசல புராணம்.
வச்சிராங்கத பாண்டியன் சுருக்கம்
40-வது செய்யுள்.

வேழமும் பரியுந் தேரும் வீரருஞ் சுவடு நாடிச்
சூழ மந்திரிகளோடுஞ் சூழ்ந்தன; துயரந்தீர்ந்தான்
தாழையின் கமுகின் காடுந் தவள்வான் கதிரைத்
[தீண்டும்
வாழையின் கரும்பின் சாற்றின் வளர்ந்திடும்-
வையை நாடான்.

இக்கவியின் வச்சிராங்கத பாண்டியனுக்கு வையை நாடான் எனப்பெயர் வந்திருக்கின்றது. இத்தொடர் மொழியின் ஈற்றில் வரும் நாடான் என் பதற்கு உரையாசிரியராகிய மழவை மகாலிங்க ஐயர் "அரசன்" எனப்பொருள் எழுதியுள்ளார். (நாடார் என்னும் சொல் ஆராய்ச்சி. த. விஜய துரைசாமி).

திருவாதவூரர் புராணம்

திருப்பெருந்துறைச் சருக்கம் 84-வது செய்யுள்

சென்றவர் வையை நாடன் திகழ்சபை முன்ன- [ரெய்தி
வன்றிறன் மன்ன போற்றி மாமதுரேச போற்றி
யென்று பின் வாத வூர ரெய்திய செய்தியெல்லாம்
ஒன்றிய கலற்சி கூறும் முளத்துட னின்று சொல் [வான்.

ஈன்ருர்க்கோர் மாதுன்பம்; இன்ஞர்க்கோர் இன்ஞச் [சொல்
சான்ருர்கட்கெல்லாம் தலையிறக்கம்; தோன்றும்
கொடுவில் வாட்தானைக் குலவேந்தே! மன்றில்
வடுவிளான் வைத்த வடு.

பாரதவெண்பா உத்தியோக பருவத்திலே வீமண் தருமனைப் பார்த்து கூறுவதாக அமைந்தது. திரௌபதிக்கு ஏற்பட்ட மானபங்கத்திஞல் பெற்ருேர்க்குத் துன்பமும், பகைவர்க்கு பழிச்சொல்லும், நட்புடைய அரசர்களாகிய சான்ருர்கட்கெல்லாம் தலையிறக்கமாகிய வெட்கமும் ஏற்பட்டன வென்று வருவதை உற்று நோக்குக.

பாரதவெண்பா உத்தியோக பருவம் 52-வது செய்யுளில் இவர்கள் நாடார் என நேரடியாக அழைக்கப்படுகின்றனர்.

தொல்காப்பிய, சொல்லதிகாரம், பெயரியல் 33-ம் சூத்திரவுரையில் சேஞவரையர்

''எல்லாப் பார்ப்பாரும் எல்லாச் சான்ருரும்''

எனக் கூறும்பொழுது பார்ப்பாருக்கு அடுத்த தாக அரசகுலத்தவராகிய சான்ருர் என்பதே அர்த் தமாகும்.

''மறிந்து தாழ்வன வாசிகள் மாமதம் வேழம்
தறிந்து வீழ்வன தேர்நிறை தகர்வன சான்றேர்
எறிந்த வேலினும் வாளினும் கணையினும் இளைஞர்
துறந்த வாக்கையை எத்தனை கோடியார் சொல்வார்'

மேற்கூறிய பாக்களை எழுதிய காலத்தில் சான்ருர் அரசவம்சத்தினராக சோழநாட்டிலும், பாண்டிய நாட்டிலும் இருந்தனர். புலவர்கள் சான் ருர்களுக்கு கௌரவமளிக்கும் வகையில் தங்கள் நூல்களில் அவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்த்தைக் கொடுத்தனர். சான்ருர், நாடன், நாடார் என்ற சொற்களை அரசர்களுக்கு பாவித்தமையிலிருந்து அவர்கள் அரசகுலத்தவர் என்பது நிரூபிக்கப்படு கின்றது.

# 12. 'சான்றோர்' இனத்தவரை பற்றி ஐரோப்பிய இந்தீய அறிஞர்கள்.

அரசகுலத்தவராகிய சான்ருர் இந்தியாவில் பல பகுதியில் ஆட்சிசெய்து 15-ம் நூற்ருண்டின் முற் பகுதியில் முற்ருக வீழ்ச்சியடைந்தனர். அவர்களை வென்ற விஜயநகர மன்னர்கள், சூரியகுலத்தவரை எப்படி தாக்கியிருப்பார் என கூறவேண்டிய அவசியம் இல்லை தோல்வியடைந்த அரசகுலத்தவர் எப்படி வென்ற மன்னர்களால் தாக்கப்படுகின்றனர் என்பதை திரு. W. W. ஹன்றர் (W. W. Hunter) அவர்கள் விபரமாக கூறுகின்ருர்.

"படையெடுத்து தோல்வியடைந்த அரசர்களும், வீரர்களும், கொலை செய்யப்பட்டு, எஞ்சியவர் தொடக்கத்தில் வேளாண்மை செய்யவும், பின் கட்டை வெட்டவும் பின் யானைக்கு புல் அறுக்கவும் கட்டளையிடப்பட்டனர்." W. W. ஹன்றர் "இந்தியாவின் அரசாங்க கசெற் பத்திரிகை." 1.

திருவானந்தபுரம் காலேஜ் புரோபஸரும் மனோன்மணிய ஆசிரியருமாகிய ராவ்பகதூர் P. சுந்தரம்பிள்ளை அவர்கள் பின்வருமாறு கூறுகின்ருர்.

"சான்ருர் தங்களை க்ஷத்திரியர் என்று சொல்லுகிருர்கள். தாங்கள் பாராட்டுகிறபடியே பூர்வ தமிழ்நாட்டு சாதிகளுக்குள் மிகவும் மதிப்பான அந்தஸ்துக்களையுடையவர்களாக இருந்திருக்கலாம்;

ஆனல் அப்புறம் பிராமணர் தென்னுட்டுக்கு வந்து பின்னல் ஆண்ட அரசர்களை முகஸ்துதியாய் ஏமாற்றி தங்களுக்கு உயர்ந்த பதவிகளை ஆகப் பண்ணிக்கொண்டது முதல்தான் சான்ருர் குறைவடைந்தார்களென்று சொல்லலாம், எனக்குச் சந்தேகமறத் தெரிந்தபடி, ஒரு புது அரசாங்கத்தார் வந்து முந்திய அரசவம்சத்தை தலைகீழாய்த் தாழ்த்தி, அவர்கள் பூமியாதீனத்தை விட்டோட வலோற்காரம் பண்ணியதால் அவர்கள் வேறெங்கேயாகிலும் புகலிடந்தேடி அங்கே தங்கள் பேரையும் பூர்வோத்தரத்தையும் மறைத்து விறகுவெட்டிகளும், தண்ணீர் சுமைக்காரர்களும் ஆனதுபோல், மேற்படி புதிய அரசாங்கத்தின் தயவைப் பெற்று சிலாக்கியம் அடைந்த இதர சாதிகளால் அவமதிக்கப்படுகிற தாழ்ந்த தொழில்களை நடத்தி வருகிறது சகசந்தான் ஆகவே இவ்விஷயங்களை ஒரு வகையாய் விசேஷித்துக் கவனிக்கவேண்டியதாகவேயிருக்கின்றது. இப்படி அவமதிக்கப்படுகின்ற இந்தச்சாதியார் தங்கள் பூர்வ உயர்நிலையைக் கண்டுபிடித்ததனல் தங்களிலே மன எழுப்பமாகி தங்களில் தற்கால நிலைமையை கல்வி முதலியவற்ருல் மேன்மைக்குக் கொண்டு வரப்பிரயாசைப்பட்டால் அவர்களுக்கு மற்றவர்கள் சகல கனத்தையும் மகிமையையும் கொடுக்கவேண்டுமென்றே நான் தாராளமாய்ச் சொல்லுவேன்'' என்ருர்.

ஒவ்வொரு சாதியினருக்கும் ஒரு தொழில் இருப்பதுபோல யுத்தமிட்டு நாட்டைக்காப்பதுவே க்ஷத்திரியகுல சான்றுர்களின் தொழிலாகும்,

“நாட்டை ஆளுதல், சண்டைசெய்தல், பிறவூர்களைப்பிடித்தல், போர்வாகனங்களை ஓட்டுதல், அம்பை சரியாக குறிவைத்தெய்தல், சண்டையில் பின் வாங்காமல் கடைசிமட்டும் போராடுதல் சத்திரியரின் குணங்களாகும்”. இராமேஸ் சந்தர் தத் எழுதிய “**ஆதி இந்தியா**” 2.

சான்றுர் அல்லது நாடார் அரசகுலத்தவர் அல்லது க்ஷத்திரியர் என வாதாடும் இந்திய, ஐரோப்பியரின் கூற்றுக்களை ஆராய்வோம்.

திருவாங்கூர் திவான் பேஷ்கராயிருந்த ராவ் பகதூர் வீ. நாகம் ஐயரவர்களைக்கொண்டு (B.A,F.R. Hist S.) திருவாங்கூர் அரசாங்கத்தவர் தயாரித்த திருவாங்கூர் ஸ்டேட் மானுயலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. (2-ம் பகுதி........பக்கம் 392-398)

அதாவது இக்குலத்தவருடைய பேரின் சரியான ரூபம் சான்றுர். சான்ரேர்-சான்றவர் என்னும் மொழிகள் அதன் பிரதிவடிவங்களாக இருக்கின்றன. தமிழ் இலக்கிய நூல்களிலே காணப்படுகிற சில குறிப்புக்களிலிருந்தும், இந்த குலத்தாருக்கு மாத்திரம் உரியவைகளாயிருக்கும் ஐதீகங்களிலிருந்தும் சான்றுர் வடஇந்தியாவிலிருந்து தெற்கே குடியெ

ழும்பி வந்த துணிவான யுத்தசாதியாரின் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்று நமக்கு தெரிய வருகின்றது. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான ஏனுதிநாத நாயனுர் சான்ருர் சாதியைச் சேர்ந்தவரென்பதாக தமிழ் பெரிய புராணத்திலும், அவர் ஸாக்ஷி குலோத்தப ரென்பதாக அதன் சமஸ்கிருத பிரதியிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. அக்காலத்தில் இச்சாதியார் இத்தேசத்தின் பல பாகங்களில் அரசாளுவோராய் அமர்ந்ததாகப் புலப்படுகின்றது. அவர்கள் ஒரு காலத்தில் அரசாங்கம் ஆளும் சாதியார்களாயிருந்தார்களென்ற உண்மைச் சங்கதியானது நாடார், நாடாள்வார் போன்ற அவர்களுக்குரிய பட்டப்பெயர்களால் மாத்திரமல்ல,அவர்களுக்கு மாத்திரம் உரியதான திரளான பழக்கவழக்கங்களாலும், இன்னும் வேறு சங்கதிகளாலும் ருசுவாகின்றன. நாடாள்வார் என்ற பட்டப்பெயர் திருவாங்கூர் நாட்டில் சில பூர்வ சாஸனங்களில் காணப்படுகின்றது. அவர்களுடைய ஆளுகை பின் வந்த திராவிட சனங்களின் படையெழுச்சியால் பின்னுன ஒரு காலத்தில் கவிழ்க்கப்பட்டது இந்த சாதி சனங்கள் சாதாரணமாய்ச் சான்ருர் என்று சொல்லப்பட்டாலும் அவர்கள் நாடார்கள் என்னும் பெயரைத்தான் தங்களுக்கு வழங்கிருர்கள். நாடார் என்ற பதம் பட்டப்பெயராக வழங்கி வருகின்றது.

நாடார் க்ஷத்திரிய குலத்தவரென்று மார்ஸ்டெனல் எழுதப்பட்ட "இந்திய சரித்திரம்" என்னும் நூலில் 108-ம் பக்கத்தில் காணலாம். "நாடார் எனப்பட்ட க்ஷத்திரிய குலத்தவர் என அப்பந்தி ஆரம்பிக்கின்றது." 3.

"வரி வாங்கும் முறை வெகு சுலபமாயிருந்தது, சோழராஜன் காலத்தில் சக்கரவர்த்தி அரசன், இராஜன், பெருமாள் என அழைக்கப்பட்டான். பகுதிகளாக பிரிக்கப்பட்ட நாடு "நாடான்" என அழைக்கப்பட்ட அதிகாரியால் ஆளப்பட்டது" 4.
செங்கல்பட்டு மானுவல் பக்கம் 204.

"சந்திரகுலப் பாண்டியர் க்ஷத்திரிய குலத்தவராகும். அவர்கள் வேளாளர்களோ, அல்லது வேளாண்மை செய்யும் பாமர மக்களோ அல்ல" 5.
மதுரை மானுவல்—யே. எச். நெல்சன்-பக்கம் 44.

"நாடான் நாட்டை அல்லது மாவட்டத்தை ஆட்சிசெய்பவனுனும். அது தென் பகுதியில் வாழும் சான்ருர்களின் பட்டமாகும்" 6.
1891-ம் ஆண்டில் எழுதப்பட்ட இந்தி சனத்தொகையின் விபரம், தொகுதி 13, பக்கம் 207

"நாலடியாரில் அரசனை பூமிக்கரசனே! என்றும் நாடா! என்றும் அழைக்கப்படுகின்ருன். தென்னுட்டிலே பூமிக்கு அதிபதியான குறைவான மக்கள் மத்தியிலும் நாடார்கள்தான் சொந்தக்காரராக காணப்படுகின்றனர்" 7.
திருவள்ளுவரின் புனித குறள்; வணக்கத்திற்குரிய G. U. பாப் அடிகள் பக்கம் 284.

"நாடான் என்பது நம்முடைய கிறீஸ்தவர்களுக்குள் சாதாரண வழக்கத்திலுள்ள பட்டப்பெயரா

யிருக்கிறது. அதற்குப் பொருள் பூமியையுடையவன் அல்லது நிலைமைக்காரன் எனப்படும். நாடான் என்னும் பட்டப்பெயரை பூர்வத்தில் நாட்டையுடைய அரசர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டது. தற்காலம் அந்த நாடான் விவசாயியாகவும், வர்த்தகனாகவும் இருக்கின்றான்'' 8.

சாதியும் கிறிஸ்தவசமயமும் வணக்கத்திற்குரிய ஆர்தர் மக்காஷியஸ் அடிகள் பக்கம் 27.

"நாடான் என்பது பூமிக்கதிபதியாகும். சான்றார்களாகிய அவர்களே தென்னகத்திலுள்ள கிராமங்களுக்கு ஆதியிலிருந்து சொந்தக்காரர்களாக காணப்படுகின்றனர்.'' 9

பிஷப் கால்டுவேல் என்பவரால் எழுதப்பட்ட திருநெல்வேலியும் திருநெல்வேலி மீசாமும், இடையன்குடி மீசாம் 1845 இரண்டாம் அத்தியாயம் பக்கம் 6.

"இன்னொரு வகை நாட்டுரிமைக்காரரைக் கவனிப்போம். நாடார்கள் (கொற்கைக்கு) அருகாமையிலுள்ள எல்லா நிலங்களுக்கும் சொந்தக்காரராகும் இன்னும் அவர்கள் நிலத்திற்கு அதிபதியெனவிற்ற நிலத்தின்மேலும் அதிகாரவுரிமை வைத்திருப்பதாகக்கூறி, வரிவிதிக்கும் உரிமையுண்டென வீடுகளுக்கு வாடகை விதிக்கவும், கல்யாண வரி போன்றவற்வைப் பெறவும் உரித்துடையோராக இருந்தனர். இதை மற்றைய சாதியினர் ஏற்றுக்கொண்டனர்''10

பிஜப் கால்டுவேல் எழுதிய றெமிசான்ஸ் பக்கம் 87.

"இந்த நாடார் குலத்தவர்கள் பாண்டிய நாட்டிற்கு அதிபூர்வ பாத்திய உரிமையுடையவர்கள் என்று எண்ணுகிறவர்களிலிருந்து நானும் அவர்களைக்குறித்து ஆராய்ந்து அறிந்திருக்கிற விஷயங்கள் எல்லா வற்றிலும் இருந்தும், எனக்கும் அவ்வாறே அபிப்பிராயமாகின்றது.

இவ்வாறே அபிப்பிராயங் கொள்ளுதற்கு ஒரு பலத்த நியாயம் உண்டு. அந்த நியாயம் என்னவென்றால் திருநெல்வேலி நாட்டின் தென்பாகத்தில் வசிக்கிற சான்றார்களுக்கு நாடார் என்னும் பட்டப் பெயர் வழங்கி வருகின்றது. இந்தப் பட்டப்பெயர் பெற்றிருக்கிற நாடார்கள் நிலத்திற்கு உரிமையுடைய நிலமைக்காரர் என எவரும் ஒப்புக்கொண்டு இருக்கின்றனர். ஒரு நாடான் தன் பூஸ்தியில் ஒரு பாகத்தை விற்றுப்போட்டாலும், அதில் அவனுக்கிருக்கும் ஒரு வகையான குவிட்ரென்றுத் தீர்வை பாத்தியதையை அவன் விட்டுவிடமாட்டான். இந்த ஏற்பாடு இங்கிலாந்து தேசத்திலுள்ள (மேனேர்) பிரபுக்களின் வரிசைக்கு ஒத்ததாகயிருக்கின்றது. ஆனால் இவர்கள் சங்கதியில் மேலாயிருக்கும் விடயம் என்னவென்றால், நிலச்சொத்து விஷயமாய் 'லோ கோட்டில்' ஏதாகினும் எதிர்ப்புக்கொண்டு வரப்பட்டால், மற்றும் சகல சாதியாரும் தங்கள் சொத்துரிமையை எழுத்தாதாரங்கள் மூலமாய் ஸ்தாபிக்க வேண்டியிருக்க இந்த நாடானுக்கோ குறிப்பிட்ட இன்ன இடத்து நாடான் என்று அவன் தன்னை

இனங்காண்பிக்கின் அவ்வளவே போதுமானதாயி ருக்கின்றது. எதிரி தான் அதை அறுதிக்கு வாங்கி போட்டதாக ருசுப்பண்ணினுலன்றி தாவாச்சொத்து நாடானுக்கே சரிப்படுத்தப்படும்'' 11.

S. தக்கர் தென்னிந்திய குறிப்புகள் பகுதி II-கடிதம் 4 பக்கம் 35, திருவாங்கூர் மானுவல் தொகுதி II பக்கங்கள் 392, 398

''நாடார்கள் பூமிமை ஆண்ட புராதன அரச சந்ததியார் என்பது மட்டுமல்ல, அவர்கள் ஆரிய சத்திரிய வம்சத்தில் உதித்தவர்களாகும்'' 12.

W. R. கோர்னிஷ் F. R. C. S. இந்தியாவின் குடிசன மதிப்பு 1871, முதலாம் தொகுதி பக்கங்கள் 118, 163

பூமியை ஆண்ட புராதன அரசர்களது வம்சத்தவர்கள் என அவர்கள் (நாடார்கள்) பாத்தியதை கொண்டாடுவது, நியாயமாகவே இருக்கின்றதென அண்டர்துரை அவர்கள் கூறியிருக்கிருர்கள். 13.

இந்திய அரசாங்க கசெற், தொகுதி Xiii, பக்கம் 302

''நாடார்கள் பெரும்பாலும் சத்திரியர்களாக இருக்கலாமென சந்தேகமுண்டு. அவர்கள் தங்களுக்கு வைக்கும் பட்டங்கள், சமுதாயத்தில் உயர்வானவையாகையால் மற்றைய சாதியினர் பொருமையால் அதை ஏற்க மறுக்கின்றனர்.'' 14.

திருநெல்வேலி மானுவல் A. J. ஸ்டுவாட்

"திருநெல்வேலி பகுதியில் சான்ருர் பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர். அவர்கள் நாடார்கள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் வியாபாரம் செய்து வந்தனர். அவர்களுக்கும் தென்னை, பனை மரங்கள் ஏறுபவர்களுக்கும் ஒரு வித தொடர்பும் இல்லை" 15.

இப்படி 1820-ல் அரசாங்கத்தின் ஸர்வேயராகஇருந்த தர்ண்புல் அவர்கள் (T. Turnbull) திருநெல்வேலிப் பகுதியைப் பற்றி எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார்

திரு ஸ்டுவர்ட் பின்வருமாறு கூறியுள்ளார் "சாண்டார் ஒரு காலத்தில் சந்தேகமின்றி யுத்தத்தை விரும்பிய இனமாகும். நாடான் என்றால் நாட்டை அல்லது மாகாணத்தை ஆட்சிசெய்பவனுகும். தென்பகுதியில் வாழும் சான்ருரின்பட்டப் பெயராகும் சாண்டார் கடுமையாக உழைக்கும் இனமாகும். அவர்களிடம் வறுமையை காணமுடியாது. அனேகர் வேளாண்மை செய்பவர்களாகும். பலர் வியாபாரம் செய்கின்றனர். அவர்களிடையே ஒரு ஜமீந்தார் ஆகிலும் இருப்பார்.

1821-ல் திருநெல்லேலிச் சீமை விபரம் எழுதிய தர்ண்புல் பின்வருமாறு கூறுகின்ருர். "பாண்டிய தேசம் இங்கிலாந்தின் கௌண்டிகள் மாதிரி சிறு நாடுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. அரசகுல பிரபுக்கள் அக்கௌண்டிகளுக்குத் தலைவர்களாயிருப்பது போல் பாண்டிய தேசத்தில் உள்நாடுகளுக்கு பாண்டயகுலச் சான்ருர் தலைவர்களாயிருந்தனர். அவற்

றின் ஆதி உரிமைக்காரர்களாகிய சான்றுர்களுக்கு நாடன், நாடான், நாடாவி, நாடாள்வான் எனப் பட்ட பட்டங்கள் வழங்கப்பட்டன."

1806-ல் வணக்கத்திற்குரிய றிங்கில்டாப் அடிகள் "சான்றுர்களின் பழக்கவழக்கங்களும், அமைப்பும் ஐரோப்பியரைப் போன்றதாகும்" எனக்கூறியுள்ளார்

"நாடார்கள் சேர, சோழ, பாண்டிய அரசர் களின் சந்ததியினர்" என இராபேர்ட் எல் ஹார்டுகி ரேவ் 'தமிழ்நாட்டு நாடார்கள்' என்னும் நூலில் கூறி யுள்ளார்கள். சிக்காகோ பல்கலைக் கழக வெளியீடு.

விஜயநகர அரசர்களால் நசுக்கப்பட்ட தமிழ் அரசகுலத்தவராகிய நாடர்களின் வரலாற்றை எழு திய ஐரோப்பிய, இந்திய சரித்திர அறிஞர்களின் நூல்களை வாசித்தறிந்த மக்களின் உள்ளத்திலே நாடார்குலத்தவரின் பெருமை வேரூன்றிவிட்டது.

---

1. "Those of the invading force, who escaped slaughter were carried away into captivity and being in turn unsuccessfully employed first as cultivators, then as wood-cutters and again as grass-cutters to the royal elephants." W. W. Hunter's Imperial gazeteer of India, Vol I, P. 358.

2. "The additional occuptions of the Kshatriya were governing and fighting and making conquests, to learn the management of chariots and the use of the bow and to stand firm in battle and not to turn back." (Gautama, X15 and 16) vide-Ramesh Chunder Dutt's, Ancient India, vol II, Book III, chap V, P. 77.

3. "A Kshatiya clan know as Natas" vide Marsden's, History of India, Page 108.

4. "The machinery for the collection of the Government share and general revenue administration was very simple. There was first the viceroy, styled in Chola days Arasu, Raja or Perumal, while the Nadu was managed by an officer called Nadan, a name derived from that of his charge. Vide The Chingleput District Manual, chap V, P. 204.

5. "The Pandia Kings, of the Lunar race, commonly believed to be of the Kshatriyal not of the Vellala or any other Agricultura, castes" Vide: J. H Nelson's Madura Manual, Pt 14., chap 2, P 44.

6. "Nadan is a ruler of a Nadu or district It is the usual title of the Southern Sandrar Vide Census of India, 1891, Vol Xiii P. 207.

7. "In Naladiyar, the King is addreesed as Nada, Lord of the land. In the South, a, landed proprietor even of the humblest class is a Nadan. Vide: The sacred Kural of Thiruvalluvar Nayanar with introdnction, grammar, translations, notes, lexicorn and Concordance. P. 284 by Rev G. U. Pope, M. A. D. D. M. R A. S. London 1886.

8. Nadan is a title in common use amongst our Christians. It menas an 'owner of lands or a landlord, and was originally given to the lords of the soil only. In these days Nadan may be a farmer, a trader".
Vide Rev Arther Margoschi's Christianity and caste P. 27.

9: "The Nadans, a name signifying lord of the soil, are Sandrar land owners, who claim rights of Seigniorage over most of the villages in the south." Vide: Bishop Coldwell's Tinnevelly and the Tinnevelly Mission, 1869 and the mission of Edeyan koody, 1845. Chap II, P. 6

10. I had also to deal with another class of claimants; the Nadans who had been the original proprietors of all the lands in the neighbourhood and who still professed as

lords of the soil, to have certain rights of Seniorage over even the lands they had sold, especially the right of levying a small rent on all houses built within their boundaries and a small fee at weddings etc. I had no doubt about its having been customarily submitted to" Bishop Caldwell's Reminiscence, P. 87.

From all that I can find about them (Nadars) I am much inclined to agree with those who consider them to have been the original possessors of the (Pandia) country.

One strong argument is favour of this conjecture is that in the southern part of Tinnevelly, the highest class of Sandrars called Nadans are the acknowledged proprietors of the soil, and even when a Nadan has sold a piece land, he retains the right to a sort of quit rent.

Indeed the system is very like that of our lords of Manor, with the addition of the remarkable privilege, that in any dispute that is brought in to a court of law, with regard to landed property, though all other classes are obliged to establish their claims by written

documents, it is only necessary for a Nadan to be identified as the Nadan of such a particular spot, and the disputed property is adjusted to him, unless the opponent can prove his purchase of it. Miss S Tucker's (Sister of Rev J. Jacker, M. A.) South Indian sketches, Pt II, Letter 4, Page 35 and the Travancore State Manual, Vol II, P. 392, 398.

12. They (Nadars) do not merely mean that they were the Original Kings of the soil, but that they are descended from the Aryan Kshatriyas Vide W. R Cornish F. R. C. S, Census of India in 1871, Vol I, p 118, 163.

13. They (Nadars) claim, perhaps with justice, to be the original lords of the soil." Vide W. W. Hunter's Imperial Gazeteer of India, Vol Xiii. P. 302, and the Manual of the administration of the Madras Presidency, Vol II, P. 131.

14. The Kshatriyas are suspected to be mostly Nadars, who are fond of arrogating to themselves titles which imply a higher place in the social scale than that assigned to them by the general accord of other castes". Vide A. J. Stuart's Tinnevelly Districts Manual, Chap II, P 16

15. The chantrars are very numerous in this district (Tinnevelly); they are styled Naadigals (Nadakkals or Nadars) and are a mercantile people, distinct from those that extract the toddy from the palmyra and coconut trees.

16. It is by no means certain that the chandrans were at one time a warlike tribe. Nadan is a ruler of a nadu or district; it is the usual title of the Southern Chandrans. The Chandrans are a hardworking industrious people, and pauperism is almost unknown among them. Many are farmers, many engage successfully in a trade, and there is at least one chandran Zamindar. (Sir H. A. Stuart I.C.S, M.R.A.S, C I E.)

17. The Chantars are a set of people more robust than other Indians-their features completely European-(Rev W. T. Ringeltaube)

## 13. சான்ருர் சூரிய குலத்தவரா?

திவாகரம், மக்கட் பெயர்த்தொகுதி.

"சான்ருேர் மிக்கோர் நல்லவர் மேலவர்
ஆய்ந்தோ ருயர்ந்தோ ராரிய ருலகென
வாய்ந்த வான்ருே ரறிவுடையோரே"

சான்ருேர் என்ற சொல் சூரியனையும், அறிவோனையும், குறிக்கும். சூரிய வம்சத்தினராகிய சான்ருேரே காலப்போக்கில் பாமரமக்களால் சான்ருர் என அழைக்கப்பட்டனர்.

"தரணி செங்கதிரோன் சண்டன்
தபநனே யொளியே சான்ருேன்"

என்னும் சூடாமணி நிகண்டின் சூத்திரத்தால் சான்ருேன் என்ற சொல்லுக்கு சூரியன் என பொருள் தரப்படும்.

பிங்கல நிகண்டு, 2-வது வானவர் வகை
118-வது சூத்திரம்

"பகவன் சான்ருேன் வேந்தன் ருபநன்
சுடரோன் மாலி சூரியன் பெயரே"

சான்ருேன் சூரியனின் பெயரென இச்சூத்திரத்தால் நிரூபிக்கப்படுகின்றது.

பெரிய புராணத்தில் கூறப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஏனுதிநாத நாயனுர் சான்ருர் இனத்தவரென நேரடியாகக் கூறப்படுகின்றது.

பெரியபுராணம் ஏனாதிநாத நாயனார் புராணம்
2-வது செய்யுள்

"வேழக் கரும்பினோடு மென்கரும்பு தன்வயலிற்
சூழக் கதிர்ச்சாலி தானோங்குந் தன்மையதாய்
வாழக் குடிதழைத்து மன்னியவப் பொற்பதியில்
ஈழக்குலச் சான்றார் ரேனாதி நாதனார்.

சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட உபமன்னியு பக்த விலாசம் 29-வது அத்தியாயத்தில், ஏனாதி நாதர் சரிதம் 3-வது சுலோகம் ஏனாதிநாயனாரை சூரிய குலத்தவர் எனக் கூறுகின்றது.

"அஸ்மின் னேனாதி நாதாக்ய
ஆசித் ஸாக்ஷி குலோத்பவ
ந்ருபஸ் ஸஸ்த்ர கலாசார்ய
சிவபக் தாங்க்ரி ஸக்ததி

இங்கு "சாக்ஷி குலோத்பவ" என்றால் சூரியகுலத்தவனாகும்.

அமரசிம்மம் பிரதம காண்டம்
வ்யோமவர்க்கம் 103-வது சுலோகம்

"கர்ம ஸாக்ஷி ஜெகச்சக்ஷு
ரம் சுமாலி த்ரயீதநு."

இங்கு ஸாக்ஷி சூரியனைக் குறிக்குமெனக் கூறப்பட்டுள்ளது. ஏனாதிநாத நாயனார் தமிழ்நூல்களில் சான்றார் எனவும், வடமொழியில் சூரியகுலத்தவரெனவும் கூறப்பட்டுள்ளது. அதனால் "சான்றார்" என்ற பதமும் ஒரே விளக்கத்தையே குறிப்பிடுகின்றது.

# 14. சாதியிலுள்ள பட்டங்களும், தொழில்களும, உட்பிரிவுகளும்.

தமிழ் நாட்டிலுள்ள நாடார்களுக்குள் உட்பிரிவுகள் பின்வருமாறு:

1. சான்ருருக்குள் குருக்கள் அல்லது புரோகித தொழில் செய்யும் பிரிவினரும் உண்டு. இவர்களை தமிழ்நாட்டு பிராமணருக்கு சமமாக கருதுகிருர்கள். இவர்கட்கு ஐயர், குருக்கள் போன்ற பட்டமுண்டு
2. மாறநாட்டார்.
3. நட்டாத்தியர்.
4. மேல்நாட்டார்.
5. கொடிகாரரர்.
6. சாணர் அல்லது ஈழவர்.

சாதியில் வழங்கப்படும் பட்டங்கள் பின்வருமாறு:

நாடன்: சோழ, சேர, பிற்கால, பாண்டிய அரசர்

நாடான்: சோழ, சேர, பிற்கால, பாண்டியரின் சந்ததியினர்.

நாடார்: சான்ருரின் பட்டம் (நாடுடையவர்கள்)

கிராமணி: கிராமத்திற்கு அதிகாரி மௌரிய அரச குலத்தவரின் பட்டம்

**நாடாள்வான்:** சூரிய குலத்தவர்களான சோழபாண்டிய அரசர் காலத்தில் சிற்றரசர்களாக மாகாண அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட நாடார் குலத்தவர்களாகும்.

**கொடிகாரன்:** படைக்கு தலைமை வகிப்பவன் முன். செல்பன், அரசனின் இனத்தவன்.

**தலையன்:** யாழ்ப்பாண அரசில் கிராம, அதிகாரிகளின் பட்டம். யாழ்ப்பாண அரசர்களாகிய கங்க வம்சத்தினர் இப்பதவிகளை சான்ருர்களுக்கு கொடுத்தனர். அதனுல் இச் சான்ருர் தலைய பகுதியினர். என அழைக்கப்பட்டனர்.

**சாணர்:** இது ஈழவர் மத்தியிலும், சிங்கள அரச வம்சத்திலும் கௌரவ பட்டமாகக் காணப்பட்டது. சாணரக் காசு இலங்கையில் யாழ்ப்பாணத்தார் மத்தியிலும், சிங்களவர் மத்தியிலும் வழக்கிலிருந்த நாணயமாகும். ஈழவரைப் போன்று சிங்களச் சான்ருர்களாகிய துராவ எனப்படுவோரும் மது இறக்குதலை விரும்பி செய்தனர்.

**தொழில்:** 1911-ம் ஆண்டு கணக்குப்படி இந்தியாவில் 52 சத விகித நாடார்கள் விவசாயம் செய்தனர். 18 சத விகிதமானோர் கைத் தொழில், வர்த்தகம், செய்தனர். 14 சத விகிதமானோர் மது இறக்கும் தொழிலைச்

செய்தனர். இவர்களுக்குள் குசவர் என்ற பிரிவினர் இருந்ததாக திரு காசிச்செட்டி அவர்கள் தனது நூலில் கூறுகின்றார்கள்.

இலங்கையில் சான்றார் விவசாயம், வியாபாரம் போன்றவற்றை விரும்பிச் செய்கின்றனர். யாழ்ப்பாணத்தில் எண்ணெ வணிகம் முழுக்க இவர்களது ஆதிக்கத்திலே இருந்து வருகின்றது. எண்ணெ வணிகம் செய்யும் சான்றார் வாணிபர் அல்லது செட்டிகள் எனச் சாதிப்பெயரால் அழைக்கப்படுகின்றனர்.

**ஈழவரும் யாழ்ப்பாணத்தவரும்:**

இலங்கையில் தமிழர் மத்தியில் யாழ்ப்பாணத்தவர் கல்வியிலும், பொருளாதாரத்திலும் மற்றையோரை அடிபணியச் செய்துள்ளனர். தமிழருக்குள் இவர்களே சகல உத்தியோகங்களை வகிக்கின்றனர். இலங்கைத் தமிழர்களை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். வன்னிப்பகுதியிலுள்ள தமிழர்கள் போர் வீரர்களாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தவர்களாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் வசிக்கும் தமிழருக்குள் சில கிராமங்களில் வசிக்கும் வேளாளர்களையும், பிராமணர்களையும், மடப்பள்ளிகளையும் விட்டு மற்றையோர் யாழ்ப்பாணத்தின் பூர்வீக குடிகளாகும். யாழ்ப்பாணத்தவரின் பூர்வீகம் மூன்று இன மக்களிலிருந்து ஏற்பட்டதாகும். 1. ஈழவர். 2. நாகர். 3. இயக்கர். என்னும் இனத்தவரின் சந்ததியினரே யாழ்ப்பாணத்தவராகும். ஈழவர் எலு

என்னும் திராவிட மொழியைப் பேசினர். இலங்கையில் ஈழவர் பெரும்பான்மையாகக் காணப்பட்டமையால் ஈழநாடு என அழைக்கப்பட்டது. புத்தமதத்தைத் தழுவிய தென்பகுதி ஈழவர் தங்கள் மொழியில் அதிகமான பாளி, சமஸ்கிருத சொற்களைச் சேர்த்தமையால் சிங்களம் என்னும் புதிய மொழி ஏற்பட்டது. சேர, சோழ, மன்னர்களால் மலையாளத்தில் அடிமைகளாக குடியேற்றப்பட்ட ஈழவர், தாங்கள் இலங்கையிலிருந்து வந்ததாக விருப்பத்துடன் வாதாடுகின்றனர். யாழ்ப்பாணத்தவரைப் போன்று ஈழவரும் கல்வியில் சிறந்து விளங்கி, பல உயர்ந்த பதவிகளை வகிக்கின்றனர். யாழ்ப்பாணத்தார் போன்று ஈழவர் மத்தியிலும் 'முதலியார்' பட்டம் காணப்படுகின்றது. "The people of Ceylon living in Malabar are called the Ezhavar, the people of Elam, from time jmmemorial". The Sinhalese of Ceylon and the Ayan Theory" by Samuel Livingstone. **Page 43**. மலபாரில் வாழும் இலங்கை மக்கள் தங்களை ஈழவர் எனக் கூறுகின்றனர். இவ்வாறு மேற்கூறிய நூலில் திரு. சாமுவல் லிவிங்ஸ்ரோன் கூறுகின்றார் மலையாளத்தில் வாழும் ஈழவர் தங்களை வேளாளர் என்று கூறுவதுமட்டுமன்றி சாணார் என்ற பட்டத்தை உயர்ந்த பட்டமாகக் கருதுகின்றனர். இந்த ஈழவருக்கும், ஆந்திரத்திலும், கன்னடத்திலும் காணப்பட்ட கதம்ப குலத்தவருக்கும் நெருங்கிய இரத்தத் தொடர்வு உண்டு.

நாடார் குலத்தவர் ஆறு பெரும் பிரிவாகக் காணப் படுகின்றனர்.

1. குருக்கள்: சான்ருருக்குள் குருக்கள் ஒரு பிரிவாகும் அவர்களே கோவில்களில் பூசை செய்வர். இவர்கள் திருச்செந்தூர் தாலுகா, படுக்கப்பத்து, கொட்டகத்தி, தண்டுப்பத்து, சாத்தான்குளம், வேப்பங்காடு, கச்சினுவிளே, நஞ்சிநாட்டைச்சேர்ந்த. பேயோடு, அம்பா சமுத்திரம் தாலுகா, ஈராவ், ஈராச்சி, புங்கவர்நத்தம், திருநெல்வேலி ஜில்லாவிலும், நாஞ்சிநாட்டிலும், இராமநாதபுரம் ஜில்லா, விருதுப்பட்டி, மதுரை ஜில்லா—திருமங்கலம் முதலிய இடங்களிலும் வசிக்கின்றனர். வடக்கே நாடார் குல குருக்கள் தன வைசிகர் (Tana Vaisiyars) என அழைக்கப்பட்டனர். சூரிய குலத்தவரின் ஆட்சிக் காலத்தில் இக்குருக்கள் அமைச்சர்களாகவும் சேனுதிபதிகளாகவும் இருந்தனர். இப்பகுதியினருக்குள் பல கல்விமான்கள் உண்டு. சென்னே வீர ஐயர் தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு உரை எழுதினுர். பரிமேலழகர் திருக்குறளுக்கு உரையெழுதினுர். விருதுநகர் ஸ்ரீ இராமலிங்க ஐயர் சில தமிழ் நூல்களேய் பதிப்பித்துள்ளார். "சாணுருக்குள் [illegible] க்கள் குடும்பங்கள் உண்டு. அவர்கள் ஐயர் [illegible]து ஐயர் பண்டாரம் என அழைக்கப்படுவர இப்படி கலாநிதி நாகம் ஐயர் திருவாங்கூர் ஸ்டேட் மானுவலில் கூறியுங்ளார்

நாடாருக்குள் உள்ள மற்றைய பிரிவினரைப் பற்றி அமெரிக்காவில் சிக்காகோ பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பட்டதாரியாகிய திரு இராபர்ட் எல். ஹார்டுகிரேவ் எழுதியுள்ளதை அப்படியே தருகின்றேன். அவர் "தமிழ் நாட்டு நாடார்கள்" என்னும் நூலை எழிதியுள்ளார். அந்நூலை பேராசிரியர் திரு. அ. கேசவமூர்த்தி M. A. தமிழ்படுத்தி மகாஜன பத்திரிகையில் வெளியிட்டுள்ளார். அது பின்வருமாறு:-

2. மாறநாட்டார்:- திருச்செந்தூருக்கு நான்கு மைல் அளவிலுள்ள மாறுடு என்ற ஊர்ப்பகுதியில் வாழ்ந்த இவர்கள் கருக்கு பட்டையன் என்று அழைக்கப்பட்டனர். (கருக்கு-கூர்மையான மட்டை பனைமட்டை) பனையேறிகள் என்பது அவ்வாறு குறிக்கப்பட்டது. இத்தொடருக்கு வேறு ஒரு விளக்கமும் விளம்பப்படுவதுண்டு. கருக்கு+பட்டயம்= கருக்கு பட்டயம். (கருக்கு—கூரிய, பட்டயம்—வாள்) கூரிய வாளையுடையவர் என்ருகி வீரமரபினர் என்பதை விளக்கும். பிற்காலத்து வரலாற்ருசிரியர் ஒருவர் கூற்றுப்படி, இவர்கள் பாண்டியர் பரம்பரையினர் என்றும், மாறநாடார் என்ற பெயரினர் என்றும் அறியப்படுகிறது. ஐந்து உட்பிரிவுகளுள் மிகப் பெரியது இதுவே. சமூகத்தில் எண்பது விழுக்காடு மக்கள் தொகையை இப்பிரிவு பெற்றுள்ளது. நிலைமைக்காரர் என அழைக்கப்படும் நாடான்களும் அவர் தம்கீழ் வாழ்ந்த மரமேறிகளும் இப்பிரிவைச் சார்ந்தோரேயாகும். "கருக்குமட்டை, கருக்குபபட்டயம் என்ற சொல்லின் பிழையான உச்சரிப்பாகும்.

கருக்குபட்டயம் என்றால் போர்வீரர்களைக் குறிக்கு மென சரித்திரக் கலாநிதி நாகம் ஐயா கூறுகின்றார்கள். 2

3. மேல்நாட்டார்: மேல் நாடு என்னும் சொல்லிலிருந்து உருவான மேல் நாட்டார் எனும் தொடர் அவர்கள் வாழ்ந்த மேற்குத்திசை நாட்டைக்குறிக்கிறது. தென் திருவிதாங்கூரிலும், மேற்கு திருநெல்வேலி மாவட்டத்திலும் இவர்கள் வாழ்ந்தனர். சேர மன்னர் வீழ்ச்சிக்குப் பிறகு, சேரர் சந்ததியினரான இந்த மேல் நாட்டார் (குட நாடார் என்றும் கூறப்படுவர்) பாண்டிய நாடு புகுந்து மேற்கு தொடர்ச்சி மலைச்சாரலில் குடியேறினர். 2500 மக்கள் கொண்டதாக கருதப்படும் இப்பிரிவினர் பெரும்பாலும் அம்பா சமுத்திரம் வட்டத்திலும் சிறுபான்மையாகச் தென்காசி, சங்கரன் கோயில், திருவைகுண்டம், நான்குநேறி ஆகிய இடங்களிலும் வாழ்கின்றனர்.

4. நட்டாத்தி: திருநெல்வேலி மாவட்டத்துச் சாயர் புரத்துக்கு அண்மையிலுள்ள நட்டாத்தி எனும் சிற்றூரைச் சுற்றி நிறைந்து வாழும் நட்டாத்தி நாடார்கள் தொகை பல ஆயிரமே இருக்கும். பயிர்த் தொழில், வாணிகம் முதலியவற்றில் வழமையாக ஈடுபடும் அவர்கள் மரம் ஏறுவதில்லை. ஆத்திமாலைக்குரிய சோழர், பாண்டியருடன் நட்புக்கொண்டதன் விளைவே நட்டாத்தியார் எனும் பிரிவு தோன்றக் காரணம் என்று பழங்கதைகள் பகாகின்றன. இன்று இப்பிரிவினர் பெரும்பாலும் கிறிஸ்தவராகவும் மற்ற

நாடார்களுடன் மணத் தொடர்பு கொள்ளாதவராக வும் இருக்கின்றனர். இப்பிரிவினருக்குள் ஒருவரா கிய நட்டாத்தி அதிபர் கட்டப்பொம்மனுடைய தோழராக இருந்தவர். ஆங்கிலேயர் ஆட்சியில் இவர் குடும்பம் சமீன்தாராக உரிமைபெற்றனர். கடைசி நட்டாத்தி சமீன்தாராகிய திருவருடி வைகுண்ட நாடான் 1892-இல் காலமானர்.

5. கொடிக்கால்: (கொடிக்காரர்) வெற்றிலைக் கொ டிக்கால் பயிர்த்தொழில் காரணமாக இவர்களுக்கு இப்பெயர் வந்தது என்பாரும் போர்க்கொடி ஏந்தி காலாட்படையின் முன்னணி வீரராக நின்றமையின் இப்பெயர் அமைந்தது என்பாரும் உள்ளனர். அம்பா சமுத்திரம், தென்காசி வட்டங்களில் நிறைந்து வாழும் இவர்கள் வளமையாக மரமேறும் தொழிலை மேற்கொண்டுள்ளனர்.

6 சாணர் அல்லது கள்ளச் சாணர்: (ஈழுவர்) இவர் கள்தான் நாடார் சமூகத்தில் குறைந்த நிலையிலுள் ளவர்கள். இவர்கள் ஒரு காலத்தில் பாண்டிய அர சர்களின் பல்லக்கு சுமப்பவர்களாகவும், அடிமை களாகவும் இருந்தனர். அதனுல் கள்ள (உண்மை யற்ற) சாணர் என அழைக்கப்படுவர். இவர்கள் இன்று நாடார்களின் அடிமைகளாகவும், மது இறக் குபவர்களாகவும் கடமையாற்றி வருகின்றனர்.

மேற்கூறியன திரு. R. L. ஹார்டுகிரேப் அவர் களால் கூறப்பட்டவையாகும். மாறநாடார், கொடிக்

கால் பிரிவினர் மத்தியில் நேரடியாக அரசவம்சத்தினர் அல்லாத போர்வீரர்களின் சந்ததியினரின் சிலரே மது இறக்கும் தொழிலைச் செய்து வருவர். இவர்கள் நாடார் குல பிரபுக்கள் கீழ் அல்லது சொந்மாகவே இத்தொழிலைச் செய்வர். ஆனால் சாணர் வேளாளர், பிராமணர், மறவர் போன்ற சாதியினருக்கும் மது இறக்குவர். மற்றும் கள்ளச் சாணர் வேளாளரினதும், மறவரினதும் வயல்களிலும் வேலை செய்வர். வேளாளர், பிராமணர், மறவர் தங்களுக்கு கீழ் தொழில் செய்பவர்களை குடிமக்கள் அல்லது தீண்டாதவர்கள் எனக்கூறுகின்றனர்.

நாடார்குலத்தவரின் குணாதிசயங்களை கூறும்பொழுது உயர்குல நாடார்கள் வேளாளர்களைவிட சிறந்த பண்புகளையுடையவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் சாணர் தங்களை உயர்ந்தவர்களெனக் கூறவிரும்பினால் தங்களுடைய பழக்கவழக்கங்களை உயர்குல மக்களைப் போன்று மாற்றியமைக்க வேண்டும். போர்வீரர்களின் சந்ததியினர் என்பதால் முரட்டுத்தன்மை இருப்பது இயற்கை ஆனால் அதை கல்வியால் மாற்றியமைக்க முயற்சித்தல் அவசியம்.

இன்னும் உயர்குல நாடார்களைப்பற்றி திரு. R. L. ஹார்டுகிரேப் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார். நாடான்கள்: செல்வச் செழிப்புடனும் பதவிப் பெருமையுடனும் வாழ்ந்த நாடான்களுக்குப் பணிந்து அவர்களுக்குக் கீழ்பட்டோர் வாழ்ந்தனர்.

நாடான்களை நம்பி வாழ்ந்த மரமேறிகள் தாழ்மைக்கு அடையாளமாக முழங்காலுக்கு மேல் வேட்டியைக்கட்டியும், கைகட்டி நின்றும் நாடான்கள் முன் செல்வர். இப்பகுதிகளில் வேறு சாதியினரும் கணக்கப்பிள்ளையாகப் பணியாற்றும் வேளாளப் பிள்ளையும், பார்ப்பனப் புரோகிதரும், இதுபோல் பெருமக்களான நாடான்கள் முன் தாழ்மையுடன் நடந்துகொண்டனர் வழக்கமான செருக்குமிக்க தம் பழக்கங்களை நிலைநாட்ட நாடான்கள் பறையரையும், பள்ளரையும் விலைக்கு வாங்கி தமது அடிமைகளாக அமர்த்தியிருந்தனர். நாடான்கள் குதிரையிலும் அவர் தம் மகளிர் திரையிடப்பட்ட பல்லக்கிலும் பவனிவந்தனர். நாடான் வீட்டு நங்கையர் தம் இல்லத்து ஆடவர் முன்னன்றி பிறிதொருவர் முன் எக்காரணத்தை முன்னிட்டும் தோன்றமாட்டார். கோயில்கள் கட்டியும் விழாக்கள் எடுத்தும் அனைத்துச் செலவுகளையும் நாடார்கள் ஏற்றுக் கொண்டனர். திருச்செந்தூருக்கு அண்மையிலுள்ள காயமொழி ஆதித்தன் குடும்பம் நாடான் குடிகளுள் தொன்மையும், மேன்மையும் பொருந்தியதாகும். சூரியனிடமிருந்து தோன்றியதாக உரிமை பாராட்டும் அவர்கள் திருச்செந்தூர் சிவன் கோயிலில் சிறப்புரிமைகள் பெற்றிருக்கிறார்கள். திருச்செந்தூர்க் கோயிலின் மிகப் பெரிய மரத்தேரை வழங்கியதால், திருவிழாவில் தேரை இழுக்கும் போது முதன்முதலாக வடக்கயிற்றை தொடும் உரிமை இவர்களுக்கு இருக்கிறது"—நூல் "தமிழ் நாட்டு நாடார்கள்" 4.

மேலும் நாடாரிடையேயுள்ள பழக்கவழக்கங்களிலிருந்து அவர்கள் அரசவம்சத்தினரென நிரூபிக்கலாம். விவாக காலத்தில் கத்தியை மாப்பிள்ளை வைத்திருத்தல், உயர்குல நாடார்களின் பிரேதம் புஷ்பத்தேர்களில் வெண்தாமரை வீச எடுத்துச் செல்லப்படுதல், இரட்டைச் சங்கு ஊதுதல் இறந்தவர்களை பூமியில் அடக்கம் செய்தல், சிங்கக் கொடியையும், புலிக்கொடியையும் தங்கள் சாதிக் கொடிகளாக வைத்திருத்தல், நாடன், நாடான், நாடாள்வான், கிராமணி, தலையன் என்ற பட்டங்கள் அவர்கள் அரசகுலத்தவர்கள் என்பதை நிரூபிக்கின்றது. "பூணூல் தரித்தல்" என்னும் சத்திரிய பழக்கம் உயர்குடும்பத்து நாடாரிடையே காணப்படுகின்றது. ஒட்டிய தேச பிராமணரிடையே சான்றேஸ் (Santos) என்னும் பிராமண வகுப்பார் காணப்படுகின்றனர்.

சத்திரியராகிய நாடார் குலத்தவரை இரு பிரிவுகளாக பிரிக்கலாம். அரசகுலத்தவர் போர்வீரர் என்பன அப்பிரிவுகளாகும். சைத்திரியர் இரண்டாவது அல்லது பட்டாளப் பிரிவைச் சேர்ந்தவர்களாகும். அவர்களுக்குள் அரசர்களும், போர்வீரர்களும் உள்ளடங்குவர். H. போவர்ஸ், அரசகுலத்தவர் நாடான். என்ற பட்டத்துடன் கௌரவமாக வாழ்கின்றனர். போர்வீரரின் சந்ததியினர் பற்பல தொழில்களைச் செய்கின்றனர். அன்று பல வருடகாலமாக புகழ்ச்சியுடன் ஆட்சிசெய்துவந்த சூரிய

குலத்தவர், விஜயநகர மன்னர்களால் 400 வருடங்களாக நசுக்கப்பட்டு, பின்பும் தங்கள் பழமையை நினைத்து மிக உற்சாகத்துடன் முன்னேறி இன்று தமிழ்நாட்டில் உச்சநிலையடைந்துள்ளனர்.

1. "The Sanars have hereditory families of priests in the caste itself known as Aiyar or Aiyar Pandaram" The Travancore State Manual–Nagam Aiya B A, F. R. Hist. S."

2. "The term Karukkamatta is probaly a mistake for Karukku Pattaya meaning Shanars who have served as soldiers." The Travancore State Manual-Nagam Aiya B. A, F. R. Hist, s."

. "After the fall of the Chera dynasty, the descendants of the Chera Kings, the Mel-natars, or the Kuda Nadars as they were called came, into the Pandya country." "Nadars of Tamil Nad" R. L. Hardgrave.-University of Chicago.

The Nadans: With great wealth and power, the Nadans commanded the deference of those beneath them. The climbers, totally

dependent on the Nadans, came before them only with their arms folded across the chest in respect and with their dhotis tied above the knees, as a mark of inferiority. In these regions, the few non Nadars–the Vellala Accountants, or the Brahmin priest would alike show deference to the position of the Nadan lords. The Nadans would buy Pariahs and pallas to work in their houses as slaves, so as to retain their usual proud customs. They rode horses and their women rode in covered palanquins. The Nadan women observed strict gosha, revealing themselves only to the men of their own household. The Nadans built temples and met the costs of ceremonies and festival expenses. The oldest and highest Nadan family was that of the Adityans of Kayamori near Thiruchendur. They claimed descent from Surya, the sun god, and had special rights at the Siva temple in Tiruchendur. The family constructed one of the pavilions of the Temple and met the costs of various ceremonies. They donated the huge wooden car to the temple and in return were given the privilege to be the first to touch the rope which would pull the car through the streets at the time of the festival. Nadars of Tami Nad, R: L.Hardgrave University of Chicago.

# 15. 20-ம் நூற்றுண்டில் தமிழ்நாட்டுக்கு தொண்டாற்றி நாடார் குலத்தவர்

காமராஜர்: இவர் 1903-ல் பிறந்தார் 1921-ல் பொதுமக்களுக்கு சேவை செய்யத்தொடங்கிஞர். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முன்னனியில் நின்ருர். தன்னலமற்ற தியாகி காமராஜர் இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் மூவாயிரம் நாட்கள் சிறைவாசம் அனுபவித்து சுதந்திர வீரராக வெளியே வந்தார். 1925-ல் முதல் முதலாக நிர்வாக சபையில் அங்கத்தவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பன்னீராண்டுகள் தமிழ் நாட்டின் முதல் அமைச்சராக பணியாற்றிஞர். ஜனநாயக வளர்ச்சிக்காக அப்பதவியிலிருந்து தாமாகவே விலகி தேச ஐக்கியத்திற்காக உழைத்தார். நாலண்டுகள் தொடர்ச்சியாக அகில பாரத தேசிய காங்கிரசின் தலைவராக இருந்தார்.

"நேருவிக்குப் பின் யார்?" என்ற விஞ எழுந்த போது வீரத் திருமகன் திரு. லாவ்பகதூர் சாஸ்திரியை வெளிக்காட்டி ஒரு முகமாய் பாரதப் பிரதமராக அமரச் செய்தார். திரு. சாஸ்திரி அவர்களுக்குப்பின் பிரதமராக திருமதி இந்திரா காந்தியை புகுத்திஞர். இன்று சிண்டிகேட் காங்கிரசின் தலைவர்களில் ஒருவராக விளங்குகின்ருர். தமிழ்நாட்டின் பொருளாதார வளச்சிக்கும் தமிழ்நாடு சமஷ்டியில் தனிநாடாக இயங்குவதற்கும் அஸ்திவாரமிட்டவர் காமராஜரேயாகும்.

ஆதித்தனுர்: தமிநாட்டின் திராவிட முன்னேற்ற கழக அமைச்சர்களில் ஒருவராவர். இவர் பார்-அட்-லா படித்தவர். சிங்கப்பூரில் பாரிஸ்டராக கடமை யாற்றி, வெள்ளைக்கார பாரிஸ்டர்களைவிட மிகப் புகழுடன் விளங்கியவர். தனது தொழிலில் ஏராள மான பணத்தைச் சம்பாதித்தார். தமிழ்நாட்டு மக்களுக்கு சேவை செய்வதற்காக தனது தொழிலை விட்டு ஊர் திரும்பினுர். தனித் தமிழ்நாடு வேண்டு மென போரிட்டவர் இவரேயாகும். தமிழர் உரிமை களுக்காக பல போராட்டங்களை நடத்தினுர். இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் மிக உற்சாகமாக இருந் தார். "நாம் தமிழர்" என்னும் புரட்சி இயக்கத் திற்கு தலைமை தாங்கினுர். தந்தி பத்திரிகையின் உரிமையாளராகும். பத்திரிகையில் இலகுவான தமிழை புகுத்தியவர் இவரேயாகும்.

1957 முதல் 1953 வரை அவர் தமிழக மேலவை உறுப்பினராக இருந்தார். 1957 முதல் 1962 வரை சட்டசபை உறுப்பினராக பணியாற்றினுர். 1964-ல் மீண்டும் மேலவையில் பணியைத் தொடர்ந்தார். 1967-ல் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரே தி. மு. க. வின் முதல் சபாநாயகராகும். ஆங்கிலத்திலே கல்வி கற்ற ஆதித்தனுர் தனித்தமிழ் இயக்கத்தை சட்டசபையில் புகுத்தினுர். சட்டசபை யில் தமிழ் மணக்க செய்தவர் இவரேயாகும். பின் அரசியலில் ஈடுபடுவதற்காக தன் சபாநாயகர் பதவியை உதறித் தள்ளிவிட்டு மந்திரிசபையில் சேர்ந்தார்.

சிவஞான இராமணியார் (ம. பொ. சி.)

இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் நடக்கும் தருவாயில் காங்கிரஸ் கட்டியிலுள்ள தலைவர்களில் ஒருவராக இருந்தார். நாடு சுதந்திரம் அடைந்ததும் தமிழ் மக்களின் உரிமைகளைத் தற்காப்பதற்காக தமிழ் அரசு கழகத்தை ஸ்தாபித்தார். அவர் அவ்வியக்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் சட்டசபையில் பலமுறை உறுப்பினராக பணியாற்றினார்.

K. T. கோசல் ராம்: 1933-ல் கள்ளுக்கடைகளுக்கு எதிராக காங்கிரஸ் கட்சியினர் செய்த சத்தியாக்கிரகத்தில் சிறையில் அடைக்கப்பட்டார் 1937-ல் திருச்செந்தூர் தாலுகா காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக நியமிக்கப்பட்டார். 1946-ல் தொடங்கி பலமுறை இவர் சட்டசபையில் அங்கத்தவராக இருந்தார்.

ஊ. பு. அ. சௌந்தர பாண்டியனார்: 1920 முதல் 1931 வரை சட்டசபையில் அங்கம் வகித்தவர். 1928 முதல் 1930 வரை இரமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவராக இருந்தார். 1943 முதல் 1947 வரை மதுரை ஜில்லா போர்டு தலைவராக இருந்தார். மதுரைக்கும் கோடைக்கானல் ரோடு இரயில்வே நிலயத்திற்கும் இடையே இரயில் பாதையை திறந்தார் பாண்டியராஜபுர என்னும் நகரில் திரு பாண்டியர் தோற்றுவித்த மதுரை சீனி ஆலை கம்பீரமாக காட்சியளிக்கின்றது 1953-ம் ஆண்டு மாசிமாதம் 22-ம் திகதி இவ்வுலகை விட்டு மறைந்தார்.

S. T. ஆதித்தன்: காங்கிரஸ் சார்பில் திருச்செந்தூர் தொகுதியிலிருந்து போட்டியின்றி அனுப்பப்பட்டவர்.

ரவி சட்டாம்பிள்ளை ஐயா: 1873-ல் பிறந்தார். இவர் சிறந்த அறிஞராகும். இவர் சமஸ்கிருதம், பாளி, தமிழ், மலையாளம், கன்னடம், ஹிந்துஸ்தானி, அராபிக், ஹிபுரு, கிரேக்க, லத்தீன், பிரெஞ்சு, ஆங்கிலம், ஜெர்மன், மொழிகளை நல்ல முறையில் கற்றிருந்தார். இவர் கிறிஸ்தவ மதத்தில் ஒரு புதிய பிரிவை தமிழ்நாட்டில் ஆரம்பித்தார்.

B J. M. குலசேகரராஜ்: இவர் சட்டாம்பிள்ளை ஐயாவின் புதல்வராகும். இவரே நாடார் குல வரலாறு என்ற சமூக நூலை தனது தந்தையின் ஆராய்ச்சி கட்டுரைகளின் உதவியுடன் எழுதினர்.

ஏரல் சேர்மன் அருணசல சுவாமிகள்: எல்லா சாதியினரும் தெய்வமாக வழங்குகிருர்கள். அவருடைய சமாதியில் கிடைக்கும் மண்ணை மருந்தாக கொண்டு பிரதி அமாவாசை, பூரணை தோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள் தரிசித்து விஷகடி, பயித்தியம், பேய்பிடித்தல் போன்ற நாட்பட்ட நோய்களைக் குணப்படுத்துகின்றனர்.

பகவான் வைகுண்ட சாமிகள்: 1813-ம் ஆண்டு பிறந்தார். இவர் பல வருடகாலம் தவமிருந்து பல அரிய சக்திகளைப் பெற்றிருந்தார். நோயாளிகளைக்

குணப்படுத்துதல், குருடர்களுக்கு கண்பார்வை கொடுத்தல் போன்ற பல புதுமைகளைச் செய்தார். அவர் பல நூல்களை இயற்றினார். அவைகளில் "அகிலம்," "அருள்," "திரு அருள் சீட்டு" என்ற நூல்கள் முக்கியமானவையாகும். அவர் முன் அறிவித்த படியே கொல்லம் வருடம் 1026 வைகாசித் திங்கள் 22-ம் நாள் பூர்ண சந்திரனில் பகல் 12 மணி சமயம் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் வைகுண்ட பதவியடைந்தார்.

வி. சுப்பிரமணிய நாடார்: சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதியரசராக திகழ்ந்தார். இவரே சிதம்பர அண்ணாமலை சர்வகலாசாலையின் உப அத்தியட்சராக இருந்தார். இவர் 1900-1962 மட்டும் வாழ்ந்தார். இவர் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவராகும்.

ஆறுமுகநேரி S. பொன்னையா நாடார்: ஏழாம் எட்வேட் மன்னரும், 5-ம் ஜோர்ஜ் மன்னரும், எட்டாம் எட்வேட் மன்னரும், வேல்ஸ் இளவரசர்களாக இந்தியாவுக்கு விஷயம் செய்த பொழுது இவருக்கு நேரடிப்பேட்டி கொடுத்திருக்கின்றார்கள். பிரித்தானிய மன்னர்களாலும், இராசபிரதிநிதிகளாலும் பாராட்டப்பட்ட அறிவாளி. திருநெல்வேலி ஜில்லா போர்ட்டு மூலம் திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் மட்டும் (38 மைல் நீளம்) இரும்புப் பாதையை அமைத்துக்கொடுத்தவர். இவரைப் பற்றி S. பொன்னையா நாடாரின் ஜீவிய சரித்திரம் என்னும் நூலும், S. பொன்

ஜையா நாடாரின் வாழ்க்கைச் சரித்திரம் என்னும் நூலும் வெளியாகியுள்ளன.

P. துரைச்சாமி: இந்தியாவில் புகழுள்ள வைத்தியர். இருதய நோயில் நிபுணத்துவமுடைய டாக்டராகும். சென்னை வைத்தியக் கல்லூரியில் பேராசிரியராகவும் கடமையாற்றினுர்.

S. கணேசன்: திருச்சினுப்பள்ளி சென் யோசப்ஸ் கல்லூரியின் எம் ஏ. பட்டதாரியாகும் லண்டனில் பொருளாதார அறிவை லஸ்கியின் கீழ் பெற்ருர் 1956-ல் நீதிபரிபாலன சேவையில்சேர்ந்தார். சிவில் கோட்டில் பிரதம நீதியரசராக கடைமையாற்றினுர்.

V. S. K. துரைச்சாமி நாடார்: அண்ணுமலை பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர். வருமான வரி கலெக்டராக கடமை பார்த்தவர்.

மகாகனம் அசரியா பிஷப் அவர்கள்: (The Rt Rev Bishop V. S. Azariah). இந்தியாவிலும் இலங்கையிலும் முதலாவதாக நியமிக்கப்பட்ட சுதேச பிஷப்பாகும்.

கனம் டி. திரவிய நாடார்: திருச்சினுப்பள்ளி டிப்யூடி கலெக்டராக இருந்தவர்.

டாக்டர் பாப் ஐயரவர்கள் M. A.

Rev S. ஞானமுத்து ஐயரவர்கள் M. A F. M. U.

திருச்சிருப்பள்ளி எஸ். பி. ஜி. காலேஜில் ஆங்கில பைலாஜி புரோபஸராக கடமையாற்றியவர்.

கனம் ராய் பஹதூர் ஜே ஜி சாலமன் நாடாரவர்கள் B. A. B E. உதவி செஷன்ஸ் ஜட்ஜ் உத்தியோகம்.

Rev அம்புரோஸ் தமாஸ் ஐயரவர்கள் B. A.

தமிழ், இங்கிலிஷ், கிரேக்க, லத்தீன், எபிரேயு, அரபு, இந்துஸ்தானி, சமஸ்கிருதம், சிங்களம் முதலிய பாஷைகளில் விசேஷ பயிற்சியுடையவர்.

ஜோசப் ஸத்ய நாடார்: M. A. M. L.

யூனிவேர்சிட்டி பெல்லோ, காப்போரேஷன் கமிஷனர் முதலிய கவுரவ உத்தியோகங்களையும், இந்திய கிறிஸ்தவ சங்கத்தின் பிரஸிடென்று ஸ்தானத்தயும், மகிமை ஸ்தானத்தையும் வகித்தவர்.

Rev ஜோசப் ஞான ஒளிவு ஐயரவர்கள்:

மத்ராஸ்-வேப்பேரியில் S. P. G. சூப்பரின்றென்டிங் மிஷனரியாக இருந்தார்.

Rev S Y. ஆபிரிகாம் ஐயரவர்கள் B. A.

மதராஸ் எஸ். பி. ஜி. தியாலஜிகல் கலேஜில் வைஸ் பிரின்சிப்பல்.

கனம் ராய் ஸாஹிப் எஸ். கோவில்பிள்ளை நாடார் B. A. B. E. D. P. W. எக்ஸ்கியுட்டிங் என்சினியர்.

நவமணி டேவிட் நாடார்: முதலாவது டிப்டி கலெக்டர்

ஜே எஸ் டேவிட் நாடார்: (I. M. S.)

மெஸொபத்தோமியா: போர்களத்தில் காப்டன் பதவியை வகிர்த்தவர்.

Rev கனோன் C. P. ஞானக்கன் ஐயரவர்கள் B. A.
முதலாவதாக "Canon" கனோன் பட்டம் பெற்ற சுதேச கிறிஸ்தவ நாடார் குலத்தவர்.

கனம் டி. திரவிய நாடார் B. A.
திருச்சினாப்பள்ளி டிப்டி கலெக்டர்.

ராவு ஸாஹிப் M. ஆபிரிகாம் பண்டதர்.

ராவு ஸாஹிப் கனம் எஸ். கோபாலபிள்ளை B. A. B. L.
எக்ஸ்கியுட்டிங் என்ஜினியர்.

மாணிக்க வாச நாடார்:
அசிஸ்டென்று சுப்பரின்றெண்டன்

ராவு பஹதூர் பொன்னையா நாடார்:
மதராஸ் ரெவென்யு செக்கறியற்றில் றிஜிஸ்தார்.

ராய் பஹதூர் ஜி ஜே. சாலோமோன் நாடார் B.A.A.L.
திரு. மோசஸ்: சென்னை நகரபிதாவாக கடமையாற்றியவர்.
திரு. வெ. கனகசபைநாடார்: நாடார்குலத்தவரின் சங்கத்தில் பலகாலம் தலைவராக இருந்துவந்தவர்
திரு சாருகேசி B. E. சேலம் என்சினியரிங் கல்லூரிப் பொறியியல் விரிவுரையாளர்.

டாக்டர் P. சரஸ்வதி M.B.B.S, D.G.O, M.R.G.O.C. (Lon).

இராவ் பகதூர் த. இரத்தினசாமி நாடார்: மகாஜன சங்கத்தை ஸ்தாபித்தவர். இச்சங்கம் 62 ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டது.

டாக்டர் N. நாகராஜன் B. E. Hons. M S. Ph D. அமெரிக்காவில் மேரிலாண்ட் பல்கலைக் கழகத்தில் கணித இயந்திரப் பொறியியற்றுறைப் பேராசிரியராக பணியாற்றியவர்.

திரு. T. M. M. T. பாலசுப்பிரமணியம் B.Sc. B. E. M. S. (U. S. A.) அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள என்ஜினியரிங் நிறுவனம் ஒன்றில் எலெக்ட்ரானிக் டிசைனிங் என்ஜினியராக கடமையாற்றுகின்றார்.

டாக்டர் எட்வேர்டு பால் மதுரம்: டாக்டர் இ பி. மதுரம் 14-7-1904-ல் திருநெல்வேலியில் பிறந்தார். இவர் தந்தை டாக்டர் அய்யாத்துரை மதுரம் ஆகும். இவர் ராயபுரம் அரசாங்க வைத்திய கல்லூரியில் படித்து எல். எம். பி. பட்டம் பெற்றவர். 1947 முதல் 1952 வரையிலும், 1955 முதல் 1959 வரையிலும் திருச்சி நகரச்சபைத் தலைவராக பணியாற்றினார். 1952 முதல் 1957 வரையும் புதுடெல்லி பாராளுமன்ற உறுப்பினராகவும், 1957 முதல் 1962 வரை தமிழ் நாடு சட்ட மன்ற உறுப்பினராகவும் இருந்தார். இவர் நிர்வகித்து வந்த குரு மருந்துச்சாலை

யில் தயாரிக்கப்பெறும் "குரு தைலம்' குருபல் பொடி மற்றும் மருந்துகளும் தமிழ் நாட்டிலும், வெளி நாட்டிலும், புகழ்பெற்று விளங்குகின்றன.

டாக்டர். பி. வடமலையான் M. B. B. S.

பேராசிரியர்: அ. கேசவமூர்த்தி M. A. அமெரிக்கா சிக்காகோ பல்கலைக் கழக சிறப்பு பட்டதாரியாகிய ராபார்ட் எல் ஹார்டுகிரேப் எழுதிய தமிழ்நாட்டு நாடார்கள் (The Nadars of Tamil Nad) என்னும் நூலை "மகாஜனம்" பத்திரிகையில் மொழி பெயர்த்தவர்.

இராலிங்க குருக்கள், V. A. குமாரய்யா நாடார்: நாடார் மன்னர்களும், நாயக்க மன்னர்களும் என்னும் நூலை எழுதியுள்ளார்கள்.

த. விஜயதுரைச்சாமி கிராமணி: "நாடார் என்னுஞ் சொல் ஆராய்ச்சி" "நமது குலத்தொழில்" போன்ற பல சமூக நூல்களை எழுதியுள்ளார்.

திரு. தர்மராஜ் சந்தோஷம் M. A. B. L. M. L.C.

திரு S. G. J ஜெயசிங் B. Com-பஸ்போக்குவரத்து வேளாண்மைத் தொழிலபதிர்-கோடைக்கானல்.

திரு. W. P. A. S. பாஸ்கரன் B. A.—தோட்டத்தொழிலதிபர்—பட்டிவீரன்பட்டி.

திருமதி மீரா வைர பிரகாசம் B. A. D. S. S.

திரு தாமஸ் சார்ச்சில் ஜெயகுமார்
B Sc, B E. A M I. E.

டாக்டர் T. திருஞானம். M. B. B. S.

இராவ்சாகிப் திரு. பெ. சி. சிதம்பர நாடார்: நாடார் மஹாஜன சங்கத்தின் முன்னேற்றத்திற்காக அயராமல் உழைத்த பெரியார்.

திருமதி சத்திப் பெருமாள் M. A. தமிழ் மொழியில் சிறந்த முறையில் ஆராய்ச்சி செய்துள்ளமைக்காக மதுரை பாத்திமாக் கல்லூரித் தமிழ்த் துணைத் தலைமைப் பேராசிரியை திருமதி சத்திப்பெருமாள் எம். ஏ. அவர்களுக்கு இந்திய பேரரசின் பாராட்டுப் பரிசு கிடைத்துள்ளது.

பொன்னப்ப நாடார்: இன்றைய தமிழ்நாட்டு மக்கள் பேரவையில் எதிர் கட்சி தலைவராவார்.

---

"இன்னும் பல அறிஞர்களின் பெயர்களை விட்டு விட்டமைக்கு மன்னிப்பு கோருகின்றேன். விபரங்கள் தந்துதவினால் எமது அடுத்த வெளியீட்டில் சேர்த்துக்கொள்ளப்படும்."

# நாடார் குலத்தவரின் சுருக்க வரலாறு

வட இந்தியாவிலிருந்து மொகஞ்சதாரோ, ஹரப்பா என்னும் நகரங்களிலிருந்தும் தெற்கே குடியெழும்பி வந்த யுத்தம் செய்யும் இனத்தவராகும். வட மதுரையில் ஆதியில் பலமுள்ள அரசை ஸ்தாபித்திருந்தனர். மௌரியர், சாதவாகனர், கதம்ப குலத்தவர், சிங்கள மன்னர் (மௌரியர்,) தென்கன்னடத்தை அரசு செய்த சான்றுர வம்சம், சேர, சோழ பாண்டியர் நாடார் குலத்தவரேயாகும். இவர்கள் சூரியகுலத்தவராகும்.

மௌரியர்—"SANDRO KOTTAS"– சான்றேன் கோட்டை.

சாதவாகனர்—"SANDRO VAHANA" சான்றேன் [வாகனம்

"சூரியனை சின்னமாயுடைய வாகனத்தை செலுத்துபவர்கள்."

கதம்ப குலத்தவர்-வட கன்னடப்பகுதியையும், கோதாவரி-கிருஷ்ணு நதிக்குமிடைப்பட்ட பகுதியையும் அரசு செய்தவர்கள். கொடி-சிங்கம்

சான்றுர வம்சர்: தென் கன்னடத்தை அரசு செய்தவர்கள். கொடி-சிங்கம்

சோழ மன்னர்: சங்க கால சோழ மன்னர்களும் கி. பி. 850-ல் தொடங்கிய விஜயாலயன் சந்ததியினரும், 1070-ல் கீழைச்சாளுக்கியர் கலப்பு ஏற்படும் மட்டும் சுத்தமான சான்றூர்களாகும்.

பாண்டியர்: 1070-க்குப் பின் சூரியகுல பாண்டியர்களாகிய இராசராசனின் மகனாகிய "சாடவர்மன் சுந்தர சோழ பாண்டியரின்" சந்ததியினரும் திருநெல்வேலி பகுதியில் பலமுள்ள அரசை ஸ்தாபித்தனர். இவர்கள் மதுரையிலுள்ள சந்திரகுலத்தவரை அடக்கி, சோழரை அடிபணியச் செய்து பலமுள்ள பாண்டிய சாம்ராச்சியத்தை அமைத்தனர். "சாடாவர்மன்" என்னும் குடும்பப் பெயருடனே இவர்கள் ஆட்சிசெய்கின்றனர். 1070க்குப் பின்னேயே பாண்டியர் கன்னடத்தை அரசு செய்த சான்றூர்களுடன் விவாகத் தொடர்பு வைக்கின்றனர்

சேரர்: கி. பி. 8-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஆட்சி செய்த சேரமான் பெருமாள் காலம் மட்டும் அரசு செய்தவர்கள் சான்றூர்களாகும்.

சிங்கள மன்னர்: மௌரிய குலத்தவர். இலம்பகர்ண வம்சத்தவர் நாகவம்சத்தைச் சேர்ந்தவர்கள். சான்றூர்களாகிய மௌரிய குலத்தவர் ஆட்சி செய்த காலம்—கி. மு. 350-க்கு கிட்டத்தட்ட இந்த அரசவம்சம் இலங்கையைக் கைப்பற்றியிருக்க வேண்டும். இக்குலத்தில் ஆருவது மன்னனாகிய தேவநம்பியதீசன் கி. பி. 247-ல் ஆட்சிசெய்கின்றான்.

கி. பி. 460-ல் சுப்பன் என்னும் அடிமை ஆட்சியைக் கைப்பற்றுகின்றான். அதன் பின் இலம்பகாறு வம்சத்தவர் சுப்பனை தோற்கடித்து அரசைக் கைப்பற்றுகின்றனர். கி பி. 460-ல் தமிழர்கள் இலங்கையை ஆட்சி செய்துகொண்டிருக்கும் பொழுது, திரும்ப மௌரியர் தாதுசேனன் கீழ் அரசைக் கைப்பற்றுகிறார்கள். கி. பி. 522-ல் சிவா என்னும் மன்னன் ஆட்சியில் திரும்ப இலம்பகாறு குலத்தவர் ஆட்சியைக் கைப்பற்றினர். கி. பி. 565-ல் மௌரிய குலத்தவனாகிய மகாநாகன் அரசைக் கைப்பற்றுகின்றான். இரண்டாம் சங்கதீசன் (611) காலத்தில் இலம்பாகறு வம்சத்தவர் நிரந்தரமாக ஆட்சியைக் கைப்பற்றி விடுகின்றனர். அதன்பின் சான்றார் அமைச்சர்களாகவும், சேனாதிபதிகளாகவும் மட்டுமே இருந்தனர்.— கொடி: சிங்கம். இவர்களில் ஈழ நாகா (கி. பி. 36) அல்லது 'எலுனு' (Elunna) குலப் பெயராலே அழைக்கப்படுவதைக் கவனிக்கவும்—ஈழ—ஈழவன். எலு—கன்னு வட மதுரை: கல்வெட்டில் சான்றார்களின் முதல் மன்னனாகிய ஜினதத்தன் வட மதுரையிலிருந்து வந்ததென குறிக்கப்பட்டிருப்பது வட இந்தியாவின் யமுனா நதிக்கு அருகாமையிலுள்ள மதுரையாகும். சான்றார்கள் வட இந்தியாவிலிருந்து வந்த திராவிட இனத்தவர்களாகும். அவர்கள் தெற்கே குடியெழும்பி வந்த சமயத்தில் வட இந்தியாவில் எஞ்சியிருந்தவர்கள் சாண்டாழ் (SANTAL) என்னும் பெயருடன் அழைக்கப்படுகின்றார்கள். அவர்களது உடலமைப்பு ஆந்திர, கன்னட சிங்கள மக்களைப் போன்றே காணப்படுகின்றது. குணாதிசயங்களும் அப்படியே அமைந்துள்ளது. சான்றார் என்பதே இவர்களது இனத்தின் சரியான பெயராகும் நாடன்,

நாடான், நாடாழ்வான், என்னும் பட்டப்பெயர்கள், சான்றார்களின் அரசகுலத்தவரின் சந்ததியினருக்கு மட்டுமே உரித்தானதாகும் "சாணார்" கதம்பகுலத்தவர், சிங்கள அரசர் ஈழவரின் பட்டபெயராகும். தற்பொழுது நாடார் என்னும் தங்களது பட்டத்தாலே இக்குல மக்கள் அழைக்கப்படுகின்றார்கள், ஈழவர், ஈடிகர், துராவ (சிங்கள) கதம்ப குலத்தவருடன் தொடர்புள்ள மக்களாகும்.

கன்னடத்தில் சான்றார் ஆட்சி சங்ககாலத்திலும் சோழர் காலத்திலும், கி. பி. 850-ல் எழுச்சியடைந்த பிற்கால சோழர் காலத்திலும் பிற்கால பாண்டியர் காலத்திலும் மிக உன்னத நிலையடைந்திருந்தது. மற்றைய காலங்களில் கதம்ப குலத்தவர், பல்லவர், சாளுக்கியர், சாதவாகனர், பாண்டியர் கீழ் சிற்றரசர்களாக இருந்தனர் 12-ம் நூற்றாண்டில் ஹொய்சலர் இவர்களை முற்றாக கன்னடத்திலிருந்து வெளியேற்றுகின்றனர். ஆனால் 13-ம் நூற்றாண்டில் திரும்ப சான்றார்கள் கன்னடத்தில் ஆதிக்கத்தைப் பெற்றுக்கொண்டனர்.

கி. பி. 1070-க்குப்பின் கீழைச் சாளுக்கியனான முதலாம் குலோத்துங்கன் எழுச்சியடைந்ததும், சான்றார் திருநெல்வேலியை ஆட்சிசெய்த சூரியகுல பாண்டியர்களாகிய இராசராசனின் மகனாகிய சடாவர்மன் சுந்தர சோழ பாண்டியனின் சந்ததியினரை ஆதரித்தனர். கன்னடத்தில் சான்றார்களுக்கும் சாளுக்கியருக்கும் இருந்த பகையே முக்கிய கார

ணமாகும். சாளுக்கியர் தென் கன்னடத்தை பிடிக்க முயற்சி செய்தவர்கள், அதனால் பல போராட்டங்களிலும் வைரம் வளர்ந்திருந்தது. சோழ அரண்மனையில் தங்கள் குலச்செல்வாக்கை இழந்த ஆதித்தன் குடும்பத்தினரும், நாடாள்வார்களும் சூரியகுல பாண்டியரை ஆதரித்தனர். கன்னடத்தை ஆட்சி செய்த சான்றுரர்களுக்கும், சூரியகுல பாண்டியருக்கும் தொடர்புகள் அதிகரித்தன 1070-க்குப்பின் சோழரை கீழைச்சாளுக்கியரும், ஹொய்சலரும் ஆதரித்தனர். இதற்குப்பின் சோழர் வன்னியருக்கு அதிகமான பதவிகளைக் கொடுப்பதைக் காணலாம். நாடாழ்வார்களையும்; வேளிரையும் சந்தேகித்த சோழர், வன்னியரை உயர்த்தத் தொடங்கினர். "1070-ம் ஆண்டு சோழ நாட்டில் பாண்டியரின் எழுச்சிக்கு அஸ்திவாரமிடப்பட்டுவிட்டது சூரியகுலத்தவர். சோழநாட்டை மறந்து, பாண்டி நாட்டில் திருநெல்வேலியில் தங்களது எழுச்சியைக் காண ஒன்றுபட்டனர். "சூரியகுல பாண்டியர்-தென் கன்னட சான்றுரர வம்ச விவாகத் [தொடர்புகள், சூரியகுல பாண்டியர், சந்திரகுல பாண்டியர் போர், சான்றுரர் கன்னடத்தை இழத்தல், இலங்கை மன்னன் முதலாம் பராக்கிரமபாகு, பாண்டியர் உள்நாட்டுப் போரில் கலந்து கொண்டமை முக்கிய அம்சங்களாகும்

ஹொய்சலர் சோழரின் ஆதரவுடன் கன்னடத்தில் சான்றுரர்களை மங்கச் செய்தனர். 12ம் நூற்றுண்டில் கன்னடத்தில் ஹொய்சலர் சான்றுரர்களை

விரட்டி தென் கன்னடத்தை ஆட்சிசெய்தனர் கன்னடத்தில் சான்றார வம்சத்து ஜெகதேவா ஹொய்சலரால் தோற்கடிக்கப்பட்டான் அவன் கன்னடத்தை விட்டு 'பாண்டிய நாட்டிலுள்ள "சேது" என்னும் பகுதியை ஆட்சிசெய்தான்.

"Jegadeva appears in A. D. 1149-50 as governing form setu which Rice has located in Kanara obviously after the disaster which he suffered at Dorasamudra in A. D. 1104 when his attack on the Hoysala capital has failed, and his treasury together with the central ornament of his necklace had fallen into the Hoysala hands, he had moved down to Tuluwa where he he secured tha alliance of the Alupa ruler Bhujapala Kavi Alupendra and establish a principality at Setu.

Anuient Karnataka Vol I Bhasker Anand Saletore M. A. Ph D.-Professor of History Sri Parashurambhau College, Poona-Poona. Oriental Book agency-1936

கலாநிதி ரைஸ் அவர்கள் சேது இராஜதானியம் கன்னடத்தில் இருப்பதாக பிழையாகக் கூறிவிட்டார் அது பாண்டியநாட்டில் இருந்தது. பாண்டியர்-சான்றார் ஒரே இனத்தவரும், விவாகத்தொடர்பு இருந்ததும் குறிப்பிடத் தக்கது. ஜெகதேவா தனது சகோதரியாகிய அலியாதேவியை கங்கை அரசனுக்கு

விவாகம் செய்து கொடுத்தான். ஜெகதேவாவுக்கு சந்ததியில்லாததால், கங்கை குலத்தவர் சேதுபதியை ஆட்சி செய்தனர். கங்கை மன்னரில் ஜெயகேசி (1140) சாண்டாய தேவன் (1189) என்னும் இரு குமாரர்கள் கன்னடப் பகுதியை ஆட்சிசெய்தனர். கி. பி. 1190-ல் சடாவர்மன் குலசேகரன் ஆட்சியுடன் பாண்டியரின் மறுமலர்ச்சி காலம் ஆரம்பித்தது. சேதுபதியில் ஆட்சி செய்த கங்கை குலத்தவனான மாகன் இலங்கை மேல் படையெடுத்து (1213) முழு இலங்கையையும் ஆட்சிசெய்து பின் யாழ்ப்பாணத்தில் சிங்கை நகரை (சிங்க கொடியுடையோர் நகரம்) தலைநகராக்கி அரசாண்டான். இந்த கங்க வம்சத்தவர்களுக்கு "கங்கை நாடன்' என்னும் சூரிய குலத்தவர்களின் பட்டம் இருப்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தை அரசுசெய்த கங்கை குலத்தவர் சான்றோர்களை முள்ளியவளையிலும், பனங்காமத்திலும் சிற்றரசர்களாக நியமித்தனர்.

கன்னடத்தில் சான்றோர வம்சத்தினர் 1216க்குப் பின் திரும்ப எழுச்சியடைந்தனர் ஹொய்சலர் கன்னடத்தில் அடக்கப்பட்டனர். 14-ம் நூற்றாண்டின் முதல் பகுதியில் சான்றோர் முழு கன்னடத்தையும் ஆட்சி செய்தனர். கார்காளத்தில் இக்கல்வெட்டு காணப்படுகின்றது. (Hiriyangadi-Karkala. திகதி 28-2-1335). ஸ்ரீமத் பொம்மி தேவராசா (Bommi Devarasa) என்னும் பாண்டிய குல சான்றோர சக்கரவர்த்தி கன்னடத்தை அரசுசெய்தான். விஜயநகர அரசர் எழுச்சியடைந்ததும் இவர்கள் உடையார்களாக இப்

பகுதியை நிர்வாகம் செய்தனர். 1529-க்குப்பின் விஜயநகர அரசர் வீழ்ச்சியடைந்தும் மைசூரில் சான்றோர வம்சத்தவர்களாகிய உடையார் குடும்பத்தினர் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டனர். கல்வெட்டு காணப்படும் இடம்—(Hiriyangadi, Kar-Kala காலம் 1556-57.—Ep Report for 1926-7 pp 108-9)

சாதவாகனர், மௌரியர், கதம்பகுலத்தவர், சிங்களவர் (ஈஸ்வாகூஸ்-ஈழவர்-கதம்ப குலத்தவர்) சான்றோர் என்பதை பின்வரும் நூல் ஆசிரியர் கூறுகின்றார்.

நூல்: Buddhist Remains in Andhra and History of Andhra between 225-610 A D
K R. Subramanian M A.-Printed Diocesan Press. Vepery Madras 1932

ஈஸ்வாகூஸ், சாதவாகனர், சான்றோர் ஒரே இனத்தவராகும்.

பக்கம்: 61- The Ikshvakus were probably expanded South on the decline of the Satavahanas and were till then subordinate to them The surname of the Ikshvakus and the name Chantamula bear a resemblance of those of the Satavahanas also called, Santa or Santi-Vahanas or merely "Sata"

இஸ்வாகூஸ் "ஈழும்" எனப்பட்ட பகுதியாகிய கிருஷ்ணு பள்ளத்தாக்கை சுற்றி ஆட்சிசெய்தனர். கிருஷ்ணான் வட மதுரை மக்களின் பிரதான தெய்வம்
பக்கம் 61- Ikshvakus (225-340 A D) After Satavahanas ruled the Krishna Valley

சோழ, கங்கை குலத்தவர் ஈழத்தை அரசு செய்த இஸ்வாகூஸ் அரசகுலத்தவரின் சந்ததியினர்.
பக்கம் 61- The Cholas and the Gangas claimed descent from them. (Ikshvakus.)

கதம்ப குலத்தவரின் முதல் மன்னனுன ஹரிதாஸ் இஸ்வாகூஸ் குலத்தவனுரும்.
பக்கம் 82- The Kadambas were Harisputras and perhaps descended from Angiras, Angirasa Haritas being of the Ikshvaku linage. Bombay Gaz Vol-i, pt ii p 287 F.N 4.

இஸ்வாகூஸ் இளவரசி வனவாசியை அரசு செய்த கதம்ப குலத்து அரசனை விவாகம் செய்த தாக நாககுனி கொண்ட கல்வெட்டு கூறுகின்றது.

பக்கம் 82- An Ikshvaku princess is said by a Nagarjunakonda Inscription to have married the King of Vanavasi the capital of later Kadambas. above all one fact is clear that the Ikshvakus were the most famous family of Aandradesa, north of Krishna in the Third century A. D.

ஈஸ்வாகூஸ் சாதவாகன சாம்ராச்சியத்தில்புத்த மதத்தைச் சார்ந்த அரசகுமாரர்களாகும் (அரசு செய்த பகுதி: கிருஷ்ணா-கோதாவரி நதிக்கு இடைப் பட்ட பகுதியாகிய ஈழம். கொடி-சிங்கம். எலு மொழியை பேசினர்)

பக்கம் 82: The only dynasty that we know of in the Sri Saila Pranta in the post-Satavahana period is the Ikshvaku. The only dynasty that resembles the Satavahanas in name and Surname (Santas) and is of the Aandra country is the Ikshvaku. The Ikshvakus were great patrons of Buddhist art and letters and this cannot be said of any other Satavahana feudatory.

Vijayapuri capital of Chantamula-East of Sri Parvata (Nagarjunikonda) is mentioned is an inscription and there are remains of civil buildings there.

ஈஸ்வாகூஸ், சாதவாகனர் ஒரே இனத்தவராகும்

பக்கம் 84: So close seems to have been the affinity between the Ikshvakus and the Satavahanas and identical as are the Parvata of the Parvatiya Andras and the Parvata of the the Ikshvaku inscriptions, as also the periods of their rule that the suggestion is irresistible that perhaps the puranic Saila Andbras were

the same as the Ikshvakus who undoubtedly ruled over the regions round Nagarjunakonda and Jaggayapeta in the second quarter of the third Century A. D.

1. Maharaja Vasishtriputra Sri Chantamula
2. Son Madhariputra Sri Vira Purushadatta.

(Jeggayapetta inscriptions)

கிறிஸ்துவுக்கு முன் பலநூற்றுண்டுகளுக்குமுன் இந்த ஈஸ்வாகூஸ் குலத்தினர் "ஈழம்" என்னும் பகுதியை அரசு செய்தனர். (ஈழம் என்னும் பகுதியிலிருந்து இலங்கைக்கு படையெடுத்து வந்தநால் "ஈழவர் எனப்பட்டனர். தாங்கள் கைப்பற்றிய இடத்துக்கு ஈழம் என பெயரிட்டனர். தங்கள் கொடியாகிய சிங்கக்கொடியை ஈழத்தின் கொடியாக்கினர். இன்றைய ஆந்திர மொழிக்கும், சிங்களத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு.

பக்கம் 81: The recent discovery of valuable epigraphs at Nagarjunakonda has given the...... direct to the tradition that Ikshvaku rule became extinct in centuries before Christ.

கதம்ப குலத்தவரின் கொடி சிங்கம் அவர்களது காசில் "சாணு" என்னும் பட்டம் எழுதப்பட்டிருந்தது.

நூல்; Kadamba Kula–George M. Moraes: Bombay–1931

பக்கம்: 377. The dynastic Symbol of the Kadambas was the lion. (படம் 374, 375)

படம், பக்கம்: 384.

"Charna-devashashtha-Sovadeva"
Found in the Kadamba coin.

சிங்கள அரசர்களினதும், கதம்ப குலத்தவரினதும், ஒருமைப்பாடு:

1. சாணு காசுகள் சாணு பட்டயங்கள் காணப்பட்டன.

2. புத்த சமயத்தவர்—ஈஸ்வாக்கூஸ் எனப்படும் அரசகுலத்தவர் புத்த சமயத்தவர்.

3. சிங்கக் கொடி

4. ஈழம், ஈழவர் என்ற பெயர்கள்.

5. எலு மொழி சிங்கள, ஆந்திர மொழிகளுடன் நெருங்கி தொடர்புடையனவாக காணப்படுகின்றது.

கதம்ப குலத்தவனான சாண்டாயதேவனின் ஆட்சி.

பக்கம்: 108. A viragal dated in 1075 and found in the Banavasi Twelve Thousand province informs us that the Kadamba Santaya deva sent the whole army under twelve nayaks obviously for the purpose of ravaging.

இராஷ்டிர கூடர்: இவர்கள் துங்கபத்ரா நதிக்கு வடமேல் பகுதியை ஆட்சிசெய்தனர் இவர்கள் இராஜபுத்திரருடன் தொடர்புள்ள ஆரிய மன்னர். இவர்கள் பெரிய தோற்றமுடையவர்களானபடியால் இராட்சத கூட்டத்தினர் என திராவிடரால் அழைக்பட்டனர்.

இந்தப் பகுதியின் முதல் மன்னன் கதம்பகுலத்தவனாகும்.

நூல் "Deccan A Sadashiv"

Krishna I had also brought under his sway southern Konkan. From the Kharepatan plates of Rattaraja, we learn the Sanapulla (சாணுபிள்ளை) the founder of the line, had obtained the teritories between thc Sahya and the sea through the favour of Khirisharasa we find that Sanapulla had to be placed in the latter half of the eight century.

அதனால் இராஷ்டிரகூடர் "சாணன் புத்திரன்" என்னும் கதம் பகுலத்தவனையே தங்கள் முதல் மன்னனாக வைத்து, இப்பகுதியில் குடியேறியுள்ளனர். "சாணன்" என்னும் சொல்லின் விளக்கம் இராஜதந்திரமுடையோர் என்பதாகும். சிங்கள அரசர் மத்தியில் காணப்படும் "சாணு" பட்டயம், சாணுகாசுகள் கதம்ப குலத்தவர் மத்தியில் காணப்படும் சாணு பட்டம், ஈழவர் மத்தியில் காணப்படும் சாணன் என்னும் மிகக் கௌரவமான பட்டம் கூறும் விளக்கத்தையும், தொடர்பையும் அறிவதில், திராவிடர்களாகிய நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.

# ERRATA

பக்கம் 5 - ஏழுதப்—எழுதப்
பக்கம் 14- ருநெல்வேலி—திருநெல்வேலி
பக்கம் 18- சந்திரன் என்னும் அரசவம்சத்தைச்—
சந்திர வம்சத்தைச்
பக்கம் 19- அவர்களுக்கும்—அவர்களும்
பக்கம் 35- சான்றுர—சான்றுர
பக்கம் 36- செய்தான்—செய்தனர்
பக்கம் 42- grouud—ground.
பக்கம் 42- Mangauru—Mangaluru
பக்கம் 43- marrage—marriage
பக்கம் 43- Vir Santara—Vira Santara
பக்கம் 45- head—had
பக்கம் 50- சான்றுடிம்—சான்றுகும்
பக்கம் 59- சாடவர்மன்—சடாவர்மன்
பக்கம் 65- சோழன் குலசேகரனை அடிபணியச் செய்து பராக்கிரம பாண்டியன் மகன் வீரபாண்டியனை பாண்டிய அரசனுக்கினுன் காலப்போக்கில் வீரபாண்டியனும் சோழ அரசனுக்கு மாருக சிங்கள அரசனின் உதவியை வேண்டி நின்றுன். 1188-ல் சிங்கள மன்னனுகிய நிசங்க மல்லன் வீரபாண்டியனுக்கு தேவையான உதவிகளைக் கொடுத்தான். சோழர் வீரபாண்டியனை தோற்கடித்து விக்கிரம பாண்டியனை அரசனுக்கினர்.
பக்கம் 68- குரியகுலத்தவர்—சூரியகுலத்தவர்
பக்கம் 68- நடார்—நாடார்
பக்கம் 71- மயங்கி—மங்கி
பக்கம் 74- சேதர்மன்—சேதவர்மன்
பக்கம் 74- அரசாண்டனர்—அரசாண்டான்

பக்கம் 75- வெட்றிம் பெருமாள் — வெட்டும்-
பெருமாள்

பக்கம் 76- வாந்து — வாழ்ந்து

பக்கம் 77- நீத்தியப்ப நாடன் — தீத்தியப்ப நாடன்

பக்கம் 79- சமுதி — கமுதி

பக்கம் 80- முஸ்ஸிலிம்கள் — முஸ்லிம்கள்

பக்கம் 81- கயாமொழி — காயாமொழி

பக்கம் 83- உதவிசெய்திருப்பார் — உதவி-
செய்திருப்பர்

பக்கம் 83- நம்முடைய — தம்முடைய

பக்கம் 84- சென்ஸ் — சென்சஸ்

பக்கம் 84- சார்னிஸ் — கார்னிஷ்

பக்கம் 85- பட்டங்கள் — பட்டங்களை

பக்கம் 87- தம்பூதிரி — நம்பூதிரி

பக்கம் 90- மூலாறு — மூவாறு

பக்கம் 94- கலிங்க — கங்க

பக்கம் 97- வராதன்கள் — வராகன்கள்

பக்கம் 103- வந்நாறுமூலை — வந்தாறுமூலை.

பக்கம் 104- museun — museum.

பக்கம் 106- பொருமாளாகிய — பெருமாளாகிய

பக்கம் 107- வேளாருக்கும் — வேளாளருக்கும்

பக்கம் 115- சிங்களா — சிங்க

பக்கம் 122- யாழ்ப்பாணத்திலுள்ளவர்களும்-
யாழ்ப்பாணத்திலுள்ளவர்

பக்கம் 123- கட்டுனயில் — கட்டுரையில்

பக்கம் 124- பொருமாள் — பெருமாள்

பக்கம் 125- சாணுன் காசு குறிப்பிடப்பட்டது-
சாணுன் காசு என குறிப்பிடப்பட்டது

பக்கம் 130 Pagee — Page

பக்கம் 130- Shalese Sinhalese.

பக்கம் 134- பிற்கால பாண்டியருக்கும்-
பிற்கால பாண்டியரும்

பக்கம் 135- கொடுக்கப்பட்டனர்—கொடுக்கப்-
பட்டன

பக்கம் 136- தாக்கப்பட்டதால்—தாக்கப்படாததால்

பக்கம் 136- சுதந்திரமடைந்தது-சுதந்திரமடைந்து

பக்கம் 137- மத்தியி—மத்தியில்

பக்கம் 140- அனியான்—அணியான்

பக்கம் 146- தாக்கியிருப்பார்—தாக்கியிருப்பர்

பக்கம் 150- இந்தி—இந்திய

பக்கம் 151- சொந்தக்காரராகும்—சொந்தக்காரரா
கவும்

பக்கம் 156- Kshatriyal—Kshatria

பக்கம் 156- Agricultura—Agricultural

பக்கம் 157- introdnction—introduction

பக்கம் 157- menas—means

பக்கம் 162- அதனுல் சான்ருர் என்ற பதமும் ஒரே விணக்கத்தையே குறிப்பிடுகின்றது—அதனுல் "சான்ருர்" என்ற சொல் சூரியகுலத்தவனைக் குறிக்கும்.

பக்கம் 165- தழிழர்—தமிழர்

,, 166- jmmemorial—immemorial

,, 167- ஈராவ்—ஈரால்

,, 167- சென்னை வீர ஐயர்—சென்ன வீர ஐயர்

,, 172- காயமொழி—காயாமொழி

,, 176- தொண்டாற்றி—தொண்டாற்றிய

,, 177- தமிநாட்டின்—தமிழ்நாட்டின்

,, 177- இலரேயாகும்—இவரேயாகும்

,, 177- 1957 முதல் 1953 வரை
1947 முதல் 1953 வரை

பக்கம் 177- சபாநாயக்கர்—சபாநாயகர்

,, 178- கட்டியிலுள்ள—கட்சியிலுள்ள

,, 179- வழங்குகிறார்கள்—வணங்குகிறார்கள்

,, 183- ஜி. ஜே. சாலோமோன் நாடார் B.A.B.L.

,, 187- கேதாவரி—கோதாவரி

,, 188- சாடவர்மன்—சடாவர்மன்
கி. பி. 460-ல்—கி. பி. 60-ல்

,, 189- கி. பி. 460-ல் சிவா தமிழர்கள்-
கி. பி. 460-ல் தமிழர்கள்

,, 189- கி. பி. 522-ல் சிவா என்னும் மன்னன் ஆட்சியில் திரும்ப இலம்பகாறு குலத்தவர் ஆட்சியைக் கைப்பற்றினர்.

,, 189- ஈழ நாகர்—ஈழ நாகா

,, 189- அவர்—அவர்கள்

,, 191- வன்னியருக்கும்—வன்னியருக்கு

,, 192- governaining—governing.

சான்றுர்கள் - பாண்டிய குலத்தவர், சிங்கக் கொடியுடையவர், வட மதுரைக்கு உரித்துடையவர் என கன்னடத்தில், பாரகூருவிலுள்ள (கொற்கை) பஞ்சலிங்கேஸ்வர ஆலயத்தில் காணப்படும் கல் வெட்டு காலம் கி. பி. 1113-1155. அரசன்: பாண்டிய சக்கரவர்த்தி புஜபல கவி-ஆளுந பண்டாரதேவன்:

★ ★ ★

Samadhigata panca-mahasabda, mahaman dalesvaram—Uttara—Madhura—Adhisvaram, Patti-Pombuchchapuravar-Adhisvaram maha-ugra—vamsa—lalamam Padmavati—Deviya lu (o) bdhavara prasada-Sadhitam vipula-tula purusa-hiranya-danidana Vanara-dhvajamam mrgaraja-lancchanam· Kesavaritya, Sakala-jana-Stutya niti Sustra-ni (ratarum) Kanduka-acary manda radhairynum (Srimu) rtti-Narayana Kirti-parayanam Srimatu Visvanatha-devara dibya Sri pada—padma—Aradhyya karum parabala Sadhakarum-appa Pailana-baliya Vira Jegadevarasaru "Srimatu" Patta mahadeviyarum Pandya devarasarum...............

---

இந்த நூல் முருங்கன் கற்கடந்தகுளம் கிராம முன்னேற்ற சங்கத்தினுல் மன்னுர் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.